**கமுக்கம்**

# நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையம்

**22.05.2018ஆம் நாள் தூத்துக்குடியில் நடந்த துப்பாக்கி சூட்டின் விளைவாக இறப்பு, காயங்கள் ஏற்பட்டதற்கான காரணங்கள், சூழ்நிலைகள் குறித்தும் சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்குலைவுகள் காரணமாக பொது சொத்துக்கள், தனியார் சொத்துக்கள் ஆகியவற்றிற்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் உள்ளிட்ட பிந்தைய நிகழ்வுகள் குறித்து விசாரிப்பதற்கு அமைக்கப்பட்டது.**

இறுதி அறிக்கை

பகுதி - II

## நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன்

# நீதியரசர் திருமதி. அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையம்

# இறுதி அறிக்கை

**பகுதி – II**

## 1. துயரச் சம்பவம் - காவல் துறையின் செயல்பாடின்மை - பேரிடர் விளைவுகள்

### அ) நிகழ்வு I - பனிமயமாதா ஆலயம் :

பனிமயமாதா ஆலயத்தில் (Our Lady of Snow Church) ஒன்று கூடுவதே போராட்டக்காரர்களின் திட்டமாக இருந்தது. இதற்காக மக்கள் கூட்டம் கூட்டமாக திரேஸ்புரத்திலிருந்தும், சுற்றியுள்ள பகுதிகளிலிருந்தும் புறப்பட்டு ஆலயத்திற்கு வரத் தொடங்கினார்கள். குறிப்பாகப் பனிமயமாதா ஆலய பகுதியில் கு.வி.மு.ச.பிரிவு 144-ன் கீழ் தடை உத்தரவு செயல்பாட்டில் இருந்ததால், பனிமயமாதா ஆலயத்தில் ஒருவரும் கூடாமல் இருப்பதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்திருக்க வேண்டும். கூட்டம் சில நூறுகளுக்குக் குறைவாக இருந்த போதே தேவைப்பட்டால் போராட்டக்காரர்களைக் கைது செய்து இருக்க வேண்டும். இந்தத் தருணத்தில் திரேஸ்புரத்தில் தடை உத்தரவு இல்லாதபோது அங்கு முக்கியமான நிகழ்வுகள் அதிகரிக்கத்தான் செய்யும். காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபன் (எ.த.சா.214) ஆணையத்தின் முன்பாக அளித்த சாட்சியத்தில் 22.05.2018-ஆம் நாள் காலை 9.30 மணியளவில் மக்கள் திரேஸ்புரம் சந்திப்பில் கூடி 15 முதல் 20 வேன்களில் ஏறினார்கள். அவர்களில் 50 இளைஞர்கள் பனிமயமாதா ஆலயத்தில் கூடுவதை நோக்கமாகக் கொண்டு, வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள். அவர்களில் சிலர் திரேஸ்புரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் அடையாளம் தெரியாதவர்கள் 'ஸ்டெர்லைட்டை மூடு" (Ban Sterlite) என்று அச்சிடப்பட்ட 'டி' சட்டைகளை அணிந்திருந்தனர். கூட்டத்தினருக்கு ரீகன்

# ROUTE OF MOB



DAVIS PURAM
Sankaraperi
சங்கரபேரி
Kathiresan Kovil
Pulippanjankulam
புலிப்பாஞ்சான்குளம்
Indian Overseas Bank
MAPPILAIURANI
T.SAVERIARPURAM
JOTHI NAGAR
Therku Veerapandiapuram
தெற்கு வீரபாண்டியபுரம்
SIPCOT INDUSTRIAL COMPLEX
Gandhi Irwin Salt Manufacturer
THRASPURAM
திரேஸ்புரம்
Pandaramoatti
Sri Sanneswaran Temple
VV Titanium Pigments Private Limited
MILAVITTAN
Melavittan Urban Co Operative Credit Society
TNEB SubStation
Velankanni Church
MUTHAMMAL COLONY
YMS NAGAR SOUTH
THRESPURAM
Sipcot Police Station
KVK NAGAR
KVK நகர்
PEARL CITY
MADATHUR
MILLERPURAM
மில்லர்புரம்
CHIDAMBARA NAGAR
New Cleopatra 4k 3D Theatre
The Shrine Basilica Of Our Lady Of The Snow
Shirdi Sai Baba Temple, Tuticorin
MURUGESAN NAGAR
முருகேசன் நகர்
Sri Bathirakaliamman Temple
Ayyanadaippu
அய்யனடைப்பு
Ground
Sinnamani Ummamai Orphanage
LEVINGIPURAM
KAILASA PURAM
Tuticorin District Collector Office
CALDWELL COLONY
THIRU VK NAGAR
Kalankarai
PERIYANAYAGAPURAM
Sathya Park & Resorts
Google
Map data ©2018 Google India Terms

என்ற ஒரு இளைஞர் அந்த 'டி" சட்டைகளை விநியோகித்தார். மேலும் அவர் கூட்டத்தினர் முழுவதையும் பனிமயமாதா கோவிலை நோக்கிச் செல்லுமாறு திரும்பத் திரும்பக் கூறினார். பின்னர் அவர் பனிமயமாதா கோவிலில் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது காரணமாக அவர்களது திட்டத்தின்படி தொடர்ந்து செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தினார். வேனில் வந்த கூட்டத்தினர் வேனை விட்டு இறங்கி, அவர் கூறியதைப் பொருட்படுத்தாமலும், அவரது எச்சரிக்கையை மீறியும், யாதொரு அச்சமுமின்றிப் பனிமயமாதா கோவிலை நோக்கி நடந்தே சென்றனர். அதன் பிறகு பனிமயமாதா கோவில் அருகில் உள்ள இந்திரா காந்தி சிலை அருகில் ஒரு தடுப்பு வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அதனால் பயனில்லை. குறிப்பிட வேண்டியது என்னவெனில், தடை உத்தரவு பிறப்பிக்கப்படாத திரேஸ்புரம் பகுதியிலிருந்து, தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பனிமயமாதா கோவிலுக்குக் கூட்டத்தினர் சென்று விடுவார்கள் என்று அச்சப்பட்ட தூத்துக்குடி வடக்குக் காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபன் (எ.த.சா.214) உயரலுவலர்களுடன் கலந்தாலோசித்து திரேஸ்புரத்திலேயே அந்தக் கூட்டத்தினரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும், அல்லது மாற்றாக, கூட்டம் இந்திரா காந்தி சிலை அருகே குறைவாக இருந்தபோது மறுபடியும் உயர் அலுவலர்களுடன் கலந்தாலோசித்து முன்னெச்சரிக்கை கைது மேற்கொண்டிருக்கலாம். திரேஸ்புரத்தில் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் இருக்கும் காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபனை (எ.த.சா.214), காவல் இணைக் கண்காணிப்பாளர் திரு.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242), தி.மு.க.வைச் சேர்ந்த 200 முதல்



PANNIMAYA MADHA CHURCH

300 நபர்கள், அப்போதைய சட்டமன்ற உறுப்பினரான திருமதி.கீதா ஜீவன் (ம.சா.383) தலைமையில் 22.05.2018-ஆம் நாள் காலை 10.00 மணிக்குப் புறப்படவிருப்பதாகவும், அதனால் 3-ஆம் கேட் நுழைவாயிலுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தியதாலும், நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சிகளைக் கைவிட்டார். அப்போதைய போக்குவரத்துச் சார் ஆய்வாளர் திரு.மயிலேறும் பெருமாள் (எ.த.சா.84) சாட்சியத்தில் காலை 9.00 மணிக்கும் 9.30 மணிக்கும் இடையே திரேஸ்புரத்திலிருந்து மக்கள் பனிமயமாதா கோவிலுக்குச் செல்ல தொடங்கினார்கள் என்றும்,அவரும் பாதுகாப்புக்காக கூடவே வந்தார் என்றும், அவர்கள் பனிமயமாதா கோவிலைச் சென்றடைந்தார்கள் என்றும் கூறியுள்ளார். காவலர் திரு.A.கருப்பையாவும், (எ.த.சா.23) சாட்சியத்தில் திரேஸ்புரத்திலிருந்து சுமார் 500 நபர்கள், பனிமயமாதா கோவிலுக்குச் சென்று கொண்டிருந்த கூட்டத்தில் சேர்ந்து கொண்டார்கள் என்றும், காவலர்களும் கூட்டத்தினருடன் அவ்வளவு தொலைவிற்கு நடந்தே சென்றார்கள் என்றும் கூறியுள்ளார். இவ்வாறான நிலைமை காரணமாக காவல் துறையினரின் தடை எதுவுமின்றி திரேஸ்புரத்திலிருந்து பனிமயமாதா கோவிலுக்கு கூட்டம் வந்து சேர்ந்தது. காவல் துறையினர் திரேஸ்புரத்தில் அல்லது குறைந்தபட்சம் இந்திராகாந்தி சிலை அருகில் கூட்டத்தினரைக் கைது செய்திருந்தால், திரேஸ்புரத்திலிருந்து சென்று பனிமயமாதா கோவிலில் பெரிய அளவிற்குக் கூட்டம் கூடியிருக்காது. இது காவல்துறையின் வெளிப்படையான காலதாமதம் மற்றும் செயலின்மை ஆகும். திரேஸ்புரத்திலோ அல்லது இந்திராகாந்தி சிலை அருகிலோ கைது செய்திருந்தால்



PANNIMAYA MADHA CHURCH

நிச்சயமாக, பனிமயமாதா கோவிலிலும் இதர இடங்களிலும் கூடும் மனநிலைக்குக் கொண்டு செல்லாமல், போராட்டக்காரர்கள், அவர்களது நடவடிக்கையைத் தவிர்ப்பதற்கான எச்சரிக்கையாக, கலங்கரை விளக்காக உதவி புரிந்திருக்கும்.

பனிமயமாதா கோவில் பகுதிக்கு சிறப்பு நிர்வாக நடுவராகப் பணியமர்த்தப்பட்ட திரு.சேகர் (எ.த.சா.182) அவரது சாட்சியத்தில், பனிமயமாதா கோவிலில் 22.05.2018-ஆம் நாள் காலை 9.00 மணியளவில் 200 முதல் 250 நபர்கள் மட்டுமே கூடினார்கள் என்று கூறியுள்ளார். தூத்துக்குடி இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) வான் செய்தி (VHF Information) மூலம் கூட்டம் 2000 முதல் 3000 வரை உள்ளது என்ற தகவல் கிடைக்கப்பெற்றதும், அவர் பனிமயமாதா கோவிலை அடைந்த போது, திரு.சேகர் (எ.த.சா.182) கூட்டம் வெறும் 200 முதல் 250 தான் தொடக்கத்தில் இருந்தது என்று அப்போதும் கூறியுள்ளார். காவல் துறையினர் தடை உத்தரவுகளை முழுமையாகச் செயல்படுத்தி கருப்பு நிற 'டி' சட்டைகள் அணிந்த தன்னார்வலர்களை (Volunteers) பனிமயமாதா கோவிலில் கைது செய்திருந்தால் காவல் துறையின் நடவடிக்கை மக்களுக்குப் போதிய எச்சரிக்கையை அளிப்பதாக அமைந்திருக்கும். தடை உத்தரவை மதிக்காமல் மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று இது ஒரு கடுமையான எச்சரிக்கையாகவும் அமைந்திருக்கும். தடை உத்தரவுகளைப் பொருட்படுத்தாமல் மக்கள் கூடுவதை காவல் துறையும், மாவட்ட நிர்வாகமும் அனுமதித்திருக்கிறது. அவர்கள்



PANNIMAYA MADHA CHURCH

அப்பொழுதே சூழ்நிலையைக் கடுமையாகக் கையாண்டிருந்தால், மக்கள் பலமடங்காகக் கூடியதைத் தவிர்த்திருக்கலாம். இது காவல் துறையின் செயலின்மைக்குச் சிறப்பான உதாரணமாக உள்ளது. தடை உத்தரவு இல்லாத திரேஸ்புரத்திலிருந்து பனிமயமாதா கோவிலை நோக்கி மக்கள் புறப்படத் தொடங்கினார்கள். ஆனால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வடமேற்கில் உள்ள குமரெட்டியாபுரம், தடை உத்தரவு உள்ள பகுதியாகும். அங்கிருந்தும் ஒரு பகுதி மக்கள் பனிமயமாதா கோவிலை நோக்கிச் சென்றார்கள். இவ்வாறு மக்கள் தடை உத்தரவுகள் இருந்தும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி பனிமயமாதா கோவில் பாதை வழியாகச் செல்லத் தொடங்கினார்கள்.

தெற்குவீரபாண்டியபுரத்தில் வசிக்கும் திரு.ராஜ்குமார் (ம.சா.122) அவரது சாட்சியத்தில் 22.05.2018-ஆம் நாள் காலை 9.00-9.30 மணியளவில் போராட்டக்காரர்கள் எஸ்.ஏ.வி.பள்ளி மைதானத்தில் கூடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், காவல் துறையினர் சொன்னது அவருக்குக் கேட்டது என்றும் கூறியுள்ளார். அவர் மேலும் சாட்சியத்தில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குப் பல நினைவூட்டுகள் அனுப்பியும் பயனில்லை. அதனால் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து மனு கொடுக்க முடிவு செய்யப்பட்டது என்று கூறியுள்ளார். அவர் மேலும் அவரது சாட்சியத்தில் குமரெட்டியாபுரத்தைச் சேர்ந்த 60 முதல் 80 நபர்கள், காவல்துறையினரின் பாதுகாப்புடன் மாவட்ட




PANNIMAYA MADHA CHURCH

ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி நடந்தே சென்றார்கள். மீளவிட்டான் இருப்புப் பாதையைத் தாண்டிச் செல்லும்போது அவர்களைக் காவல் துறையினர் தடுத்து நிறுத்தி, காவல் பேருந்து ஒன்றில் தூத்துக்குடி தெற்குக் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லும் வழியில் 3 பெண்கள் மயக்கமடைந்து விட்டார்கள். அவர்களை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதாகக் கூறிப் பேருந்திலிருந்து இறங்கி அவர்களுக்கு முதலுதவி செய்த பிறகு, அவர்களுக்கு நினைவு திரும்பியவுடனேயே அந்தப் பெண்களை அங்கேயே விட்டுவிட்டு, மீதமுள்ளவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நடந்தே சென்றார்கள். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை அடைவதற்கு முன்பே எப்.சி.ஐ.ரவுண்டானா அருகே அவர்களைத் தாண்டி பாதிக்கப்பட்டவர்கள் / காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மற்றும் இரு சக்கர வாகனங்கள் மூலம் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லும் ஊர்வலத்தில் கலந்துகொள்ள முயன்ற குமரெட்டியாபுரத்தைச் சேர்ந்த போராட்டக்காரர்களை ஒரு காவல் பேருந்தில் தூத்துக்குடி தெற்குக் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றார்கள். உண்மையில் இது சம்பந்தமான காவல் துறையினரின் செயல் எதிர்மறையாகத் தோன்றுகிறது.

எ.த.சா 164 திரு.தனுஷ்கோடி மற்றும் எ.த.சா.94 திரு.முகம்மது முஸ்தபா, முதல் நிலைக்காவலர்கள் ஆவார்கள். அவர்களுக்கு மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திலிருந்து 400 மீட்டர் தூரத்தில் உள்ள (தூத்துக்குடி-திருநெல்வேலி நெடுஞ்சாலையில்) மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் முன்பாக




PANNIMAYA MADHA CHURCH

பாதுகாப்புப் பணி ஒதுக்கப்பட்டிருந்தது. அவர்கள் இருவரும் ஒரே மாதிரி சாட்சியம் கூறியுள்ளார்கள். அவர்கள் நண்பகல் 12.00 மணியளவில் மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் மேற்குப் பக்கத்திலிருந்து 2000 நபர்கள் இருந்தார்கள் என்றும், தொடக்கத்தில் அமைதியாக இருந்தார்கள் என்றும் கூறினார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பின்புறமிருந்து புகை வரத் தொடங்கியதால் குழப்பமானது. மேலும் அவர்கள் சாட்சியத்தில், அந்தப் பகுதிக்குப் பொறுப்பான காவல் ஆய்வாளர் திருமதி.வேளாங்கன்னி உதயரேகா என்பவர், தடை உத்தரவுகள் இருப்பதால் ஊர்வலம் செல்ல அனுமதிக்க முடியாது எனப் போராட்டக்காரர்களிடம் கூறினார் என்றும், ஆனால் அவர்கள் அதனை மீறிச்செல்லத் தொடங்கினார்கள் என்றும், கற்களை வீசத் தொடங்கினார்கள் என்றும், அந்தக் காவல் ஆய்வாளர், பெண் காவலர்களை அவரது ஜீப்பில் ஏற்றிக்கொண்டும், ஆண் காவலர்களை அந்த இடத்தை விட்டுத் தப்பி ஓடிச்சென்று பாதுகாப்பாக இருக்குமாறு கூறினார் என்றும், எ.த.கா.94 திரு.முகம்மது முஸ்தபா மற்றும் எ.த.கா.164 திரு.தனுஷ்கோடி உட்பட அனைத்துக் காவலர்களும் ஓடிச்சென்று, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பின்புறத்தில் உள்ள ஒரு கட்டிடத்தில் அடைக்கலம் புகுந்தார்கள் என்றும் கூறியுள்ளார்.

ஆ) <u>நிகழ்வு II - பண்டாரம்பட்டி மற்றும் மடத்தூர்</u>

போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச் சென்ற மற்ற இரண்டு இடங்கள் பண்டாரம்பட்டி மற்றும் மடத்தூர் ஆகியவையாகும். பாதுகாப்புத் திட்டத்தின்படி (Bandobust Scheme)




DECEASED SNOWLIN IN
PANNIMAYA MADHA CHURCH

திருநெல்வேலி காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் திரு.அருண் சக்திகுமார், இ.கா.ப. (எ.த.சா.240), மற்றும் திருநெல்வேலி மாநகர துணை ஆணையர் திரு.G.சுகுணாசிங், இ.கா.ப. (எ.த.சா.234) ஸ்டெர்லைட் ஆலைக்கு பாதுகாப்பு பொறுப்பில் இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு தெரிந்த காரணங்களுக்காக திருநெல்வேலி காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் திரு.அருண் சக்திக் குமார், இ.கா.ப. (எ.த.சா.240) பண்டாரம்பட்டிக்கு பாதுகாப்பு பொறுப்பை ஏற்றுக்கொண்டார், திருநெல்வேலி மாநகர் துணை ஆணையர் திரு.G.சுகுணாசிங், இ.கா.ப. (எ.த.சா.234) ஸ்டெர்லைட் ஆலையில் பொறுப்பில் இருந்தார். தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரனுக்கு (எ.த.சா.248), பண்டாரம்பட்டி பகுதியில் பணியில் உள்ள காவல் அலுவலர்களிடமிருந்து வான் செய்தி (VHF Message) மூலம் பண்டாரம்பட்டி மற்றும் சுற்றி உள்ள குக்கிராமங்களிலிருந்தும் போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடப் போவதாக தகவல் கிடைத்தது. திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) மேலும் சாட்சியத்தில், அதிக எண்ணிக்கையிலான போராட்டக்காரர்கள் மடத்தூர் வளைவு (Madathur Arch) வழியாகச் சென்று கொண்டிருந்ததாகவும், பண்டாரம்பட்டி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த போராட்ட அமைப்பாளர்கள் சென்று கொண்டிருந்ததால், பிரச்சனையின் அளவை உணர்ந்து, அவர் அவரது அதிரடிப்படையுடன் (Striking Force) மடத்தூர் வளைவிற்கு விரைந்ததாகவும் கூறியுள்ளார். மேலும் அவரது சாட்சியத்தில் காவல் சார் ஆய்வாளர் திரு.ரென்னிஸ் (எ.த.சா.198) மற்றும் 5 காவலர்களைக் கொண்டு ஒரு



PANNIMAYA MADHA CHURCH

சிறப்புக் குழுவை ஏற்படுத்தினார் என்றும், அவர்கள் அப்போது புதுக்கோட்டையில் இருந்ததாகவும், அவர்களை மடத்தூருக்கு வரச்சொன்னதாகவும் கூறியுள்ளார். தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.மகேந்திரன் (எ.த.சா.248) மேலும் சாட்சியத்தில், அவர் அதிரடிப்படையுடன் ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குப் போராட்டக்காரர்கள் வந்து கொண்டிருந்த திசைக்கு எதிர்த் திசையில் நடந்து சென்றதாகவும், அவர்களை மேற்கொண்டு போகவிடாமல் நிறுத்துவதற்கு அவரால் இயன்ற முயற்சிகளை எடுத்ததாகவும், போராட்டக்காரர்கள் ஆவேசமாகவும், பித்து பிடித்தது போல் கத்தலும், அழுகையுமாக இருந்ததாகவும், அவ்வப்போது வெடிமருந்து பாட்டில்களையும், செருப்புகளையும் காவல் துறையினர் மீது வீசினார்கள் என்றும், அவர்களின் ஆவேசத்தைத் தணிக்கவும், சமாதானப்படுத்தவும், முயன்றார் என்றும், போராட்டக்காரர்களில் பெண்கள் அதிகமாக இருந்தார்கள் என்றும், மேலும் காலை 10.00 மணியளவில் போராட்டக்காரர்கள் மடத்தூர் வளைவை நெருங்கி விட்டார்கள் என்றும், அவர்களை மேற்கொண்டு போகவிடாமல் செய்வதற்காக காவல் துறையினர் தடுப்புகள் அமைத்தார்கள் என்றும் கூறியுள்ளார். அவர் போராட்டக்காரர்களில் வழக்கறிஞர் திரு.வாஞ்சிநாதன் (ம.சா.357), வழக்கறிஞர் திரு.அரிராகவன் (ம.சா.381) மற்றும் திருமதி.வசந்தி ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். போராட்டக்காரர்கள் காலை 11.15 மணி வரை அங்கு இருந்தார்கள். அவருடைய சாட்சியத்திலிருந்து, அவர் திரு.சென்னிஸ்



PANDARAMPATTI

(எ.த.சா.198) மற்றும் அவரது குழுவினரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லுமாறும், தான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வந்து சேர்ந்து கொள்வதாகவும், வி.வி.டி.சிக்னலில் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் பற்றி டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) மற்றும் இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) ஆகியோரிடமிருந்து தகவல் கிடைக்கப் பெற்றதாகவும், வி.வி.டி.சிக்னல் பகுதியில் காவல் துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு போராட்டக்காரர்களின் மீது தடியடி நடத்தப்பட்டதாலும் போராட்டக்காரர்கள் கற்களை எறிந்ததால்தான் எப்.சி.ஐ. ரவுண்டானாவிற்குச் சென்றதாகவும் கூறியுள்ளது தெரிய வருகிறது.

ஆணையத்தின் கருத்து யாதெனில், தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) உண்மையில் போராட்டக்காரர்களை கட்டுப்படுத்துவதற்குத் தன்னால் இயன்றவரை முயற்சித்து ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார். ஆனால் பின்னர் அப்படியே விட்டுவிட்டு உயர அலுவலர்கள் அல்லது தன்னுடன் பணிபுரிபவர் களிடமிருந்து யாதொரு ஆலோசனையும், பெறாமல், எப்.சி.ஐ.ரவுண்டானாவிற்குச் சென்றுவிட்டார். தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளரின் (எ.த.சா.248) மேற்சொன்ன செயலின் விளைவாக, மடத்தூர் வளைவில் இருந்த போராட்டக்காரர்கள் பின்வாங்கினாலும், மாற்றுப் பாதைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முற்றுகை போராட்டத்திற்குச் சென்று விட்டனர். அவர் மடத்தூரிலேயே இருந்து



PANDARAMPATTI

போராட்டக்காரர்களைத் திருப்பி அனுப்புகிற அவரது முயற்சியைத் தொடர்ந்து செய்திருக்க வேண்டும். ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டபோது தெரிய வருவது என்னவென்றால், அவரும் எச்.சி.ஐ.ரவுண்டானாவுக்கு ஏற்கனவே வந்துவிட்ட திருநெல்வேலி காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் திரு.அருண்சக்தி குமாரும், இ.கா.ப. (எ.த.சா.240) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துப்பாக்கிச்சூடு சம்பவம் நடைபெற்று வெகுநேரம் கழித்து பிற்பகல் 1.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லும் பாதையை சுற்றிப்பார்த்ததைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை.

இந்தத் தருணத்தில் திருநெல்வேலி காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் திரு.அருண் சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240) -இன் பொறுப்பில் இருந்த பண்டாரம்பட்டியில் நிகழ்ந்த சில உண்மைகளை முன்னிலைப்படுத்த வேண்டும். அவரது சாட்சியத்தின்படி அவர் பண்டாரம்பட்டி கிராமத்தை 22.05.2018-ஆம் நாள் காலை 8.30 மணியளவில் சென்றடைந்தபோது 600 போராட்டக்காரர்கள் கூடியிருந்ததாகவும், அவர் போராட்டக்காரர்களிடம் மெகா போன் மூலம் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று கூறியதாகவும், அதனால் கூட்டத்தினர் கலைந்து செல்ல வேண்டும் என்றும், அறிவுரைகளை மீறி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச் சென்றால் அவர்களைக் காவல் துறையினர் கைது செய்ய நேரிடும் என்றும், எச்சரித்துள்ளார். அவர் மேலும் சாட்சியத்தில், இரண்டு அல்லது மூன்று இடங்களில் காவல்துறையினர் மறித்தும் அவர்கள் அதை மீறி சென்றார்கள் என்றும், ஆனால் அவர்கள்



**MADATHUR JUNCTION**

எச்சரிக்கப்பட்டார்களே தவிர கைது செய்யப்படவில்லை. தொடக்கத்தில் 600 போராட்டக்காரர்களைக் கொண்ட குறைந்த அளவிலான கூட்டமே இருந்தது. போராட்ட ஒருங்கிணைப்பாளர்களை கைது செய்யும் அறிவார்ந்த முயற்சியை அப்பொழுதே கையாண்டிருந்தால் கூட்டம் பெரிதானதும் கைது மேற்கொள்ளும் சிரமத்தை எதிர் கொண்டிருக்காமல் வேலை எளிதாகியிருக்கும். இந்த அணுகுமுறை மோசமான சூழ்நிலையைத் தடுப்பதில் தீர்க்கமான விளைவாக இருந்திருக்கும் எனத் தெரிவித்தார்.

பனிமயமாதா கோவிலில் ஏற்பட்ட சில நிகழ்வுகள் பற்றி இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (அ.த.சா.242) கூறியுள்ளார். அவர் போராட்டக்காரர்களிடம் தடை உத்தரவு காரணமாக மேற்கொண்டு செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார். அவரது வேண்டுகோளைப் போராட்டக்காரர்கள் அலட்சியம் செய்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்றடைவதற்காக, பனிமயமாதா கோவிலின் பின்புறம் உள்ள பாதை வழியாகவும், சிறிய தெருக்கள் வழியாகவும், சந்துகள் வழியாகவும், சென்றுள்ளார்கள். அவர்கள் மேற்கொண்டு தொடர்ந்து செல்வதைத் தடுப்பதற்காக, அவர்களை முந்திச் சென்று தீயணைப்பு நிலையம் அருகில் தடுப்புகளை வைத்துள்ளார். போராட்டக்காரர்கள் அந்தத் தடுப்புகளையும், காவல் பணியாளர்களையும் தள்ளி விட்டுள்ளனர். போராட்டக்காரர்கள் 3000 பேர் இருந்தார்கள். அவர்களில் பாதிக்குமேல் பெண்கள் ஆக இருந்தனர். அவர் மேலும் சாட்சியத்தில், போராட்டக்காரர்கள் அதிக அளவிலும், காவல் பணியாளர்கள் 5



MADATHUR JUNCTION

பேர் மட்டுமே இருந்ததாலும், கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றும் காவல் துறையினர் தொடர்ந்து சிறிய அளவில் இருந்ததால், அவர்களை மேற்கொண்டு தொடர்ந்து செல்வதைத் தடுக்க முடியவில்லை என்றும் கூறியுள்ளார். திருநெல்வேலி சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) சாட்சியத்திலிருந்து அறிய முடிவது யாதெனில் அவரிடம் இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் போதிய காவலர்கள் அப்போது தன்னிடம் இல்லாததால் போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச் செல்வதைத் தடுக்க இயலவில்லை என்று தெரிவித்துள்ளார்.மேலும் அவர் சாட்சியத்தில் இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242), அவரிடம் தீயணைப்பு நிலையம் அருகில், போராட்டக்காரர்களை மேற்கொண்டு செல்லவிடாமல் தடுத்த முயற்சிகள் பயனற்றுப் போய்விட்டன என்று கூறியுள்ளார். இந்தக் கட்டத்தில் திருநெல்வேலிச் சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246), இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினத்திடம், இ.கா.ப. (எ.த.சா.242) வி.வி.டி.சிக்னலுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். திருநெல்வேலி சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) அவரும் அதிரடிப்படையுடன் வி.வி.டி.சிக்னலுக்குச் சென்றுள்ளார் பனிமயமாதா கோவிலிலும் வி.வி.டி.சிக்னலிலும் நடந்த சம்பவம் சம்பந்தமாக



MADATHUR

# PLACES WHERE POLICE TRIED TO STOP THE MOB




| S.NO | STOPPED PLACES |
|---|---|
| 1. | SNOWS CHURCH |
| 2. | ST.PETERS STRIET |
| 3. | FIRE SERVICE JN |
| 4. | VVD JN |
| 5. | 3rd MILE |
| 6. | FCI ROUNDANA |
| 7. | COLLECTORATE ARCH |
| 8. | COLLECTORATE |

ம.சா.61 பினோலின் பிரியங்கா என்பவர், அவரது சாட்சியத்தில் முன்வைத்தது எல்லோருக்கும் தெரியப்படுத்தியுள்ளார். அவரது சாட்சியத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லும் வழியில், பனிமயமாதா கோவிலுக்குப் பின்புறத்தில் உள்ள சிலுவைக் கோவில், தீயணைப்பு நிலையம், புனித அந்தோணியார் ஆலயம் மற்றும் வி.வி.டி.சிக்னல் ஆகிய இடங்களில் அவர்களைக் காவல் துறையினர் தடுத்ததாகக் கூறியுள்ளார். அவரது சாட்சியத்தை மேம்போக்காக வாசித்துப் பார்க்கும்போது பெண்கள், பெரும்பாலும் இளம்பெண்கள், வன்முறையில் ஈடுபட வேண்டும் என்று உத்தேசிக்கவில்லை, தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்த மட்டுமே விரும்பினார்கள் என்பதைக் காட்டுகிறது. வழியில் அவர்கள் திறந்திருந்த ஒரு மருந்துக் கடையைத் தாண்டி வந்தார்கள். அப்போது சில இளைஞர்கள் மற்ற கடைகளைப் போல அதையும் மூடும்படிக் கூறியுள்ளார்கள். ஆனால் ம.சா.61 பினோலின் பிரியங்கா, அவருடன் வந்திருந்த அவரது தந்தை, இறந்துபோன ஸ்னோலின் மற்றும் ம.சா.15 இன்பென்டா ஆகியோர் அந்த இளைஞர்களிடம் மருந்துக் கடையை மூடுமாறு வற்புறுத்த வேண்டாம் என்றும், பொதுமக்களுக்குத் தேவைப்படும் பட்சத்தில் மருந்துக் கடை உதவியாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்கள். ம.சா.15 இன்பென்டா அவரது சாட்சியத்தில் ஏறக்குறைய அதையேதான் அந்தச் சமயம் எல்லோரிடத்திலும் கூறியிருக்கிறார். அவரது சாட்சியத்திலிருந்து, போராட்டக்காரர்கள் ஊர்வலத்தைத் தொடங்கியபோது அவர்கள் மிகவும் சாதாரணமாகப் பேசிக்கொண்டும், கைகளைத் தட்டிக்கொண்டும்

நட்பாகவும் தான் இருந்தார்கள் என்றும், யாரோ ஒருவர் எறிந்த கல் ம.சா.15 இன்பெண்டாவின் தலையில் தாக்கி அவருக்கு வீக்கம் ஏற்பட்டதையடுத்தும் உறுதியுடன் அவர்கள் ஊர்வலம் சென்றார்கள் என்றும் அறிய முடிகிறது.

**இ) நிகழ்வு III - வி.வி.டி.சிக்னல்**

வி.வி.டி.சிக்னல் நிகழ்வுகள் சம்பந்தமாக, திருநெல்வேலி சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) மற்றும் இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) ஆகியோரின் சாட்சியங்களைக் கொஞ்சம் விரிவாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியுள்ளது. இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) திருநெல்வேலிச் சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) கூறிய அறிவுரைப்படி தீயணைப்பு நிலையத்திலிருந்து வி.வி.டி.சிக்னலுக்கு வந்து, அவருடன் சேர்ந்து கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி வந்த கூட்டத்தைத் தடுக்க எடுத்த முயற்சிகள் கைவிடப்பட்டது நினைவிருக்கலாம். வி.வி.டி.சிக்னலில் திருநெல்வேலிச் சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) அவரது 200 காவலர்கள் கொண்ட குழுவுடன் ஏற்கனவே அங்கு இருந்தார். சாலையின் குறுக்கே தடுப்புகள் அமைக்கப்பட்டு, போராட்டக்காரர்கள் வி.வி.டி.சிக்னலுக்கு வந்து விடக்கூடாது என்பதற்காக


VVD
THOOTHUKUDI DISTRICT POLICE
STOP
THOOTHUKUDI CITY POLICE

VVD SIGNAL

தடுப்புகளின் அருகில் காவலர்கள் இருந்தார்கள். தடுப்புகளுக்குச் சற்றுத் தொலைவில், திருநெல்வேலிச் சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) மற்றும் இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242), சிறப்பு நிர்வாக நடுவர்கள் திரு.சேகர் (எ.த.சா.182) மற்றும் திரு.இசக்கிராஜ் (எ.த.சா.192) ஆகியோர் எழுச்சிகரமான போராட்டக்காரர்களிடம், தடை உத்தரவு செயல்பாட்டில் இருக்கிறது என்றும், எஸ்.ஏ.வி.பள்ளி மைதானத்தில் தாராளமாகக் கூடலாம் என்றும் கூறினார்கள். போராட்டக்காரர்கள் அவர்கள் வேண்டுகோளைப் பொருட்படுத்தாமல் தடுப்புகளைத் தள்ளி விட்டுவிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கிப் புறப்படத் தொடங்கினார்கள். இந்தக் கட்டத்தில் காவல் துறையினர் போராட்டக்காரர்கள் மீது தடியடி நடத்தினார்கள். போராட்டக்காரர்கள் பின்வாங்கி ஓடினார்கள். காவல் துறையினர் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து செய்திருந்தால் திரும்பி வர முடியாத அளவிற்கு, ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு பின்வாங்கி ஓடிய போராட்டக்காரர்களுக்கும், அவ்வாறான நடவடிக்கை பின்வாங்கிய போராட்டக்காரர்களுக்கு மட்டுமல்லாது, ஊர்வலத்திலிருந்து அதிக தூரத்தில் இருந்தவர்களுக்கும் தடையாக இருந்திருக்கும். போராட்டக்காரர்களை விரட்ட வேண்டியதைச் செய்யாமல் தடுப்புகள் போட்டிருந்த இடத்திற்கே காவல் துறையினர் திரும்பி வந்துள்ளார்கள். அது போராட்டக்காரர்கள் திரும்பி வருவதற்குத் தைரியம் அளித்துள்ளதாக அனுமானிக்க வேண்டியுள்ளது. இந்தச் சூழ்நிலைகளில் ஆயுதம் ஏதுவும்,



DIG IN VVD SIGNAL

வைத்திராத போராட்டக்காரர்களின் மீது தடியடி பயன்படுத்தியதன் விளைவாக அவர்கள் பக்கத்தில் உள்ள சந்துகளிலும், குறுக்குச் சந்துகளிலும் கலைந்து ஓடிக் காவல் துறையினர் மீது கல்வீச்சில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் திருநெல்வேலிச் சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246)-க்கு சாதாரண காயம் ஏற்பட்டது மற்றும் சில காவல்துறைப் பணியாளர்களுக்குக் காயங்கள் ஏற்பட்டன. திருநெல்வேலிச் சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப (எ.த.சா.246) மற்றும் இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) ஆகியோரது முயற்சிகள் வி.வி.டி.சிக்னலில் பலனளிக்கவில்லை. எனவே அவர்கள் எஃப்.சி.ஐ ரவுண்டானாவிற்குச் செல்ல நேர்ந்தது. 200 காவலர்களைக் கொண்ட குழு ஒழுங்கான அமைப்புக் குழுவாக இல்லை. இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) மற்றும் திருநெல்வேலிச் சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப (எ.த.சா.246) ஆகியோரது சாட்சியங்களிலிருந்து வி.வி.டி.சிக்னலில் சூழ்நிலைக் கட்டுப்பாட்டை மீறிச் சென்றுவிட்டது என்பதும், இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) மற்றும் திருநெல்வேலிச் சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) ஆகியோர் வேகமாக வி.வி.டி.சிக்னலில்




DIG LATHI CHARGING IN
VVD SIGNAL

இருந்து எப்.சி.ஐ.ரவுண்டானாவுக்குச் சென்றுவிட்டார்கள் என்பதும், வி.வி.டி.சிக்னலில் பாதுகாப்புப் பணிக்கு ஒதுக்கப்பட்ட காவலர்களுக்கு அறிவுரைகள் எதுவும் வழங்கப்படவில்லை என்பதும், காவலர்களில் பாதிக்கு மேல் பெண் காவலர்களாக இருக்கும்போது, உயிருக்குப் பயந்த நிலையில் குறைந்த எண்ணிக்கையில் உள்ள காவலர்கள் எவ்வாறு தடுக்க இயலும் என்றும், தலைமை நிலை அலுவலர் என்று யாரும் இல்லாதபோது உத்தரவோ, அறிவுரையோ பெறமுடியாத நிலை இருந்துள்ளது என்பதும் தெள்ளத் தெளிவாகிறது.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் (TSP) சேர்ந்த காவலர்கள் திரு.தீபக் சந்துரு (எ.த.சா.57) மற்றும் திரு.மைக்கேல் கிறிஸ்டோபர் (எ.த.சா.58) ஆகியோரின் சாட்சியத்தைப் பரிசீலிக்க வேண்டியது பொருத்தமானதாகும். அவர்கள் இருவருக்கும் வி.வி.டி.சிக்னலில் பாதுகாப்புப் பணி அளிக்கப்பட்டிருந்தது பற்றிக் கூறியுள்ளார்கள். அவர்களது படை அணியில் அவர்களைப் போல 20 நபர்கள் இருந்துள்ளார்கள். அவர்கள் மகளிர் ஆய்வாளர் ஒருவரிடம் அறிக்கை செய்துவிட்டு, காலை 6.00 மணி முதல் அங்கேயே இருந்துள்ளார்கள். அவர்களுக்கு லத்திகள், தலைக்கவசம், மூங்கில் கவசம் மற்றும் உடற்கவசம் வழங்கப்பட்டிருந்தன. ஊர்வலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிப் புறப்பட்டபோது காவல் துறையினர் சாலையின் குறுக்கே தடுப்புகளை வைத்துப் போராட்டக்காரர்களைத் தடுத்துள்ளனர். காவல் துறையினர் வழியை மறிப்பதைப் பார்த்ததும் போராட்டக்காரர்கள் காவல் துறையினர் மீது



VVD SIGNAL

சரமாரியாகக் கற்களை வீசினார்கள் கற்கள் மழையாகப் பொழிந்தன. பலமான தாக்குதலைத் தாக்குப் பிடிக்க முடியாமல் காவலர்கள் பின்வாங்கத் தொடங்கினார்கள். திரு.தீபக் சந்துரு (எ.த.சா.57) மற்றும் திரு.மைக்கேல் கிறிஸ்டோபர் (எ.த.சா.58) உள்ளிட்ட காவலர்கள் பின்வாங்கி 200 மீட்டர் தூரத்திற்குச சென்று ஆக்சிஸ் வங்கியை அடுத்து உள்ள சாலையில் அடைக்கலம் புகுந்துள்ளனர். 60 முதல் 70 காவலர்கள் கால் தெறிக்க ஓடுவதை இவர்கள் இருவரும் பார்த்துள்ளனர். காவலர்களைப் போராட்டக்காரர்கள் கொஞ்ச தூரம் விரட்டினார்கள். அதன்பிறகு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கிச் செல்லும் நடைபயணக் கூட்டத்தில் சேர்ந்து கொண்டார்கள். ஓடிப் பதுங்கியிருந்த காவல் துறையினர் ஆக்சிஸ் வங்கி அருகே பிற்பகல் 1.00 மணி வரை அங்கு இருந்துள்ளனர். அதன் பிறகு தூத்துக்குடி காவல் நிலையத்தை நடந்தே சென்றடைந்தார்கள். இதற்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துயரமான துப்பாக்கிச்சூடு நடந்து முடிந்து 5 அல்லது 6 இறப்புகள் ஏற்பட்டு விட்டன. இந்த இரண்டு சாட்சிகளின் திட்டப்படி, அவசரக்காலத் தற்காலிக நிகழ்வுகளைச் சந்திப்பதற்குக் காவல் துறையின் விரிவான செயல்திட்டம் முழுமையான தோல்வி அடைந்ததைக் காட்டுகிறது. பாதுகாப்பு ஏற்பாட்டில் சரியான திட்டமிடல் இல்லை, தவறான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்கு இருந்த காவலர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கும், அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்கும், குழப்பமான, தேவையான சூழ்நிலையில் தகுந்த உத்தரவுகளும், அறிவுரைகளும் வழங்குவதற்கும், நிகழ்விடத்தில் உயர்



VVD SIGNAL

அலுவலர்கள் யாரும் இல்லாததும் கவனத்திற்குரியது. TSP காவலர்களுக்குப் போதிய, பாதுகாப்புப் பொருட்களான உடற்கவசம், மூங்கில் அல்லது நார்க் கேடயம், லத்திகள், தலைக்கவசம் முதலானவை வழங்கப்பட்டிருந்தும், உயர் அலுவலர்கள் தங்களது பொறுப்பை கைவிட்டுவிட்டு அந்த இடத்தில் இல்லாமல் போனதால், அவர்கள் தடுமாறி பின்வாங்கிச்சென்றனர். காவல் துறையினரின் மன உறுதி வீழ்ந்து போய்விட்டது.

வி.வி.டி.சிக்னலில் பணியாற்றிய மகளிர் காவல் ஆய்வாளர் திருமதி.முத்துலெட்சுமி (எ.த.சா98)ன் சாட்சியம் ஆவணத்தில் இருக்கிறது. அவர் சாட்சியத்தில் 20 காவலர்களுக்கு வி.வி.டி.சிக்னலில் பாதுகாப்புப் பணி ஒதுக்கப்பட்டது, போராட்டக்காரர்கள் கற்கள் வீசியது ஆகிய நிகழ்வுகளைக் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் மகளிர் தலைமைக் காவலர் திருமதி.வள்ளி (எ.த.சா-15)க்கு (2 X 30 செ.மீ அளவில்) ஒரு சிராய்ப்புக் காயம் ஏற்பட்டது என்பதும், அது சாதாரண காயம் என்பதும், தூத்துக்குடி அரசு மருத்துவமனை வழங்கிய விபத்துப் பதிவேட்டின் நகலான ம.சா.ஆ.916லிருந்து தெரிகிறது. விபத்துப் பதிவேட்டிலிருந்து மருத்துவர் பரிசோதனை செய்தபோது அவர் சுய நினைவுடன் இருந்தது தெரிகிறது. அதிலிருந்து திருமதி.வள்ளி (எ.த.சா.15) கல்லால் அடிபட்டு மயக்கமடைந்து விட்டதாகத் தெரிவித்த மகளிர் தலைமைக் காவலர் திருமதி.செல்லம்மாள் (எ.த.சா.114)ன் சாட்சியம் பொய்யானது என்று தெரிகிறது. திருமதி.முத்து லெட்சுமி (எ.த.சா.98) அவரது சாட்சியத்தில் போராட்டக்காரர்கள் ஆக்சிஸ் வங்கிக்கு 150 அடி தொலைவில் பதிவு எண்.TN69



PROTESTERS CHASED BY POLICE IN VVD

G 0616 கொண்ட காவல் டெம்போ வாகனத்தைக் கவிழ்த்ததாகக் கூறியுள்ளார் அவர் மேலும் சாட்சியத்தில், அங்கிருந்த ஒரு காவல் சாவடியையும், இரண்டு தடுப்புகளையும் நொறுக்கி விட்டார்கள் என்று கூறியுள்ளார். கல்லெறிந்ததில் சாதாரண காயம் அடைந்த திருமதி.வள்ளியை (எ.த.சா.15) போலவே, காவல் ஆய்வாளர் திருமதி.ஜூடி (எ.த.சா.97), காவல் ஆய்வாளர் திரு.பால்துரை (எ.த.சா.60) மற்றும் திருமதி.கே.அருமைக்கனி (எ.த.சா.59) ஆகியோரும் சாட்சியம் கூறியுள்ளார்கள்.

வி.வி.டி.சிக்னலில் நிலவிய குழப்பமான சூழ்நிலைக்கு, அங்கு பாதுகாப்புப் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த காவலர்களின் சாட்சியம் குறிப்பிட வேண்டும். குழப்பமான, புரிந்துகொள்ள முடியாத நிலைமை என்னவென்றால், திருநெல்வேலிச் சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி சரட்கர், இ.கா.ப. (எ.த.சா246) மற்றும் தென் மண்டலக் காவல் துறைத் தலைவர் திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப (எ.த.சா.247) மேலும் இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) அவர்களது அறிவார்ந்த சேவைக்குப் பயன்படுத்த வேண்டிய வருண் வாகனங்களையும், வஜ்ரா வாகனங்களையும்; முதல் தடவையாக அதிக எண்ணிக்கையுள்ள போராட்டக்காரர்களைக் கலைப்பதற்கு வி.வி.டி.சிக்னலில் பயன்படுத்தத் தோன்றவில்லை, பனிமயமாதா கோவில், தீயணைப்பு நிலையம் மற்றும் புனித அந்தோணியார் ஆலயம் ஆகிய இடங்களில் காவல் துறையினருக்கு ஏற்பட்ட அனுபவம் ஒரு பாடமாக இருந்திருக்க வேண்டும். காவல் துறையினர்



VVD SIGNAL

வி.வி.டி.சிக்னலில் பெரிய கூட்டத்தினரை, குறிப்பாக, வஜ்ரா வாகனங்கள் மற்றும் வருண் வாகனங்கள் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் ஆகியவற்றை நிறுத்தி, வருண் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் மூலம் தண்ணீரை பீய்ச்சியடித்து கூட்டத்தை கலைத்தும் நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும். அதன் பின்னர் கூட்டத்தினரைக் கலைப்பதற்கு, உயிருக்கு ஆபத்தில்லாத ஆயுதங்களைப் பயன்படுத்தி இருக்க வேண்டும். அதன் பின்னர் உயிருக்கு ஆபத்தான காயங்களை ஏற்படுத்தாத துப்பாக்கியைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். ஒரு வருண் வாகனமும், ஒரு வஜ்ரா வாகனமும் ஸ்டெர்லைட் ஆலை முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஒரு வஜ்ரா வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது. அவசியம் தேவை ஏற்பட்டால் இந்த எல்லா வாகனங்களும் சேவைக்குத் தயாராக இருந்தன. வருண் வாகனங்களும், வஜ்ரா வாகனங்களும், தீயணைப்பு வாகனங்களும் மற்றும் ஆம்புலன்ஸ் வாகனங்களும் ஸ்டெர்லைட் ஆலை முன்பாக இருந்ததைக் காவல் ஆய்வாளர் திரு.ஹரிஹரன் (எ.த.சா.213)-ன் சாட்சியம் மற்றும் அவர் மூலமாகக் குறியிட்ட எ.த.சா.ஆ.74 புகைப்படம் காட்டுகின்றன.

வி.வி.டி.சிக்னலில் ஏற்பட்ட நிகழ்வுகளை காவல்துறையைச் சேர்ந்த தலைமைக் காவலர் திரு.ஜெயகுமார் (எ.த.சா.129), முதல்நிலைக் காவலர், திரு.பெரிய நாயகம் (எ.த.சா.130) மற்றும் தலைமைக் காவலர் திரு.முனீஸ்வரன் (எ.த.சா.133) ஆகியோர் வீடியோ எடுத்தனர். இந்த மூவரும் சாட்சியத்தில் காவல்




VVD SIGNAL

துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் ஏற்பட்ட சண்டையைப் பற்றியும், இந்தக் காட்சியை ஒரு சில நிமிடங்கள் மட்டும் வீடியோ எடுத்ததாகவும், பாதுகாப்பு கருதி அவர்கள் பின்வாங்கி ஆக்சிஸ் வங்கி வளாகத்திற்குள் சென்று விட்டதாகவும் கூறியுள்ளார்கள். இந்த மூவரும் வீடியோ பதிவுகள் அடங்கிய மெமரி கார்டை (Memory card) மாவட்டக் காவல் தொழில் நுட்பப் பிரிவில் கொடுத்து விட்டதாகவும் கூறியுள்ளார்கள்.

வி.வி.டி.சிக்னல் நிகழ்வை விவரமாகப் பரிசீலித்ததில், இந்த ஆணையத்தின் கருத்து யாதெனில், பனிமயமாதா கோவிலில் கூடிய போராட்டக்காரர்களை கணக்கிட்டும், ஊர்வலத்தில் கலந்து கொள்ள வி.வி.டி.சிக்னலை நோக்கி வந்து கொண்டிருந்தவர்களை வைத்தும் காவல் துறையின் உயர் அலுவலர்கள் போதிய எண்ணிக்கையில் காவல் ஆளினர்களை ஒன்று திரட்டித் தயாராக வைத்திருக்கத் தவறிவிட்டார்கள். காவல் துறையினர் வஜ்ரா, வருண் வாகனங்கள் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. தீயணைப்பு வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் வரவழைத்திருந்தால் வி.வி.டி.சிக்னலில் ஏற்பட்ட கொந்தளிப்பான சூழ்நிலையைத் திறம்படக் கையாண்டிருக்கலாம். திரும்பவும், குறிப்பிட்டுக் கூற வேண்டியது யாதெனில், தீயணைப்புச் சேவை மற்றும் ஆம்புலன்ஸ் ஆகியவற்றை வி.வி.டி.சிக்னலில் நிலை நிறுத்த, பாதுகாப்புத் திட்டம் குறிப்பிட்டிருந்தாலும், அது காகித அளவிலேயே இருந்தது. சரியான முறையில் குறிப்பிட வேண்டுமென்றால், திருநெல்வேலிச் சரகக் காவல்துறைத்



VVD SIGNAL

துணைத் தலைவர் திரு.கபில்குமார் சி.சாரட்கர், இ.கா.ப. (எ.த.சா.246), இணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) மற்றும் இதரக் காவல் துறை அலுவலர்களும், கல் எறியப்பட்டவுடன் காவல் ஆளிநர்களை விட்டுவிட்டு வி.வி.டி.சிக்னலில் இருந்து திடீரென்று ஓடிவிட்டார்கள். காவல் ஆளிநர்கள் தெளிவற்றவர்களாகவும், படபடப்பாகவும், திசை திருப்பப்பட்டவர்களாகவும், அறிவுரை வழங்க ஆளில்லாமலும் இருந்தார்கள். ஒட்டுமொத்த விளைவு என்னவென்றால் காவல் துறையினரின் செயலின்மை பகிரங்கமாகவும், தெளிவாகத் தெரியும் வகையிலும் இருக்கிறது.

இந்தத் தருணத்தில் லாரி நீர் வழங்கல் சேவை உரிமையாளரும், வி.வி.டி.சிக்னலில் நீரேற்றும் நிலையத்திற்கு அருகே அலுவலகம் வைத்திருக்கும் திரு.பி.பிரவின் (ம.சா.417) மற்றும் சன் மியூசிக் சேனலில் எடிட்டராக இருக்கும் திரு.கெவிஸ்டன் (ம.சா.658) ஆகியோரின் சாட்சியம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த ஆணையத்தில் அவர்கள் ம.சா.470 மற்றும் ம.சா.658 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். ம.சா.470 சாட்சியத்தில் 22.05.2018-ம் நாள் காலை 10.30 மணி முதல் 11.00 மணி வரை அவர் நீரேற்றும் நிலையத்தில் இருந்தது, அவர் கருப்பு சட்டை அணிந்து லாரிகளுக்கு தண்ணீர் எடுக்க டிக்கெட்டுகள் வழங்கும் வேலையில் ஈடுபட்டது நிகழ்வுடன் பொருந்துகிறது. அந்தச் சமயம் போராட்டக்காரர்களுக்கும், காவல் துறையினருக்கும் சண்டை ஏற்பட்டதாகவும், போராட்டக்காரர்கள் கற்களை எறிந்ததாகவும், காவல் துறையினர் தடியடி




VAN TOPPLED IN VVD SIGNAL

நடந்ததாகவும், அதில் அவர் அடிக்கப்பட்டதாகவும், அவர் ஒரு கல்லை எடுத்து காவல்துறை வேன் மீது எறிந்ததாகவும், காவல் துறையின் வேன் சாலையில் தள்ளிவிடப்பட்டு இருந்ததாகவும் கூறியுள்ளார். ம.சா.658 திரு.கெனிஸ்டன் சாட்சியத்தில் காவல் துறையினர் வி.வி.டி.சிக்னலில் தடுப்புகளைத் தாண்டி வந்து போராட்டக்காரர்கள் மீது தடியடி நடத்தினார்கள் என்றும், அதில் தனக்கும் கழுத்தில் காயங்கள் ஏற்பட்டன என்றும் கூறியுள்ளார். மேலும் அவர் சாட்சியத்தில், அவரது செல்போன் கீழே விழுந்து உடைந்து விட்டதாகவும், தடியடியைப் பொறுக்க முடியாமல் அவர் ஒரு குறுக்குச் சந்தில் ஓடி, ஒரு கல்லை அம்மா உணவகத்தின் மீது எறிந்ததாகவும் கூறியுள்ளார். ம.சா.ஆ.1108 வரிசையாகக் குறியீடு செய்யப்பட்டுள்ள புகைப்படங்களில் அவர் தெரிவதை அவர் ஒப்புக்கொள்கிறார். மேலும் அவர் காவல் துறை டெம்போ வேன் ஏற்கனவே சாலையில் தள்ளி விட்டிருப்பதாகக் கூறியுள்ளார். போராட்டக்காரர்கள் காவல் துறையினர் மீது கல் வீசியது சந்தேகம் இல்லாத உண்மைதான் என்றாலும், போராட்டக்காரர்கள் தன்னிச்சையாகவும், தூண்டப்படாதவர்களாகவும், இருந்தார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும். போராட்டக்காரர்களை மேற்கொண்டு செல்லவிடாமல் தொடக்கத்தில் தடுத்ததும், போராட்டக்காரர்கள் மீது காவல்துறையினர் வெறித்தனமாகத் தாக்கியதும் காரணம் ஆகும். போராட்டக்காரர்களின் நோக்கம் காவல் துறையினருக்குத் தீங்கு ஏற்படுத்துவது அல்ல. போராட்டக்காரர்களுக்கு, காவல் துறையினர் மீது எவ்வித மனக்குறையும்



VVD SIGNAL

இல்லை. போராட்டக்காரர்களின் விருப்பம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச் செல்வதைக் காவல் துறையினர் தடுக்கக்கூடாது என்பது மட்டுமே. போராட்டக்காரர்கள் அனைவரும் காவல் துறையினர் மீது கற்களை எறியவில்லை. முன்னிலை போராட்டக்காரர்கள் மட்டுமே கல் எறிந்ததிலும், காவல் துறை வாகனத்தைத் தலைகீழாகக் கவிழ்த்து விட்டதிலும், வி.சி.டி.வி-கேமராவை சேதப்படுத்தியதிலும் ஈடுபட்டார்கள். போராட்டக்காரர்களுக்கு காவல் துறையினர் மீது எந்தக் கெட்ட எண்ணமோ, பகைமையோ கிடையாது. மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து மனு கொடுக்கும் திட்டத்தைப் போராட்டக்காரர்கள் தொடர்ந்ததால், காவல் துறையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையிலான எதிர்ப்பு தவிர்க்க முடியாததாகிவிட்டது.

காவல் துறையினருக்கே இறுதி முடிவு எடுக்கும் வாய்ப்பு இருந்தது. வி.வி.டி.சிக்னலிலேயே எஸ்.ஏ.வி.பள்ளி மைதானத்திற்குச் செல்ல வைக்கும் வகையில், தேவையான வலுவான மற்றும் கடினமான தடுப்புகளை வைத்தும், ஆம்புலன்ஸ்களுடன் வஜ்ரா மற்றும் வருண் வாகனங்கள் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் ஆகியவற்றை நிலைநிறுத்தியும் போராட்டக்காரர்களை எஸ்.ஏ.வி.பள்ளி மைதானத்திற்குப் போகச் செய்தும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிப் போகவிடாமலும் செய்திருக்க வேண்டும். மேற்சொன்னவாறு வாகனங்களை நிறுத்தியிருந்தால் இரண்டு நோக்கங்களும் நிறைவேறியிருக்கும். அதாவது, கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குப் போகவிடாமலும், போராட்டக்காரர்கள் கூடுவதற்கு வழங்கிய அனுமதியின்படி




POLICE RETREATING

எஸ்.ஏ.வி.பள்ளி மைதானத்திற்குத் திருப்பி விட்டும் இருக்கலாம். அந்த வாகனங்களைப் பயன்படுத்துவதாகத் தேவைப்பட்டால், அந்த வாகனங்களைப் பயன்படுத்திக் கூட்டத்தை நிருவகிக்கவும், கலவரத்தைக் கட்டுப்படுத்தவும் செய்திருக்கலாம். அந்த வாகனங்களைப் பணிக்குத் தயாராக, சூழ்நிலையைக் கையாளச் செய்திருக்க வேண்டும். காவல் கண்காணிப்பாளர் திரு.மகேந்திரன் (எ.த.சா.248) மூலம் குறியிடப்பட்டுள்ள எ.த.சா.ஆ.244 தொடரில் பாதுகாப்புத் திட்டத்தில் 3வது மைல், 4வது கேட் மற்றும் எப்.சி.ஐ.ரவுண்டானா ஆகிய இடங்கள் உட்பட வெவ்வேறு இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடு பற்றி சாட்சியம் இருக்கிறது. இந்த விவரங்களைக் காவல்துறையினர் அடையாளப்படுத்தினால் அதன்படி விரிவான பாதுகாப்பு ஏற்பாடு, வஜ்ரா மற்றும் வருண் வாகனங்கள், தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ்களுடன் மற்றும் போதிய எண்ணிக்கையில் காவலர்கள் ஒவ்வொரு இடத்திற்கும் வழங்கப்பட்டிருந்தால், இந்த மாதிரி நிகழ்வுகளை எதிர்பார்த்திருக்காவிட்டாலும், சூழ்நிலையின் அவசரத்தைக் கருதி சூழ்நிலையை நன்றாக சமாளித்திருக்கலாம்.

காவல் கண்காணிப்பாளர் திரு.மகேந்திரன் (எ.த.சா.248) வெகு முன்னரே 20.05.2018 அன்று டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) மற்றும் ஐ.ஜி. திரு.சைலேஷ் குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) ஆகியோரைச் சந்தித்து அவர்களிடம் போராட்டக்காரர்களில் சிலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக முற்றுகைத் திட்டத்தின்படி செல்ல முடிவு எடுத்தார்கள் என்ற தகவலை




MGR PARK

தெரிவித்தார். அதிக எண்ணிக்கையில் மக்கள் வந்து ஊர்வலத்தில் கலந்து கொள்வார்கள் என்ற அவரது அச்சத்தையும் அவர்களுக்கு தெரிவித்தார். காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248)-ன் சாட்சியத்தின் இந்தப் பகுதியை ஆணையத்தின் முன்பாக ஐ.ஜி. திரு.சைலேஷ் குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) அளித்த சாட்சியத்துடன் சேர்த்துப் பார்க்க வேண்டும். ஐ.ஜி. திரு.சைலேஷ் குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) அவரது சாட்சியத்தில் திரேஸ்புரம் மக்கள் எஸ்.ஏ.வி.பள்ளி மைதானத்திற்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்ட காவல் துறையினரின் வேண்டுகோளை அலட்சியம் செய்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்வதற்காக, தூத்துக்குடி வடக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதி வழியாகப் பனிமயமாதா கோவிலை நோக்கிச் சென்றார்கள் என்று கூறியுள்ளார். மேலும் அவர் சாட்சியத்தில்; போராட்டக்காரர்கள் கூட்டம், மன ஊக்கத்துடன் தீயணைப்பு நிலையத்தை நோக்கிச் சென்று, மேற்கொண்டு வி.வி.டி சிக்னலை நோக்கிச் சென்றது என்றும், அங்கு காவல் துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்குமிடையே சண்டை வந்தது என்றும் கூறியுள்ளார். அந்தச் சமயத்தில் அனைத்து நிகழ்வுகளையும் தொலைக்காட்சியில் அவர் பார்த்துக் கொண்டிருந்தார் என்றும், காலை 10.50 மணியளவில் டி.ஐ.ஜி.யிடமும், விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களிடமும் தொடர்பு கொண்டு தூத்துக்குடிக்கு அவரவருக்கான அதிவிரைவுப் படையுடன் (Swift Action Force) புறப்பட்டு



**MGR PARK**

வருமாறு அவர்களுக்கு அறிவுறுத்தியதாகவும் கூறியுள்ளார். மேலும் அவர் சாட்சியத்தில், அவர் நிலைமையின் தீவிரம் குறித்த விவரங்களைக் காவல்துறைக் கூடுதல் இயக்குநர் (சட்டம் (ம) ஒழுங்கு) (ADGP) (L&O) திரு.விஜய் குமார், இ.கா.ப. (எ.த.சா.252) மற்றும் காவல்துறை இயக்குநர் (DG) திரு.T.K.ராஜேந்திரன், இ.கா.ப. (எ.த.சா.253) ஆகியோரிடம் கூறியதாகக் கூறியுள்ளார். மேலும் அவர் சாட்சியத்தில், வி.வி.டி.சிக்னலைக் கடந்து செல்வதிலிருந்து போராட்டக்காரர்களைத் தடுக்க வேண்டுமென்று டி.ஐ.ஜி திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246)விடம் தகவல் தெரிவிக்குமாறு சிறப்புக் காவல் பிரிவிற்கு அறிவுறுத்தினார் என்றும் கூறியுள்ளார். அவரது கருத்து வி.வி.டி.சிக்னலுக்குப் பாதுகாப்புப் பணிக்குப் பொறுப்பு அலுவலராக இருக்கும் டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) மேலும் சிறிது நேரத்திற்குக் கூட்டத்தினரைத் தடுத்து வைத்திருந்தால், கூடுதல் காவலர்கள் குழு பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வந்து விடுவார்கள் என்றும், காவல்துறையின் பலம் அதிகமாகிவிடும் என்பதாகும். மேலும் அவர் சாட்சியத்தில் டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) இது சம்பந்தமாக மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்று விட்டன என்றும், ஊர்வலம் வி.வி.டி.சிக்னலை கடந்து மேற்கொண்டு சென்றது என்றும் கூறியுள்ளார். ஐ.ஜி. திரு.சைலேஷ் குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247)-ன் சாட்சியத்திலிருந்து தெரிய வருவது, கடைசி நேரம் வரை, அதாவது காலை 10.50 மணி வரை



ஆயத்தமில்லாமல் இருந்திருக்கிறார்கள் என்பதும், ஐ.ஜி. திரு.சைலேஷ் குமார் யாதவ் இ.கா.ப. (டெ.சா.247) அசம்பாவித சம்பவம் எதுவும், ஏற்பட்டாலும் காவல்துறையினரின் பலம் அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டார் என்பதும் தெரிய வருகிறது. கூடுதல் காவல்துறைப் படை தூத்துக்குடி வந்தடைய மிகவும் காலதாமதமாகிவிட்டது. அதற்குள் ஊர்வலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை அடைந்துவிட்டது. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் துப்பாக்கிச்சூடு நடந்து விலை மதிப்பற்ற 6 உயிர்கள் இழக்கப்பட்டு விட்டன. மதிப்புமிக்க இந்தியக் காவல் பணி அலுவலர்கள் வரப்போவதை அறிந்து கொண்டு, காவல் துறையின் திறனை மேம்படுத்தியும், போதிய வஜ்ரா மற்றும் வருண் வாகனங்களை வரவழைத்தும், தீயணைப்பு வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் ஆகியவற்றை பாதுகாப்புப் பணித் திட்டத்தில் குறிப்பிட்ட அனைத்து இடங்களிலும் நிலை நிறுத்தி வைத்தும் இருக்க வேண்டும். நேரம் குறைவாக இருக்கிறது என்பதற்காக காவல் துறையின் பலத்தை வலுப்படுத்துவதற்காக, பரபரப்பான முயற்சிகளை மேற்கொள்வதால் எவ்வித பயனும் இல்லை. இதில் மாவட்ட நிர்வாகத்திற்கும், காவல் துறை நிர்வாகத்திற்கும் இடையே ஒருங்கிணைப்பு இல்லையென்பதையும், அதேபோல் காவல் துறை அலுவலர்களுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லையென்பதையும் காட்டுகிறது. ஒருங்கிணைப்பு இல்லாததும், எந்த நிகழ்வு வந்தாலும் அதைத் திறம்படச் சமாளித்துக் காவல் துறையினரை ஒன்றாகச் சேர்த்து அமைப்பாக உருவாக்கி,



3rd MILE

சரியாக பொருத்தமான நுண்ணறிவுத் தகவலுக்கு முக்கியத்துவம் அளிக்க, காவல் உயர் அலுவலர்கள் தவறியதும் காரணமாகும்.

காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) அவரது சாட்சியத்தில், மாவட்டம் முழுவதிற்கும் தடை உத்தரவு பிறப்பிக்க மாவட்ட ஆட்சியரை (எ.த.சா.243) வலியுறுத்தியதாகவும், மாவட்ட ஆட்சியர் சிப்காட் காவல் நிலையத்திற்கும் தூத்துக்குடி தெற்குக் காவல் நிலையத்திற்கும் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு மட்டும் தடை உத்தரவு வழங்கினார் என்றும் கூறியுள்ளார். எஸ்.ஏ.வி.பள்ளி மைதானத்தில் கூடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறு மாவட்டம் முழுவதற்கும் தடை உத்தரவு பிறப்பிக்க முடியும் குறிப்பாக போராட்டக்காரர்கள் தடை உத்தரவு உள்ள பகுதி வழியாகத்தான் எஸ்.ஏ.வி.பள்ளி மைதானத்திற்குப் போக முடியும். மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) முன்வைப்பது சாத்தியமற்றது. இந்தச் சமயம் குறிப்பிட வேண்டியது, சிப்காட் காவல் நிலையம் மற்றும் தூத்துக்குடி தெற்குக் காவல் நிலையம் ஆகியவற்றின் எல்லைப் பகுதிகளுக்கு மட்டும் தடை உத்தரவு பிறப்பித்தது தவறானது. போராட்டக்காரர்கள் அனைவருக்குமே, எஸ்.ஏ.வி.பள்ளி மைதானத்திற்குச் செல்வதற்கும் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பகுதிகள் வழியாகச் செல்வதற்கும் இதே பிரச்சனைதான். போராட்டக்காரர்களை அழைத்துச் செல்வதற்குப் பாதையைக் காட்டி, பாதை வரைபடம் வரையாததால், அது இல்லாமல் எஸ்.ஏ.வி.பள்ளி மைதானத்திற்குச் செல்வது போராட்டக்காரர்களுக்குப் பெரிய பிரச்சனைதான். தடை உத்தரவு பற்றி விளம்பரம் செய்யாதது அல்லது




3rd MILE

போதிய அளவில் செய்யாததால், தடை உத்தரவு பொதுமக்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. தடை உத்தரவு பற்றிப் பொதுமக்களுக்குப் போதிய அளவில் தெரியப்படுத்தாததால், குழப்பத்தை மேலும் அதிகப்படுத்தி விட்டது. பாதுகாப்புத் திட்டத்திலேயே குறிப்பிடப்பட்ட முக்கிய இடங்களான பனிமயமாதா கோவில், நீரிணைப்பு நிலையம், புனித அந்தோணியார் ஆலயம், சந்தை நடைபெறும் இடம், வி.வி.டி.சிக்னல், 3வது மைல், எப்.சி.ஐ.கிடங்கு, எப்.சி.ஐ.ரவுண்டானா மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றில் போதிய காவல் படை காவல் துறையினரால் பணியமர்த்தப்படவும் இல்லை. மேற்சொன்ன இடங்களில் குறைந்த அளவில் காவல் துறையினரை ஒதுக்கீடு செய்திருந்ததும் போராட்டக்காரர்கள் தாக்குவார்கள் என்ற பயத்தின் காரணமாகக் காவல் துறையினர் ஓடி அருகிலிருந்த கட்டடத்தில் பதுங்கி இருந்தார்கள் என்றும் ஆணையத்தின் பார்வைக்குத் தெரிய வருகிறது. பெரிய போராட்டக் கூட்டத்திற்குக் காவல்துறையின் பலம் போதியதாக இல்லை. அப்போது அங்கு குறைந்த எண்ணிக்கையிலான காவலர்கள், அவ்வாறான நிலையில் எவ்வித வழிகாட்டுதல்களோ, உத்தரவோ இல்லாமலும், உயர் அலுவலர்கள் இல்லாமலும் அவ்வாறான நிகழ்வின்போது எங்கே செல்வது என்று தெரியாமலும் இருந்துள்ளார்கள். அந்தச் சமயத்தில் கீழே விழுந்தும், மன உளைச்சலுக்கு ஆளாகியும் இருந்த காவலர்களுக்கு வழிகாட்டுதலோ, அறிவுரையோ சொல்ல உயர் அலுவலர்கள் யாரும் இல்லை. துரதிருஷ்டவசமாக அவல நிலைக்கு ஆளான காவலர்களில் தைரியமானவர்கள், போராட்டக்காரர்களைச் சற்று தொலைவு வரை



FCI GODOWN

பின்தொடர்ந்து விரட்டினார்கள். அமைதியடைந்த கூட்டம், பனிமயமாதா கோவிலிலிருந்து புறப்பட்டு, வி.வி.டி.சிக்னலை அடைந்து, மேற்கொண்டு பாலத்தை தாண்டி 3வது மைலை அடைந்தது. பின்னர், கூட்டம் கலவரமாக மாறி கிளர்ச்சியில் ஈடுபட்டுப் போர்க்குண மனநிலையில் காவல் துறையினரைத் தாக்கியுள்ளது. காவல் துறையினர் பாதுகாப்பிற்காக இடங்களைத் தேடி கால் தெறிக்க ஓடினார்கள். இது நிச்சயமாக காவலர்களின் எண்ணிக்கை, ஆயுதங்கள் மற்றும் இதர கருவிகள் குறைவாக இருந்ததாலும், காவல் துறையினர் பின்வாங்கியதாலும், கண்டிக்கத்தக்க நடத்தையில் போராட்டக்காரர்கள் ஈடுபட்டதாலுமே ஆகும்.

ஈ) <u>நிகழ்வு IV - 3வது மைல் - படுதோல்வி</u>

குறிப்பிடத்தக்கது யாதெனில், காவல்துறை உயர் அலுவலர்கள் யாரும் 3வது மைலில் இல்லை. ஜே.எஸ்.பி. திரு.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) மற்றும் டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சராட்கர், இ.கா.ப. (எ.த.சா.246) வி.வி.டி.சிக்னலில் கூட்டத்தைச் சமாளித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் தோல்வியுற்று, அந்த இடத்தைக் கடந்து பாதுகாப்புத் திட்டத்தில் ஒரு முக்கிய பகுதியான 3வது மைலில் கூட்டத்தை கட்டுப்படுத்தும் தேவையை மீறி, எப்.சி.ஐ.ரவுண்டானாவிற்குச் சென்று விட்டார்கள். போராட்டக்காரர்களின் எதிர் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல், காவல் பணியாளர்களான காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் 3வது மைலில் இருந்து சென்று விட்டார்கள்.



FCI GODOWN

அதேபோல் மூத்த காவல்துறை உயர் அலுவலர்களான ஆய்வாளர்கள், காவல் கண்காணிப்பாளர், ஜே.எஸ்.பி மற்றும் டி.ஐ.ஜி. ஆகியோரும் அந்த இடத்திலிருந்து காணாமல் சென்று விட்டார்கள். முதல் நிலைக் காவலரான திரு.க.சிவகுமார் (எ.த.சா.54) அவரது சாட்சியத்தில், கூட்டம் அதிகக் கோபமாக இருந்தது என்றும், அங்கு ஒரு வஜ்ரா வாகனம் மற்றும் ஒரு அதிரடிப்படை வாகனம் இருந்தன என்றும், அந்த அதிரடிப்படையில் சில காவலர்கள் இருந்தார்கள் என்றும், எழுச்சி மிக்க கூட்டத்தைப் பார்த்த காவலர்களைக் குறுக்கே இரு பக்கங்களிலும் தடுப்புகள் போடுமாறு அப்பொழுது அங்கு வந்த ஆறுமுகநேரி காவல் ஆய்வாளர் திரு.சம்பத் (எ.த.சா.238) சொன்னார் என்றும், அவர் போராட்டக்காரர்களைப் பார்த்து தடை உத்தரவு செயல்பாட்டில் உள்ளது என்று எச்சரித்தார் என்றும், அங்கு அதிரடிப்படை வாகனத்திற்குப் பின்னால் வஜ்ரா வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது என்றும், வஜ்ரா வாகனம் முன்னோக்கிக் கொண்டு செல்லப்பட்டு, கண்ணீர்ப்புகைக் குண்டுகள் போராட்டக்காரர்கள் மீது வீசப்பட்டன என்றும், வீசப்பட்ட கண்ணீர்ப்புகைக் குண்டுகள் காவல் துறையினர் எதிர்பார்த்தபடி விளைவை ஏற்படுத்தவில்லை என்றும் கூறியுள்ளார். மேலும் அவர் சாட்சியத்தில், எழுச்சிமிக்க போராட்டக்காரர்கள் முன்னோக்கிச் செல்ல தொடங்கினார்கள், கற்களை வீசத் தொடங்கினார்கள், 3வது மைலில் போராட்டக்காரர்கள் குறைந்த எண்ணிக்கையில் உள்ள காவலர்கள் மீது பலமான தாக்குதல் நடத்தினார்கள், அதனால் அவர்கள் அங்குமிங்கும் ஓடி அருகில் உள்ள முட்புதரில் பதுங்கினார்கள் எனக் கூறியுள்ளார்.3வது மைல் பாதுகாப்புப் பணிக்கு நியமிக்கப்பட்ட எ.த.சா.65



FCI GODOWN

திரு.பாண்டியராஜன், ஆயுதப்படை காவலர், எ.த.சா.18 திரு.ஆ.காளிதாஸ் காவலர் மற்றும் எ.த.சா.55 திரு.செல்வகுமார், காவலர் ஆகிய மூன்று சாட்சிகளும் ஏறத்தாழ ஒரே மாதிரி 3வது மைலில் நடந்த சம்பவம் குறித்துக் கூறியுள்ளார்கள் எ.த.சா.54 திரு.சிவகுமார் இது சம்பந்தமாக மற்ற சாட்சிகளுக்கு ஒத்ததாக சாட்சியம் கூறியிருப்பினும், அவர் சாட்சியத்தில் ஆறுமுகநேரி காவல் ஆய்வாளர் திரு.சம்பத் (எ.த.சா.238) சம்பந்தமாக கூறும்போது, அவர் போராட்டக்காரர்களிடம் தடை உத்தரவு இருப்பதன் காரணமாக கலைந்து செல்லுமாறு போராட்டக்காரர்களிடம் பேசியதாகக் கூறியுள்ளார். திரு.சம்பத் (எ.த.சா.238) காவல் ஆய்வாளரே போராட்டக்காரர்களிடம் அவ்வாறு பேசியதாகக் கூறவில்லை என்பதால் அது எ.த.சா.54ன் சாட்சியத்தைப் பொய்யாக்குகிறது.

3வது மைலில் என்ன நடந்தது என்பது சம்பந்தமாக கூட்டம் / ஊர்வலத்தில் கலந்து கொண்ட பொதுமக்களில் சிலர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆணையம், இந்த சாட்சிகளில் மேற்சொன்ன நிகழ்வு தொடர்பான தெளிவான விவரங்களைத் தெரிவித்த சிலரது சாட்சியங்களை மட்டும் எடுத்துக் கொண்டு, தேவைப்படும் இடங்களில் பயன்படுத்திக் கொள்கிறது. பொதுமக்களில் நிறைய சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருந்தாலும், அவர்களது சாட்சியத்தில் மீண்டும் மீண்டும் ஒரே விவரங்கள் தெரிவிக்கப்படுவதால், 3வது மைலில் நடந்த சம்பவங்கள் குறித்துத் தெளிவான விவரங்களைத் தெரிவித்த சிலரது சாட்சியங்களை மட்டும் எடுத்துக் கொள்கிறது. ம.சா.65 திருமதி.சுப்ரியா தூத்துக்குடி மாநகராட்சியில் பணிபுரியும் ஒரு தூய்மைப் பணியாளர். அவர்



FCI GODOWN

சாட்சியத்தில், புனித அந்தோணியார் ஆலயம் அருகில் அவரது இளைய மகனுடன் ஊர்வலத்தில் கலந்து கொண்டார் என்றும், வி.வி.டி.சிக்னலில் காவல் துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே சண்டை நடந்தது என்றும், காவல் துறையினர் தடியடி நடத்தினார்கள் என்றும், போராட்டக்காரர்கள் காவல் துறையினர் மீது கற்களை எறிந்தார்கள் என்றும், காவல் துறையினர் வி.வி.டி.சிக்னலில் இருந்து பின்வாங்கினார்கள் என்றும், அவர் மறுபடியும் ஊர்வலத்தில் கலந்துகொண்டார் என்றும், 3வது மைலில் காவல் துறையினர் கண்ணீர்ப்புகை மற்றும் ரப்பர் குண்டுகளை வீசினார்கள் என்றும், அவர் மற்றவர்களுடன் சேர்ந்து பின்வாங்கினார் என்றும், பாலத்தில் இருந்த பொதுமக்களில் சில நபர்கள் பாலம் இறங்கும் இடத்திலிருந்து, கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்படும் மரக்கட்டைகளை எடுத்துப் பாலத்திலிருந்த போராட்டக்காரர்களுக்கு விநியோகம் செய்தார்கள் என்றும், போராட்டக்காரர்கள் அவற்றைக் காவல் துறையினர் மீது எறிந்தார்கள் என்றும், காவல் துறையினருக்கு அடிபட்டது என்றும், காவல் துறையினர் பின்வாங்க தொடங்கினார்கள் என்றும், போராட்டக் கூட்டத்தினர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச் சென்றார்கள் என்றும், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் தீ வைக்கப்பட்டதைப் பார்த்ததாகவும் கூறியுள்ளார்.

ம.சா.116 திரு.டேனியல்ராஜ், கணினி இயக்குபவர். அவரது சாட்சியத்தில் எப்.சி.ஐ.கிடங்கு அருகே 3வது மைல் பாலம் வழியாக போராட்டக்காரர்கள்



FCI GODOWN

சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்பொழுது ஒரு வஜ்ரா வாகனம் அந்த இடத்திற்கு வந்தது என்றும், அந்த வாகனத்திற்குப் பின்னால் லத்தி வைத்திருந்த காவலர்கள் இருந்தார்கள் என்றும், அவர்கள் நான்கு அல்லது ஐந்து முறைகள் கண்ணீர்ப் புகை குண்டுகளை எப்.சி.ஐ.கிடங்கு அருகே இருந்த போராட்டக்காரர்களை நோக்கி வெடித்தார்கள் என்றும், போராட்டக்காரர்களில் சிலருக்கு கண்களில் எரிச்சல் ஏற்பட்டது என்றும், காவல் துறையினர் கற்களை எறிந்தார்கள் என்றும், போராட்டக்காரர்கள் ஓடத் தொடங்கினார்கள் என்றும், பின்னர் பொதுமக்கள் திரும்பி வந்து காவல் துறையினர் மீது கற்களை எறிந்தார்கள் என்றும், காவல் துறையினர் சரமாரியாகத் தடியடி நடத்தினார்கள் என்றும், பொதுமக்கள் அந்த இடத்திலிருந்து தப்பி ஓடினார்கள் என்றும், ஆனால் அந்த இடத்திற்குத் திரும்பவும் வந்தார்கள் என்றும், போராட்டக்காரர்களின் கூட்டம் அதிகமானது என்றும், அதன் பின்னர் காவல் துறையினர் பின்வாங்க தொடங்கினார்கள் என்றும், போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி ஓடினார்கள் என்றும் கூறியுள்ளார்.

ம.சா.94 அனு தமிழச்சி என்கிற அனாமிகா என்பவர் அவரது சாட்சியத்தில், கூட்டம் 3வது மைல் பாலத்தைக் கடக்கும் வரையில் காவல் துறையினர் தடுக்கவில்லை என்று கூறியுள்ளார். ம.சா.88 திரு.மரிய ஹார்ட்மேன் ராஜ், கப்பல் போக்குவரத்து நிறுவனத்தில் பணி புரிகிறார். அவர் சாட்சியத்தில் 3வது மைல் பாலத்தில் கூட்டம் மிக அதிகமாக இருந்தது என்றும், காவல் துறையினர்




THOOTHUKUDI SP MAHENDRAN IN
FCI ROUNDANA

கூட்டத்தினரைத் தடுத்தார்கள் என்றும், தடியடி நடத்தினார்கள் என்றும், அதைத் தொடர்ந்து "டம் டம் டம்" என்ற சத்தம் மூன்று முறை கேட்டது என்றும், கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வெடித்த சத்தம் என்று அனுமானிக்கத்தக்கது என்றும் கூறியுள்ளார். மேலும் அவரது சாட்சியத்தில் கூட்டம் முன்னோக்கிச் சென்றது என்றும், காவல் துறையினர் பின்வாங்கினார்கள் என்றும், பைபாஸ் பாலம் அருகே இரு சக்கர வாகனங்கள் எரிவதை பார்த்ததாகவும் கூறியுள்ளார். ப.சா.199 திருச்சகாயம் ஒரு மீனவர். அவர் பனிமயமாதா ஆலயத்தில் ஊர்வலத்தில் சேர்ந்தது பற்றிக் கூறியுள்ளார். பனிமயமாதா ஆலயத்தில் 1000 முதல் 2000 நபர்கள் இருந்த ஊர்வலத்தில் பெரும்பாலும் மீனவர்கள், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் வி.வி.டி.சிக்னலில் ஊர்வலத்தில் சேர்ந்து கொண்டார்கள். காவல் துறையினர் அவர்களைத் தடுத்தார்கள். போராட்டக்காரர்கள் எல்லோரும் உட்காருவோம் என்ற நிலையை எடுத்தார்கள். ஒரு [illegible] ஆர்.சி.யா திரு N. [illegible] இ.ஆ.ப. (எ.கு.சா.243)-ஐச் சந்தித்து மனு கொடுப்பதற்கு அனுமதியளிக்கப் போராட்டக்காரர்கள் கோரினார்கள். அந்த வேண்டுகோளைக் காவல் துறையினர் கேட்டும் கேட்காதவர் போல் இருந்தனர். இவ்வாறு இருக்கையில், இந்தப் பிரச்சனைக்குச் சம்பந்தமில்லாத வெள்ளைச் சட்டையும், கருப்புக் கால்சட்டையும் அணிந்திருந்த சில நபர்கள் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் கற்களை எறிந்தார்கள். காவல் துறையினர், அந்த நபர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டு, பொது நலனுக்கு ஆதரவாக இருப்பதாகத் தவறுதலாக



TIRUNELVELI SP Dr. ARUN SAKTHI KUMAR
IN FCI ROUNDANA

எடுத்துக்கொண்டார்கள். காவல் துறையினர் பெண்களின் மார்பைத் தள்ளினார்கள். அதனால் பெண்களுக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது. ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் நோக்கமே ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என்பதற்காகத்தான். அது உடல் நலத்திற்குத் தீங்கு ஏற்படுத்துவதால், அதற்காக உடல் நலத்தை காப்பதற்காக ஊர்வலத்தில் கலந்து கொண்டு கைது மற்றும் சிறைவைப்பு ஆகியவற்றையும் எதிர்கொண்டுள்ளார்கள். ம.சா.42 மரியஜூடி ஹேமா அதேபோல் சாட்சியம் கூறியுள்ளார். அவரது சாட்சியத்தில், பெண்களின் மார்பைத் தள்ளிவிட்டார்கள் என்றும், காவல் துறையினர் பெண்களின் மானத்தை அவமதித்துள்ளனர் என்றும் கூறியுள்ளார். மூன்றாம் பாலினத்தினரும் காவல் துறையினரின் நடவடிக்கையில் கோபம் கொண்டு காவல் துறையினருடன் சண்டையிட்டார்கள். குறைகள் சம்பந்தமாக மனு கொடுப்பதற்காகத்தான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்வதாகக் கூறினார்கள். 3வது மைல் பாலத்தில் காவல் துறையினர் கண்ணீர்ப்புகைக் குண்டு வெடிக்கச் செய்தார்கள் என்றும் சாட்சியம் கூறியுள்ளார்.

ம.சா.10 திரு.கிளிண்டன் ஒரு மீன்பிடி பிரிவில் பணிபுரிகிறார். அவர் சாட்சியத்தில், அன்று காலை 11.30 மணிக்கு 3வது மைலில் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வெடித்தன என்று கூறியுள்ளார். மேலும் அவர் சாட்சியத்தில், பின்வாங்கிய ஒரு காவலரைக் கூட்டத்தினர் பிடித்துத் தாக்க முற்பட்டார்கள் என்றும், இந்தச் சாட்சி, அவரது சகோதரர் மற்றும் அவரது மைத்துனர் ஆகியோர்



FCI ROUNDANA

தனியாக மாட்டிக்கொண்ட அந்த காவலரைப் போராட்டக்காரர்களின் பிடியிலிருந்து காப்பாற்றிப் போகச் செய்தார்கள் என்றும் கூறியுள்ளார்.

ம.சா.334 திரு.சுர்ஜித் புரட்சிகர இளைஞர் பேரவையின் ஒரு நிர்வாகி ஆவார். அவர் சாட்சியத்தில், ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் பல்வேறு இடங்களில் நடைபெற்ற 100 நாட்கள் போராட்டத்தில் அவரது இயக்கம் துடிப்புடன் ஈடுபட்டது என்றும், போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டது பற்றி மாவட்ட நிர்வாகத்திற்குத் தெரிந்திருந்தும், அமைதிக்குழுக் கூட்டத்திற்கு அவர்கள் அழைக்கப்படவில்லை என்றும், 22.05.2018-ஆம் நாள் இறந்து போன தமிழரசனுடன் பனிமயமாதா கோவிலில் ஊர்வலத்தில் கலந்துகொண்டார் என்றும், தீயணைப்பு நிலையம் அருகில் காவல் துறையினர் தடுப்புகளை வைத்து போராட்டக்காரர்களைத் தடுத்தார்கள் என்றும்.அரசு மருத்துவமனை அருகிலும் அவ்வாறே செய்தார்கள் என்றும், வி.வி.டி.சிக்னலில் காவல் துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் சண்டை வந்தது பற்றியும், காவல் துறையினர் நின்று கொண்டிருந்த பக்கத்திலிருந்து அடையாளம் தெரியாத சில நபர்கள் போராட்டக்காரர்கள் மீது கற்களை வீசினார்கள் என்றும், அதைத் தொடர்ந்து காவல் துறையினர் தடியடி நடத்தினார்கள் என்றும், ஒன்று, இரண்டு மாடுகளைக் கூட்டத்திற்குள் அவிழ்த்து விட்டார்கள் என்றும், அதில் சிலருக்கு காயம் ஏற்பட்டது என்றும், போராட்டக்காரர்கள் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச் சென்றார்கள் என்றும், போராட்டக்காரர்கள் 3வது மைல் பாலத்திலிருந்து இறங்கும்போது காவல் துறையினர் கண்ணீர்ப்புகைக



FCI ROUNDANA

குண்டுகளை வெடித்தார்கள் என்றும், சில அடையாளம் தெரியாத நபர்கள் குழப்பம் ஏற்படுத்துவதற்காக ஊர்வலத்தில் கலந்துவிட்டார்கள் என்றும், போராட்டக்காரர்கள் பைபாஸ் பாலத்தை அடைவதற்கு முன்பே பாலம் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு சக்கர வாகனங்கள் எரிந்து கொண்டிருந்தன என்றும் கூறியுள்ளார்.

ம.சா.16 திரு.ராமச்சந்திரன் ஒரு ஓட்டுநர். கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வெடித்தது சம்பந்தமான 3வது மைல் நிகழ்வு குறித்து, மேற்சொன்ன சாட்சிகளின் அதே கருத்தை சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவர் சாட்சியத்தில் ஒரு காவலர் கால் தெறிக்க ஓடிச் சாலை போடுவதற்காகக் குவித்து வைக்கப்பட்டிருந்த சரளைக் கற்கள் மீது விழுந்தார் என்றும், இந்தச் சாட்சி அவரை மேலே தூக்கி விட்டதாகவும், அதே போல் 4 மகளிர்க் காவலர்களும், ஒரு ஆண் காவலரும் போராட்டக்காரர்களிடம் சிக்கிக் கொண்டார்கள் என்றும், இந்தச் சாட்சி திரு.ராமச்சந்திரன் (ம.சா.16) உட்பட 5 அல்லது 6 நபர்கள் போராட்டக்காரர்களிடமிருந்த பலமான தாக்குதலிலிருந்து காப்பாற்றி அவர்களைச் சற்று தொலைவில் உள்ள ஒரு வீட்டிற்குத் தூக்கிச் சென்று, அங்கு பாதுகாப்பாக இருக்கச் செய்தார்கள் என்றும், காவலர்கள் பதிலுக்கு அவர்களுக்குத் தங்களது நன்றியைத் தெரிவித்தார்கள் என்றும் கூறினார். வாய்மொழிச் சாட்சியம் மட்டுமல்லாது, படக்காட்சிகளும் இந்தச் சாட்சிகளின் சாட்சியத்திற்கு ஆதாரமாக இருக்கின்றன.



FCI ROUNDANA

**<u>நிகழ்வு V - எப்.சி.ஐ.ரவுண்டானாவில் துடிப்பான போராட்டக்காரர்கள் மற்றும் சோர்வுற்ற காவல் துறையினர்</u>**

எ.த.சா.172 திரு.ஞானசம்பந்தம், காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர், எப்.சி.ஐ.ரவுண்டானாவிற்கு அப்போது பொறுப்பு அலுவலராக இருந்தார். 3வது மைல் பாலம் இறங்கும் இடத்தில், எப்.சி.ஐ.கிடங்குக்கு எதிரே உள்ள இடத்தில் சுமார் 50 முதல் 100 வரையில் பொதுமக்கள் கூடியிருந்தார்கள் முயற்சியின்பேரில் காவல் இணைக் கண்காணிப்பாளர், ஜே.எஸ்.பி. திரு.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அந்தச் சமயம் 3வது மைல் பாலத்திலிருந்து போராட்டக்காரர்களின் ஊர்வலம் இறங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. போராட்டக்காரர்கள் ஆவேசமாக காவல்துறையினருக்கு எதிராகவும், ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு எதிராகவும், கோஷம் போட்டுக்கொண்டு வந்தார்கள். சாட்சி பேச்சுவார்த்தை நடத்திய 50 முதல் 100 வரையிலான பொதுமக்களுக்கு என்ன ஏற்பட்டது என்பது பற்றிச் சொல்லவில்லை, எனினும் படக்காட்சிகளில் அந்த வற்புறுத்தலின் காரணமாகவும், தடை உத்தரவு இருப்பதாக எச்சரித்ததாலும் அந்தப் போராட்டக்காரர்களுடனான பேச்சுவார்த்தை குறைந்து வீணாகிவிட்டது தெரிகிறது. படக்காட்சிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் காவல் துறையினரால் சுடப்பட்டதில் பரிதாபமாக இறந்துபோன கந்தையா என்பவர் இருந்ததும் தெரிகிறது. கந்தையா முன்னர் இருந்த இடத்தைவிட்டுச் சென்று, ஊர்வலத்துடன் கலந்து, மீண்டும் சேர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச் சென்று அவரது முடிவைச்



**FCI ROUNDANA**

சந்தித்துள்ளார் என்று அனுமானம் கொள்ள வேண்டியுள்ளது. திரு.ஞானசம்பந்தம் (எ.த.சா.172) மேலும் தன் சாட்சியத்தில் எப்.சி.ஐ.கிடங்கு முன்பாக நடைபெற்ற சம்பவங்களைப் பற்றிக் கூறியுள்ளார். காவல் துறையினர் வஜ்ரா வாகனத்திற்கு பின்னால் நின்றிருந்தார்கள் என்றும், கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வஜ்ரா வாகனத்திலிருந்து சுடப்பட்டன என்றும், கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பயனற்றதாகிவிட்டன என்றும், போராட்டக்காரர்கள் சாலைகள் போடுவதற்காக ஓரத்தில் குவிக்கப்பட்டிருந்த சரளைக் கற்களை எடுத்து காவல் துறையினர் மீது வீசினார்கள் என்றும் கூறியுள்ளார். சாட்சி அவரது அலுவலக வாகனத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குப் பின்புறமுள்ள கோரம்பள்ளத்தில் விட்டுவிட்டதாகவும், காவல் துறையினர் மீது கற்கள் வீசப்பட்டவுடன் காவல் துறையினர் பின்வாங்கியதாகவும் கூறியுள்ளார். சாட்சி அவரது பொறுப்பைக் கைவிட்டுவிட்டு, அந்த இடத்திலிருந்து திருச்செந்தூர் சாலைக்குச் செல்லும் பைபாஸ் பாலத்திற்குப் பின்னால் சென்று, அங்கு ஒரு மணி நேரமாக இருந்துவிட்டு, அதன் பின்னர் அவர் வாகனத்தை வரச்செய்து இந்த நிகழ்வுக்காக அமைக்கப்பட்டிருந்த சிறப்புக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் புதிய பேருந்து நிலையத்திற்குச் சென்று விட்டார்.

காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு.ஞானசம்பந்தம் (எ.த.சா.172) உடன் வேறு இரண்டு காவல் ஆய்வாளர்களும், எப்.சி.ஐ.கிடங்கு அருகே 50 முதல் 100 நபர்கள் கொண்ட கூட்டத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தியவர்களில் எ.த.சா.208 காவல் ஆய்வாளர் திரு.மீனாட்சிநாதன் ஆகியோரும் இருந்தனர். அவர்



FCI ROUNDANA

ஆணையம் முன்பாக சாட்சியம் அளித்தபோது காட்டப்பட்ட படக்காட்சிகளில் தெரிகிறார். அதில் அவரது வாகனத்திலிருந்து எப்.சி.ஐ.கிடங்குக்கு எதிரே இறங்குவது தெரிகிறது. அவர் மக்களை அமைதிப்படுத்திக் கலைந்து செல்ல பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். ஜே.எஸ்.பி. திரு.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242)-ம் அவருடன் சேர்ந்துகொண்டு, கூட்டத்தினர் கலைந்து செல்லாவிட்டால், அவர்கள் வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தப்படுவார்கள் என்று எச்சரித்தார். அந்த நேரத்தில் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருப்பதையும், பைபாஸ் பாலத்தின் தென் பக்கத்தில் உள்ள சர்வீஸ் சாலைக்குள் காவல் துறையினர் தப்பி ஓடுவதையும், வஜ்ரா வாகனம் பின்வாங்குவதையும் படக்காட்சிகளில் காண முடிகிறது. போராட்டக்காரர்களில் சிலர் கம்புகளை எடுத்துச் செல்வதையும், அதில் ஒரு சிலர் கற்களை வீசியதையும் மற்றும் ஒரு சிலர் ஏற்கனவே வீசப்பட்ட கற்களை எடுத்துத் தெற்குப் பக்கத்தில் ஓடிய காவல் துறையினர் மீது வீசியதையும் படக்காட்சிகளில் காணமுடிகிறது. தெற்கு நோக்கி ஓடிய காவலர்கள் மூடிய கடைகளின் பக்கத்தில் நிற்பதும் தெரிகிறது. போராட்டக்காரர்கள் சிலர் அந்த காவலர்களைக் கம்புகளாலும், கைகளாலும் அடிக்க முயற்சி செய்வதையும், போராட்டக்காரர்களில் சில இளைஞர்கள், அவர்கள் காவல் துறையினரைத் தாக்க விடாமல் தடுத்து அனுப்பி வைத்ததையும் படக்காட்சிகளில் காண முடிகிறது. படக்காட்சிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட இந்த விவரங்கள் காவல் ஆய்வாளர் திரு.மீனாட்சிநாதனால் (எ.த.சா.208) உறுதி செய்யப்பட்டது.



போராட்டக்காரர்கள் தடையின்றி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி முன்னேறியதை நினைவுகூரலாம்.3வது மைலில் காவலர்கள் மீது போராட்டக்காரர்கள் கல் வீசியதைத் தொடர்ந்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடிக்கச் செய்தும், காவல் துறையினர் பின்வாங்கியும் சில காவலர்களுக்கு காயங்கள் ஏற்பட்டன. அவர்களில் சிலர் போராட்டக்காரர்களின் தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காக கால்தெறிக்க ஓடி மூடப்பட்டிருந்த துரித உணவு / தேநீர்க் கடையில் அடைக்கலம் புகுந்தது சம்பந்தமாக திரு.எஸ்.துரைபாண்டி (எ.த.சா.61), திருமதி.ஜோதிலெட்சுமி (எ.த.சா.51), திருமதி.பொன்மணி (எ.த.சா.52), திரு.தேவராஜ் (எ.த.சா.9), லெட்சுமி நேத்ராவதி (எ.த.சா.7), மாதரசி (எ.த.சா.6), திரு.கலையரசன் (எ.த.சா.29), திரு.சொக்கலிங்கம் (எ.த.சா.119) மற்றும் திருமதி.கலா (எ.த.சா.53) ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இந்தக் காவல் ஆளிணர்கள், போராட்டக்காரர்கள் கல்லால் எறிந்ததால் தங்களுக்குக் காயங்கள் ஏற்பட்டதாகக் கூறியிருப்பினும், அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்துப் பதிவேட்டின் நகல்கள் அல்லது காயச்சான்றிதழ்கள் போன்ற மருத்துவ ஆவணங்கள் எதுவும், ஆதாரமாக இல்லை. அவர்களில் திரு.தேவராஜ், முதல் நிலைக் காவலர் (எ.த.சா.9) அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் எப்.சி.ஐ.ரவுண்டானா பணியில் இருந்தார். அவரது கூற்று, போராட்டக்காரர்களைத் தடுக்க முடியவில்லை என்பதும், தைரியமானவர்கள், கண்ணீர்ப்புகைக் குண்டுகளை எதிர்த்து நின்றார்கள் என்பதும், போராட்டக்காரர்கள் காவல் துறையினர் மீது கற்களை எறிந்தார்கள் என்பதும் ஆகும். திருநெல்வேலி மாவட்டக் காவல்



PROTESTERS NEAR BYPASS

கண்காணிப்பாளர் மருத்துவர்.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240) அங்கு அவரது அதிரடிப்படையுடன் இருந்தார். அவருக்கு உள்காயம் ஏற்பட்டது. திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அதிரடிப்படையுடன் அவரது வாகனத்தை நோக்கி ஓடினார். திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், எவ்வகையிலாவது அங்கிருந்து தப்பிக்க வேண்டுமெனக் கருதி, அவர்களை நோக்கிக் கத்தியவாறு, இடப்பக்கத்தை நோக்கி ஓடினார். மகளிர் காவலர்கள், ஒரு உணவகத்தின் முன்பாக இருந்த தார்ப்பாயைக் கொண்டு தங்களை மறைத்துக் கொண்டார்கள். திருமதி.பொன்மணி (எ.த.சா.52) சாட்சியத்தில், போராட்டக்காரர்களில் சிலர் உதவிக்கு வந்து, ஏற்படவிருந்த பலமான தாக்குதலிலிருந்து அவர்களைக் காப்பாற்றினார்கள். காவல் ஆளினர்கள் நிகழ்விடத்திலிருந்து தப்பி ஓடி திரு.வி.க.நகர் அருகே உள்ள ஒரு பழைய வீட்டில் இருந்தார்கள். அவர்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் திரு.ராஜமாணிக்கம் (எ.த.சா.88), திரு.மகேஷ்வரன் (எ.த.சா.90), திரு.விக்னேஷ்குமார் (எ.த.சா.91), திரு.கோபாலன் (எ.த.சா.89), திரு.மகேந்திரன் (எ.த.சா.87), திரு.முருகேசன் (எ.த.சா.86), திருமதி.பாண்டீஸ் (எ.த.சா.63), திருமதி.குணசுந்தரி (எ.த.சா.4) மற்றும் திருமதி.சித்திரதீன் (எ.த.சா.5) ஆகியோர் ஆவர். மேலும் மூன்று நபர்கள் ஒரு புதருக்குப் பின்னால் ஒளிந்து கொண்டார்கள். அவர்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். திரு.கார்த்தி (எ.த.சா.1), திரு.சுரேஷ் (எ.த.சா.19), திரு.ஆ.மணி (எ.த.சா.67) ஆகியோர் ஆவர். திரு.ஆ.குருமூர்த்தி




**BYPASS BRIDGE**

(எ.த.சா.28) ஒரு லாரி ஷெட்டில் அடைக்கலம் புகுந்தார். இந்த காவலர்களில் சிலர் காயங்கள் ஏற்பட்டதாகக் கூறியுள்ளார்கள். ஆனால் அவர்களின் கூற்றுக்கு ஆதாரவாக மருத்துவ சான்றிதழ் எதுவும் இல்லை. அவர்களது சாட்சியத்திலிருந்து தெரிய வருவது, சம்பவ இடத்திலிருந்து அவர்கள் ஓடியதன் காரணமாகவும், போராட்டக்காரர்களில் இருந்த நல்ல மனிதர்களின் உதவியினாலும், அவர்களில் யாருக்கும் பெயர் சொல்லும்படியான காயம் எதுவும் ஏற்படவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் திரு.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240) மற்றும் தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) ஆகிய இருவரும் காலை 11.00 மணி முதல் 11.15 மணிக்குள் எப்.சி.ஐ.ரவுண்டானவிற்கு ஒருவர் பின் ஒருவராக மடத்தூரிலிருந்து வந்துள்ளார்கள். தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) வருவதற்கு முன்பே, திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240)-இன் உத்தரவின்பேரில், திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளரின் அதிரடிப்படையைச் சேர்ந்த திரு.வின்ஸ்லின் பிரபு (எ.த.சா.195), போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தை நோக்கிச் செல்வதைத் தடுப்பதற்காகப் போராட்டக்காரர்கள் மீது 7 எல்.ஆர். குண்டுகளால் சுட்டுள்ளார். அந்தச் சமயம் டி.ஐ.ஜி திரு.கபில்குமார் சி.சராட்கர்,


# FIRING SPOTS





| S.NO | FIRING SPOTS | DATE |
|---|---|---|
| 1. | COLLECTORATE | 22.05.201 |
| 2. | COLLECTORATE ARCH | 22.05.201 |
| 3. | FCI ROUNDANA | 22.05.201 |
| 4. | THRESPURAM | 22.05.201 |
| 5. | ANNANAGAR | 23.05.201 |

இ.கா.ப. (எ.த.சா.246), திருநெல்வேலி காவல் கண்காணிப்பாளருடன் சேர்ந்து கொண்டார். முன்னவர் பின்னவரிடம் போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச் செல்வதைத் தடுப்பதற்காக தடுப்புகளை அமைக்குமாறு கூறிவிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச் சென்றார். தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248)-ன் சாட்சியத்திலிருந்து, அந்த நேரத்தில், அந்த இடத்தில் அவர் திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர்.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240)ஐச் சந்தித்ததாகத் தெரிகிறது. கைகலப்பில் டி.ஐ.ஜி.யின் துப்பாக்கி ஏந்திய மெய்க்காவலர் திரு.பாபுஜானுக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது. காவல் துறையினர் பின்வாங்கத் தொடங்கினார்கள். போராட்டக்காரர்கள் பைபாஸ் பாலத்தின் மீது இருந்து கொண்டு, காவல் துறையினர் மீதும், சாலையின் வடக்கு பக்கமும் கற்களை வீசினார்கள். வேறு வழி இல்லாததால் திருநெல்வேலிக் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர்.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240) அவரது ஆட்களுடன் பைபாஸ் பாலத்திற்குத் தெற்கே உள்ள சர்வீஸ் சாலையை நோக்கிச் சென்றார். அவர் அவ்வாறு சென்றபோது பைபாஸ் பாலம் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் தீ வைத்துக் கொளுத்தியதைப் பார்த்தார்கள். அந்தச் சாலையில் சென்ற அவர்களுக்கு எதுவும் தெரியாததால், திரும்பி வந்தபோது சில நபர்கள் பெட்ரோல் / மண்ணெண்ணெய் நிரப்பிய பாட்டில்களை நெருப்பு வைத்து எரியச் செய்து அவர்கள் மீது வீசினார்கள். கூட்டம் அவருடைய

# THOOTHUKUDI DISTRICT COLLECTOR'S OFFICE COMPLEX



எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை.அதனால் அவர் திரு.வின்ஸ்லின் பிரபுவை (எ.த.சா.195) எல்.ஆர் குண்டுகளால் மீண்டும் ஒரு முறை சுடுமாறு அறிவுறுத்தினார். கூட்டம் கலைந்து செல்லவில்லை. அதனால் அவர் எரிவாயு (Gas Gun) துப்பாக்கி மூலமாக ரப்பர் தோட்டாக்களை உபயோகிக்குமாறு அறிவுறுத்தினார். திரு.வின்ஸ்லின் பிரபு (எ.த.சா.195) கூட்டத்தை அச்சுறுத்துவதற்காகத் தரையில் மூன்று முறை ரப்பர் தோட்டாக்களைக் கொண்டு சுட்டார். அப்போது கூட்டம் கலைந்தது. இவ்வாறு இருக்கையில், தொடர்ந்து அவர் அங்கு இருந்த போது, பிற்பகல் 12.30 மணிக்கும் 1.00 மணிக்கும் இடையே துப்பாக்கிச்சூடு சத்தத்தையும், அதனுடன் மக்களின் அழுகை மற்றும் கூக்குரல் சத்தத்தையும் கேட்டார். ஐ.ஜி. மற்றும் டி.ஐ.ஜீ அவரிடம் மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு வருமாறு கேட்டார்.மக்கள் கூட்டம் எப்.சி.ஐ.ரவுண்டானாவிலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி நேரடியாகச் செல்லாமல், முத்தையாபுரம் வழியாகச் சுற்றுப்பாதையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பின்வாயில் வழியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் தலைவாயில் பகுதிக்கு வந்தார்கள். அப்போது பிற்பகல் 1.00 மணி இருக்கும் ஐ.ஜி திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) அங்கு இருந்தார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் கொளுத்தப்பட்டன.அருகிலுள்ள ஸ்டெர்லைட் தாமிரா குடியிருப்பிலிருந்து கரும்புகை வெளிவந்தது. அவருடைய


N
COLLECTOR OFFICE
DRDA
AAVIN
DFO
DTO
GARDEN
GARDEN
GARDEN
CYCLE STAND
CHILD WELFARE OFFICE
23. AYYANADAIPPU
palayamkottai road
BUS STOP

கூற்றின்படி தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) அப்பொழுது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை அடைந்து விட்டார்.

திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர்.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240)-வுடன் சாட்சியத்தில் இந்தப் பகுதி தொடர்பாக, தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) சாட்சியத்தைக் குறிப்பிட வேண்டியுள்ளது. தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.மகேந்திரன் (எ.த.சா.248) எஃப்.சி.ஐ.கிடங்கிற்குக் காலை 11.15 மணிக்கும் 11.30 மணிக்கும் இடையே வந்து ஏற்கனவே அங்கு இருந்த திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர்.அருண் சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240)-வுடன் சேர்ந்தார். காவல் ஆய்வாளர் திரு.மீனாட்சிநாதன் (எ.த.சா.208)-ம் அங்கு இருந்தார். 30 காவலர்கள் பணியில் இருந்தார்கள். போராட்டக்காரர்கள் 3வது மைல் பாலத்திலிருந்து ஆவேசமாகக் கம்புகளையும் கற்களையும் காவல் துறையினர் மீது வீசியதையும், கூட்டம் பைபாஸ் பாலம் வழியாகச் சென்று கொண்டிருந்ததையும் அவர் பார்த்தார். கூட்டத்தினரை மேற்கொண்டு போகவிடாமல் தடுக்க அவர் முயற்சித்தார். ஆனால் அது வீணானது. காவலர்கள் இங்கும் அங்கும் ஓடினார்கள். சிலருக்குக் கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டது. அவர் திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர்.திரு.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240)வுடன் அவசரமாக அந்த இடத்தைவிட்டு பைபாஸ் பாலத்திற்குத்



EXCUTIVE MAGESTSTATE RAJKUMAR THANGASEELAN

தெற்குப் பக்கம் உள்ள சாலைக்குச் சென்று, அங்கு ஒரு மூடப்பட்ட கடைக்குப் பின்னால் இருந்து மேற்கொண்டு செய்யப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஆலோசனை நடத்தினார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லக் கூட்டத்திற்குள் ஊடுருவ முடியாததால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை அடைவதற்காக அவர்கள் முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி வழியாகச் சுற்றுப்பாதையில் வந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைப் பிற்பகல் 1.00 மணி முதல் 1.15 மணிக்குள் அடைந்தார்கள். அதற்கு முன்பே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துப்பாக்கிச்சூடு முடிவடைந்து விட்டது.

திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் திரு.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240)-ன் சாட்சியம் தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.மகேந்திரன், (எ.த.சா.248)-ன் சாட்சியத்துடன் சில முக்கியத் தகவல்களில் ஒன்றுடன் ஒன்று முரண்படுகிறது என்பது தெரிகிறது. திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் திரு.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240)-ன் சாட்சியத்தில் எந்தவொரு இடத்திலும் எப்.சி.ஐ.ரவுண்டானாவில் தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) இருந்ததாகக் கூறவில்லை. ஆனால் தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) எப்.சி.ஐ.ரவுண்டானாவில் திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் திரு.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240)-வுடன் சேர்ந்து செயல்பட்டதாக ஆணித்தரமாகக் கூறியுள்ளார். மேலும் அவருடன்



OUTSIDE COLLECTORATE POLICE PERSONNEL WITH IG AND DIG

சேர்ந்து கால் தெறிக்க ஓடியதாகவும் கூறியுள்ளார் ஆவேசமான போராட்டக்காரர்களின் கூட்டம் வந்ததும் பின்வாங்கியதாகவும், சற்றுத் தொலைவில் மேற்கொண்டு எப்படி போவது என்பது சம்பந்தமாக கூட்டாளியுடன் கலந்தாலோசித்ததாகவும் கூறியுள்ளார். தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) அவரது சாட்சியத்தில், திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் திரு.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240) அவரது அதிரடிப்படையைச் சேர்ந்தவரை ஒரு முறை எல்.ஆர். குண்டுகளால் சுடவும், மேலும் மூன்று ரப்பர் தோட்டக்களால் சுடவும், உத்தரவிட்டதாகக் கூறவில்லை. அவர்களது சாட்சியத்திலுள்ள இந்த முரண்பாடுகள், இந்த ஆணையம் முன்பான அவர்களது வாக்குமூலங்களின் உண்மைத்தன்மை மீது சந்தேகம் கொள்ளச் செய்கிறது. முரண்பட்ட சாட்சியங்களைக் கூறுகின்ற, ஒரே பதவித்தரத்தில் உள்ளவர்களில், எவருடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்வது என்ற வினாவிற்கு விடை எதுவும், கிடையாது. தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) சொன்னது மற்றும் செய்தது அனைத்தும் கேள்விக்குறியாக இருக்கிறது. இந்த ஆணையத்தால் விசாரிக்கப்பட்ட எ.த.சா.9-ன் சாட்சியம் மற்றும் இதர காவல் ஆளினர்களின் சாட்சியம் ஒத்ததுபோல் தோன்றுகிறது. இரண்டு காவல் கண்காணிப்பாளர்களும் அவசரமாக இடத்தைவிட்டுச் சென்றதாகச் சொல்வதிலும், எழுச்சிமிக்க போராட்டக்காரர்களின் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச்



செல்வதைத் தடுக்க எடுத்த முயற்சிகள் பயனற்றதாகிவிட்டது என்று சொல்வதிலும் மட்டும் முரண்பாடு இல்லை.

திரு.தேவராஜ் (எ.த.சா.9) என்பவர் கூறியுள்ளபடி, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் வரையிலான காவல் துறையினர், ஒரு சம்பவம் தொடர்பாக எவ்வாறு எதிர்வினை அளித்துள்ளனர் என்பது குறித்து, ஆணையத்தின் கருத்தை ஈர்க்கிறது. இரண்டு காவல் கண்காணிப்பாளர்களும் திடீரென்று அந்த இடத்தைவிட்டு வெளியேறினார்கள் என்பதும், அவ்வாறு வெளியேறியபோது எ.த.சா.9-ன் கூற்றுப்படி இதரக் காவலர்களைச் சூழ்நிலைக்குத் தக்கவாறு, எவ்வகையிலாவது அவர்களால் முடிந்த தொலைவிற்குச் சென்று விடுமாறு கூறினார் என்பதும் ஆகும். இது ஒரு சாதாரண மனிதனுக்கு முறையானதாக இருந்தாலும், காவல்துறை உயர் அலுவலர்களுக்குப் பொருந்தாது. இது மதிப்புக்குறைவையே ஏற்படுத்தும். காவல் துறையின் நன்மதிப்பைக் கெடுக்கும், காவல் துறையின் நம்பகத்தன்மையைக் குறைக்கும். இது எவ்வகையிலும் மீண்டும் காவல் துறையினர் மீது நம்பிக்கையை ஏற்படுத்தாது, பாதிப்பைத்தான் ஏற்படுத்தும். சீருடைப் பணியாளர்கள் மீதான மரியாதையையும் நன்மதிப்பையும் இழக்கச் செய்யும்.

இந்த ஆணையம், எட்.சி.ஐராஜேந்திரனாவில் காவல் ஆளினர்கள் காயமடைந்தது பற்றியும், நிகழ்வின்போது கல் எறிந்ததில் காயமடைந்ததாகக் கூறுவது பற்றியும் பரிசீலிக்கிறது. திரு.கண்ணன் (எ.த.சா.21), சார் ஆய்வாளர்



POLICE RETREATING

திரு.டி.ஞானராஜன் (எ.த.சா.13), திரு.ஆ.கிருஷ்ணகுமார் (எ.த.சா.20), திரு.சரண்ராஜ் (எ.த.சா.3), முதல் நிலைக் காவலர் திரு.P.பாஸ்கரன் (எ.த.சா.8), திரு.வெங்கடேஷ்குமார் (எ.த.சா.17), திரு.P.சக்திவேல் (எ.த.சா.30) ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் முதலில் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள். பின்னர் காவல் பணியாளர்களின் பாதுகாப்பு கருதி திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். காவல் துறையினரின் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த பொதுமக்கள் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குக் கூட்டமாக வரத் தொடங்கினார்கள். காயமடைந்த காவல் ஆளினர்கள், தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலிருந்தால் பொதுமக்களைக் கோபமடையச் செய்யும் என்பதால், அவர்கள் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் காயமடைந்த காவலர்களுக்குச் சிகிச்சையளித்த மருத்துவர்.அரவிந்தஹரி ம.சா.610 ஆகவும், மற்றும் மருத்துவர் நிவாஸ்மாறன் ம.சா.609 ஆகவும் விசாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட காயமடைந்த காவல் ஆளினர்களின் விபத்துப் பதிவேடுகளின் நகல்கள் மற்றும் காயச்சான்றிதழ்கள் முறையே ம.சா.ஆ.898, ம.சா.ஆ.900, ம.சா.ஆ.901, ம.சா.ஆ.906, ம.சா.ஆ.909, ம.சா.ஆ.910, ம.சா.ஆ.917, ம.சா.ஆ.927 மற்றும் ம.சா.ஆ.928 ஆகக் குறியிடப்பட்டுள்ளன. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட காயமடைந்த காவலர்களுக்குச் சிகிச்சையளித்த மருத்துவர்கள் வழங்கிய விபத்துப் பதிவேட்டின் நகல்கள் மற்றும்



காயச்சான்றிதழ்கள் முறையே ம.சா.ஆ.1053, ம.சா.ஆ.1054, ம.சா.ஆ.1055, ம.சா.ஆ.1056, ம.சா.ஆ.1057, ம.சா.ஆ.1058, ம.சா.ஆ.1059, ம.சா.ஆ.1060, ம.சா.ஆ.1068, ம.சா.ஆ.1069, ம.சா.ஆ.1070, ம.சா.ஆ.1071, ம.சா.ஆ.1072 மற்றும் ம.சா.ஆ.1073 ஆக மருத்துவர் ஜரின் எட்வின் அருணா மற்றும் மருத்துவர் செந்தில் ஆறுமுகம் ஆகியோர் மூலம் குறிக்கப்பட்டுள்ளன. விபத்துப்பதிவேட்டு நகல்கள் மற்றும் காயச்சான்றிதழ்கள் இவற்றை உன்னிப்பாக கவனித்துப் பார்த்தால் காவல் ஆளினர்களுக்கு மேலோட்டமான அல்லது சாதாரண அல்லது எலும்பு முறிவு கூட இல்லாத, எலும்பு ஆழத்திலுள்ள காயங்கள் மட்டுமே ஏற்பட்டுள்ளது தெரியும். இது தவிர சாட்சியத்தில் முன்னிலைப்படுத்துவது யாதெனில், இந்தக் காயமடைந்த காவலர்கள், எப்.சி.ஐ.ரவுண்டானாவிற்கு தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.மகேந்திரன் (எ.த.சா.248) வந்த போது அதிரடிப்படையில் வந்தனர்கள். 3வது மைல் பாலம் நோக்கிச் சென்றிருக்கிறார்கள். திகசென்று காவல் கண்காணிப்பாளர், காவலர்களுடன் பின்வாங்கியுள்ளார். வஜ்ரா வாகனம் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசத் தொடங்கியதும் போராட்டக்காரர்கள் கற்களை வீசினார்கள், காவல் கண்காணிப்பாளர் உட்பட காவல் ஆளினர்களும் அதிரடிப்படை யினரும் பாதுகாப்புக்காக ஒரு லாரி ஷெட்டை நோக்கி ஓடினார்கள். அதன் பிறகு போராட்டக் கூட்டத்தினர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச் சென்றார்கள்.

திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் திரு.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240)-ன் மேற்பார்வையின் கீழ்,



NEAR COLLECTORATE MAIN ARCH

எப்.சி.ஐ.ஏவுண்டானா அருகில் நடந்த நிகழ்வுகளைக் காவல் துறையினர் எவ்வாறு எதிர்கொண்டனர் என்பது சம்பந்தமான சில விபரங்களை ஆணையம் பரிசீலித்தது. ஆணையம், இந்த வழக்கில் தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.மகேந்திரன், (எ.த.சா.248) அதே இடத்தில், அதே நேரத்தில் என்ன நடந்தது என்பது குறித்துத் தெரிவித்துள்ளதைக் குறிப்பிட விழைகிறது.

போராட்டக் கூட்டத்தினர் ஆவேசமாக இருந்தாலும், ஊர்வலம் சென்ற போது சில நபர்கள் சில இடங்களில் தவறாக நடந்துள்ளனர். குறிப்பாக, துரித உணவகம் அருகில் சில காவலர்களையும், மகளிர்க் காவலர்களையும் போராட்டக்காரர்கள் தாக்க எண்ணியபோது, நல்லெண்ணம் கொண்ட மனிதர்கள் விரைந்து சென்று, ஆத்திரமடைந்த போராட்டக்காரர்களின் பிடியிலிருந்து மீட்டு அவர்களுக்கு உதவி செய்துள்ளார்கள். போராட்டக்காரர்களின் கடும் கோபத்திற்கு ஆளான காவலரை திரு.இராமச்சந்திரன் (ம.சா.16) விரைந்து வந்து உதவி செய்து மனிதாபிமானத்துடன் அவரைக் காப்பாற்றினார். போராட்டக்காரர்களைச் சேர்ந்த இந்தச் சாட்சி, 3வது மைல் பாலத்தை அடைந்ததும், கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வெடித்து சிதறின. காவல் துறையினர் ஓடிய போது ஒரு காவலர், சாலை ஓரத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்த சரளைக் கற்களில் விழுந்து விட்டார், அந்தச் சாட்சியும், அவரைப் போன்ற மனம்கொண்ட ஐந்து அல்லது ஆறு போராட்டக்காரர்களும் சேர்ந்து, அவரைத் தூக்கிவிட்டு உதவி செய்தனர். நான்கு மகளிர்க் காவலர்கள் மற்றும் ஒரு ஆண் காவலர் ஆகியோரை ஆவேசமான



INSIDE COLLECTORATE MAIN ARCH

போராட்டக்காரர்களின் பிடியில் இருந்து காப்பாற்றினர். அவர்கள் காவல் ஆளினர்களைச் சற்றுத் தொலைவில் இருந்த ஒரு வீட்டிற்குத் தூக்கிச் சென்றார்கள். ம.சா.10 திரு.கிளின்டன் அவரது சாட்சியத்தில், எப்.சி.ஐ ரவுண்டானாவில் காலை 11.30 மணியளவில் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வெடித்தன. அந்தப் புகையிலும் தைரியமாக அவரும் அவருடன் சேர்ந்து சில போராட்டக்காரர்களும் முன்நோக்கிச் சென்றார்கள். அவர்கள் பைபாஸ் பாலம் அருகில் வந்த போது, குறுக்கே வந்த ஒரு காவலர் போராட்டக்காரர்களின் பிடியில் சிக்கிக் கொண்டார். அவரைச் சிலர் தாக்க முயன்றார்கள், அந்தச் சாட்சியும் அவரது சகோதரரும் அவரது மைத்துனரும், பாதிக்கப்பட்ட அந்தக் காவலரை ஆவேசமான போராட்டக்காரர்களின் பிடியில் இருந்து காப்பாற்றினார்கள். காயமடைந்த காவலர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தியதும், நல்லெண்ணம் கொண்ட போராட்டக்காரர்கள் சிலர் சிகிச்சைக்குக் கொண்டு சென்றதும், அரிதான செயல்களுக்கான எடுத்துக்காட்டுகளாகும். இவை ஆவணத்தில் பதிவு செய்வதற்குத் தகுதி வாய்ந்தவையாகும்.

**<u>மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காவல்துறையின் தவறான அணுகுமுறை - பேரிடருக்கு வழிவகுத்த போராட்டக்காரர்களின் மனிதக் கூட்டம் - மனிதன் உருவாக்கியது</u>**

போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் மொத்தமாக நுழைவதைத் தடுக்கும் நோக்கில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செய்த



INJURIED PC MANIKANDAN

முன்னேற்பாடுகள் குறைபாடுடையவை என்பதை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் சுற்றுப் பகுதிகளிலும் நடந்த நிகழ்வுகளும் வெளிப்படுத்துகின்றன. இந்த ஆணையத்தின் பார்வையில், எப்.சி.ஐ.ரவுண்டானாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு வஜ்ரா வாகனத்தையும், ஸ்டெர்லைட் ஆலை முன்பாக தனியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றொரு வஜ்ரா வாகனத்தையும், வருண் வாகனத்தையும் சம்பவ இடத்திற்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். மற்ற இடங்களிலிருந்து வருண் வாகனம், போதிய தீயணைப்பு வாகனங்களையும் தேவைப்பட்டால் தண்ணீர் பீய்ச்சியடிக்க மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு காவல் துறையினர் கொண்டு வந்திருந்தால் அது சரியானதாக இருந்திருக்குமென்று கருதுகிறது. இந்த வாகனங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்னால், சாலையில் குறுக்காக அல்லது மாற்றாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லும் கால்வாய் மீது உள்ள சிறிய பாலத்திற்குக் குறுக்கே நிறுத்தி, ஆயுதங்களையும் காவலர்களையும் ஏற்றிக்கொண்டு, வாகனங்களைப் பயன்படுத்தியிருந்தால், எழுச்சிமிக்க போராட்டக்காரர்கள் ஆவேசமான மனநிலையில் இருந்தாலும் தடுக்கப்பட்டு, அவர்களின் நிலையைத் தணித்திருக்கலாம். இத்தருணத்தில் குறிப்பிட வேண்டியது ஜே.எஸ்.பி. திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) எப்.சி.ஐ.ரவுண்டானாவில் இருந்த வஜ்ரா வாகனத்திலிருந்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடிக்கச் செய்து வஜ்ரா வாகனத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் கொண்டு வருமாறு அறிவுறுத்தினார். ஆனால் வெற்றி பெறவில்லை. கூட்டம் கலையவில்லை. தேவைப்பட்டால் பயன்படுத்தலாம் என்று



PUBLIC SCATTERED NEAR COLLECTORATE MAIN ARCH

வஜ்ரா வாகனங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் ஜே.எஸ்.பி. திரு.எஸ்.செல்வநாகரத்தினத்தால் (எ.த.சா.242) அறிவுரைகளை மீறி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வெகுதொலைவில் உள்ள தட்டப்பாறைக்கு அருகில் ஒரு சிறிய சாலைக்கு வஜ்ரா வாகனங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. எவ்வாறு அது நடைபெற்றது என்பது விளக்கப்படவில்லை. இது சம்பந்தமாக திரு.டி.எஸ்.கபாலி (எ.த.சா.194) மற்றும் திரு.ஆ.மாரிமுத்து (எ.த.சா.193) ஆகியோர் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். குறிப்பாக வஜ்ரா வாகனங்களுக்குப் பொறுப்பான காவல் ஆளினர்கள் மீது காவல் துறை நிர்வாகத்தால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஏற்கனவே வஜ்ரா வாகனத்திற்குத் தட்டுப்பாடு இருந்ததால், தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) ஐந்து வஜ்ரா வாகனங்கள் கேட்டிருப்பினும், இரண்டு வாகனங்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றன. மேற்சொன்ன காவல்துறையின் கட்டுப்பாட்டில் இருந்த இரண்டு வஜ்ரா வாகனங்களும் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் தேவைக்குப் பயன்படுத்தப்பட இயலாத வகையில் நிறுத்தப்பட்டிருந்தன. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் முதலில் ஒரு தீயணைப்பு வாகனம் மட்டும் நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் அந்த ஒரு தீயணைப்பு வாகனமும் மாவட்டக் காவல் அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. போராட்டக்காரர்களின் உடனடி அச்சுறுத்தல் கண்முன்னர் நிகழ்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலையிலும் திறன்மிகு காவல் உயர் அலுவலர்கள் அதனைப் பொருட்படுத்தாமல், வருண், வஜ்ரா



PROTESTER NEAR NH ROAD

தீயணைப்பு வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் போன்ற வாகனங்களைக் கொண்டு தடை ஏற்படுத்தும் குறைந்தபட்ச முயற்சியையும் மேற்கொள்ளாமல், ஏன் அலட்சியமாக இருந்துள்ளார்கள் எனக் காணும் போது வியப்பாகவும் வேதனையாகவும் உள்ளது. எஸ்.சி.ஐ.ரவுண்டானாவில் தடுமாறிய டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரட்கர், இ.கா.ப. (எ.த.சா.246), எஸ்.சி.ஐ.ரவுண்டானாவை அப்படியே விட்டுவிட்டு மாவட்டக் காவல் அலுவலகத்திற்கு ஐ.ஜி. (எ.கு.சா.247)-ஐச் சந்திப்பதற்காகச் சென்றுவிட்டதை நினைவில் கொள்ளவேண்டும். டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரட்கர், இ.கா.ப. (எ.த.சா.246), எஸ்.சி.ஐ.ரவுண்டானாவில் என்ன நடந்தது, கூட்டத்தினரின் மனநிலை என்ன, குறைந்தபட்ச விளைவுகளுடன் போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான செயல்திட்டம் என்ன, போராட்டக்காரர்களின் கூட்டத்திற்குத் தகுந்தவாறு காவல் துறையினரின் பலம் இல்லை போன்ற நுணுக்கமான விவரங்களையும் விளக்கியிருக்க வேண்டும். அத்தகைய துடிப்பான மற்றும் பயனளிக்கத்தக்க ஒரு ஆலோசனையை செய்திருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கவும், மேற்சொன்னவாறு, வருண், வஜ்ரா, தீயணைப்பு வாகனம் மற்றும் ஆம்புலன்ஸ்கள் இவற்றுடன் ஆயுதம் வைத்திருக்கும் காவலர்களும் உள்ள வலிமையான தடுப்பு அமைப்புகளைப் பயன்படுத்துவது குறித்து பார்த்திருக்கவும் கூடும். மேற்சொன்ன நடவடிக்கை, போராட்டக்காரர்களை அச்சுறுத்துவதாகவும், அவர்களைத் தவிர்த்திருக்கக் கூடியதாகவும், ஊர்வலத்தின் பின்பகுதியில் இருந்த போராட்டக்காரர்களுக்கு ஒரு தடையாகவும் அமைந்து மிக்கப் பயனுள்ளதாக



PROTESTER LAST CROWN WITH BANNER ENTERING INTO
THE COLLECTORATE MAIN ARCH

இருந்திருக்கும் என இந்த ஆணையம் கருதுகிறது. இட அமைப்பின்படி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும், தேசிய நெடுஞ்சாலைக்கும் இடையே ஒரு கால்வாய் இருக்கிறது. அதன் அகலத்திற்கு ஒரு சிறிய பாலம் இருக்கிறது. அந்தப் பாலமே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லும் முதன்மை வழியாகும். மேற்சொன்ன கால்வாய் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு இணையாகச் செல்கிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்வதற்கு இந்தப் பாலத்தைத் தவிர வேறு வழி கிடையாது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு இரண்டு பக்கங்களிலும் ஹெரிடேஜ் பூங்கா வழியாக இருப்பினும், கால்வாய்க்குள் இறங்கி அதன் பிறகு ஹெரிடேஜ் பூங்காவிற்குச் செல்வதற்கு ஏறித்தான் செல்ல வேண்டுமே தவிர வேறு வழி கிடையாது. இது ஒரு சிரமமான செயல் என்பதால் போராட்டக்காரர்களுக்கும் காவலர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறுகளின் போது அவ்வாறு செய்யப்படவில்லை.

மேற்சொன்னவாறு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்போ அல்லது குறைந்தபட்சம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்வதற்கான அந்தச் சிறிய பாலத்திற்குக் குறுக்கிலோ ஒரு தடுப்பு (barricade) அமைக்கத் தவறியதால், இது போன்ற சூழலைக் கையாள்வதற்குத் தயாராக இல்லாமல் செய்துவிட்டது. பொதுவாக, காவல்துறை அலுவலர்களும், உயர் அலுவலர்களும் ரோந்து செல்லுதல், விழிப்புடன் இருத்தல், தீர்வு காணும் வகையில் தேவையான ஆதார வளங்களைக் கொண்டிருத்தல் போன்றவற்றை அவசர சூழ்நிலைக்கேற்ப மேற்கொள்ள வேண்டும். திடீரெனச் செயல்பட இயலாது என்பதில்



PROTESTERS BROUGHT INJURIES PC MANIKANDAN

சந்தேகமில்லை. ஆனால் இந்தச் சூழ்நிலை வருவதற்கு முன்னரே, பின்னர் நடக்கப்போவதைக் கணித்து, அவற்றுக்கான தீர்வுகள் என்ன என்பதையும் மனதில் ஓட்டிப் பார்க்க வேண்டும். இந்தச் சமயத்தில், அப்போதைய ஏ.டி.ஜி.பி. (L&O) தற்போது டி.ஜி.பி. (ஓய்வு) திரு.விஜய்குமார், இ.கா.ப. (எ.த.சா.252)-ன் சாட்சியத்தைக் காண வேண்டும். திரு.விஜய்குமார், இ.கா.ப (எ.த.சா.252)-ன் பொறுப்பினைப் பற்றி அது தெளிவாகக் கூறியுள்ளது. தொண்ணூற்று ஒன்பது (99) நாட்கள் அமைதியாக நடந்த ஆர்ப்பாட்டம், கலவரமாக மாறியதற்கான காரணம் குறித்து இந்த ஆணையம் அவரிடம் கேட்ட போது, மூத்த மற்றும் திறன்வாய்ந்த காவல் அலுவலரான அவர், சூழ்நிலையைப் பொருத்து, அமைதியான மக்கள் கூட்டம், வன்முறைக் கூட்டமாக மாறலாம். பொதுமக்களை அணுகும் முறை, பொதுமக்களிடம் உரையாற்றும் முறை, சூழ்நிலையின் அவசரத்திற்கேற்ப பின்பற்றப்படும் அத்தகைய ஏனைய முறைகள் அனைத்தும் போராட்டக் கூட்டத்தினை அமைதிப்படுத்துவதற்கான நீண்ட வழிமுறைகளாக இருக்கும் எனப் பதிலுரைத்தார். அவரது பார்வையில், காவல்துறை அலுவலர்களின் தோற்றமும் முகபாவமும் ஆளுமையும் மிக முக்கியப் பங்கு வகிக்கும். கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் கலையானது, கொடுக்கப்பட்ட யாதொரு சூழ்நிலையையும் கையாளுகின்ற குறிப்பிட்ட காவல்துறை அலுவலரின் திறனைப் பொருத்ததாகும். மேற்சொன்ன திறன், ஒவ்வொரு காவல்துறை அலுவலருக்கும் மாறுபடும் எனவும் கருத்திட்டுள்ளார். ஏ.டி.ஜி.பி. (L&O) திரு.விஜய்குமார், இ.கா.ப. (எ.த.சா.252)-ன்



PROTESTERS RETREATING IN COLLECTORATE MAIN ARCH


மேற்சொன்ன அறிவார்ந்த கருத்துடன், ஐ.ஜி. டி.ஐ.ஜி. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், ஜே.எஸ்.பி. மற்றும் கீழுள்ள காவல்துறைப் பணியாளர்களின் செயல்திறனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அவர்களின் திட்டம் தவறானது என்பதும், அதனைச் செயல்படுத்தியதில் திறமை இல்லை என்பதும், ஒருபக்கம் காவல்துறை அலுவலர்களுக்குள்ளும், மறுபக்கப் காவல்துறைக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் இடையே ஒருங்கிணைப்பு இல்லை என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது. டி.ஐ.ஜி. திரு.கைலேஷ்குமார் யாதவ் இ.கா.ப (எ.த.சா.247) தொலைக்காட்சியைப் பார்த்துவிட்டு போராட்டக்காரர்களின் மனநிலையை ஊகித்து, அவரது கட்டுப்பாட்டின் கீழுள்ள தெற்கு சரகத்தின் வெவ்வேறு மாவட்டங்களுக்கான காவல் கண்காணிப்பாளர்களை அவரவரின் அதிரடிப்படையுடன் தூத்துக்குடிக்கு விரைந்து செல்ல உத்தரவிடுவது உகந்தது எனக் கருதி 22.05.2018-ஆம் நாள் காலை 10.50 மணியளவில்தான் அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார் என்னும் உண்மை, மேற்சொன்ன இந்த ஆணையத்தின் கருத்தினை உறுதி செய்கிறது. ஆனால், மேற்சொன்ன காவல் கண்காணிப்பாளர்கள் அவர்களது அதிரடிப்படையினருடன் தூத்துக்குடிக்கு வந்து சேரும் முன்னரே, அனைத்துச் சேதங்களும் ஏற்பட்டிருந்தன. மேற்சொன்ன எண்ணம் காவல்துறைத் தலைவருக்கு முன்னரே வந்திருக்க வேண்டும். போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து அவர்களது குறைகளைக் கூறுவதற்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குப் புறப்படுவதாகத் திட்டமிட்டுள்ளார்கள் எனக் காவல்துறை



COLLECTORATE PROTICO

நுண்ணறிவுப் பிரிவிலிருந்து வலுவான தகவல் கிடைக்கப்பெற்ற நிலையில், குறைந்தபட்சம், புறப்பட்டிருந்த போராட்டக்காரர்களின் கூட்டம், பனிமயமாதா கோயிலில் பெருங்கூட்டமாக மாறிக் கொண்டிருந்த போதே, இந்த எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். மேற்சொன்னவாறு, காவல்துறைத் தலைவர், காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டிருக்கும் நேரத்தில், காவல்துறைக் கண்காணிப்பாளர்களும் அவர்களின் அதிரடிப் படைகளும் தூத்துக்குடிக்கு வந்து சேருவதற்குப் போதிய கால அவகாசம் கிடைத்திருக்கும். அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கே வந்திருப்பார்கள், அங்கிருந்த காவல் பணியாளர்களுக்கு உத்தரவு வழங்கியிருப்பார்கள், இந்த முழு நிகழ்வின் மீதும் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை அது ஏற்படுத்தியிருக்கும். நிகழ்வுகள் இவ்வளவு மோசமாகச் சென்றிருக்காது.

தூத்துக்குடிக் காவல் கண்காணிப்பாளர் திரு.மகேந்திரன், (எ.த.சா.248) மற்றும் திருநெல்வேலி காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் திரு.அருண்சக்தி குமார், இ.கா.ப. (எ.த.சா.240) ஆகியோர் முதலில் எப்.சி.ஐ.ரவுண்டானாவில் இருந்து சென்றார்கள் என்றும், ஆனால் பிற்பகல் 1.00 மணி வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்து சேரவில்லை என்பதும், அதற்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் துப்பாக்கிச்சூடு ஏறத்தாழ முடிந்திருந்தது என்பதும் நினைவிருக்கலாம். எப்.சி.ஐ.ரவுண்டானாவை விட்டுச் சென்றது மட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மிக தாமதமாக வந்து சேர்ந்தது என அவர்களின் நடத்தை எதிரிடை விமர்சனம் பெறத் தகுந்ததாக உள்ளது. அதைப்





INSIDE COLLECTORATE

போலவே, ஜே.எஸ்.பி. திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) நண்பகல் 12.00 மணிக்கு அவரது வாகனத்தில் எப்.சி.ஐ.ரவுண்டானாவில் இருந்து மாவட்டக் காவல் அலுவலகத்திற்குச் சென்றார். அவருக்கு மட்டுமே தெரிந்த காரணங்களால், அங்கு யாதொரு காவல் ஆளினரும் காணப்படவில்லை. பின்னர், அவர் மடத்தூருக்கு புறப்பட்டுச் சென்றார். அவரது கூற்றுப்படி அங்கு ஏ.டி.எஸ்.பி திரு.பொன்ராம், (எ.த.சா.146), டி.எஸ்.பி. திரு.முத்தமிழ் (எ.த.சா.217) மற்றும் 60 காவலர்கள் இருந்துள்ளார்கள். அவர்களைப் பிற்பகல் 12.45 மணி முதல் 1.00 மணிக்குள் மாவட்டக் காவல் அலுவலகத்திற்கு அழைத்து வந்தார்கள். அவர், ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) மற்றும் டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர், இ.கா.ப. (எ.த.சா.246) ஆகியோர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திற்கு அருகில் இருந்ததைப் பார்த்துள்ளார். அவர் அவரது சாட்சியத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துப்பாக்கிச்சூடு நடந்தது தெரியாது என்றும், தீ வைத்துக் கொளுத்தப்பட்ட ஸ்டெர்லைட் குடியிருப்புகளில் உள்ள 200 முதல் 300 நபர்களை மீட்குமாறு, ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) அறிவுறுத்தியதாகவும், டி.எஸ்.பி. திரு.முத்தமிழ் (எ.த.சா.217) மற்றும் ஏ.டி.எஸ்.பி. திரு.பொன்ராம் (எ.த.சா.146) ஆகியோருடன் நடந்தே ஸ்டெர்லைட் குடியிருப்புக்கு வந்து சேர்ந்தார்கள் என்றும், அவர்களுடன் 50, 60 காவலர்களும் வந்தார்கள் என்றும், அப்பொழுது பிற்பகல் 1.50 மணி இருக்கும் என்றும், மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் கண்ணாடித் துண்டுகள்




INSIDE COLLECTORATE

சிதறிக்கிடந்ததை அவர் பார்த்தார் என்றும், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கான வழியில், காயமடைந்தோரையோ, இறந்து போனோரின் உடலையோ பார்க்கவில்லை என்றும், ஸ்டெர்லைட் குடியிருப்புக்குள் 50 கலகக்காரர்களையும், குடியிருப்புக்கு வெளியே 150 கலகக்காரர்களையும் பார்த்தார் என்றும், அவர்கள் வெளியே துரத்தி விடப்பட்டார்கள் என்றும் கூறியுள்ளார். ஒரு சில வாகனங்கள் எரிந்திருந்தன என்றும், மேலும் சில வாகனங்கள் முற்றிலுமாக எரிந்திருந்தன என்றும், மூவரும் சேர்ந்து ஸ்டெர்லைட் குடியிருப்பின் ஒவ்வொரு பிளாக்கிற்கும் சென்று பார்வையிட்டு அங்கு குடியிருந்தவர்களை மீட்டு 200 நபர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், ஸ்டெர்லைட் குடியிருப்பில் மீட்பு நடவடிக்கைக்குப் பிறகு டி.எஸ்.பி. திரு.முத்தமிழ் (எ.த.சா.217) உடன் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலைக்கு நடந்தே சென்றார்கள் என்றும், அப்பொழுது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றதாக அவர்களுக்குத் தகவல் கிடைத்தது என்றும், அதற்கான காரணத்தை விசாரிக்க முயன்றபோது அந்தப் பகுதி முழுவதும் வெறிச்சோடிக் கிடந்தது என்றும், அதன் பின்னர் அறிவுரையின்பேரில் சோரீஸ்புரம் சென்று ஒரு கோவிலில் இருந்த மதுரை ஆயுதப்படைக் காவல் ஆளினர்களை மீட்டனர் என்றும், அதன் பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு திரும்பினர் என்றும் கூறினார்.




INSIDE COLLECTORATE

மடத்தூர் சந்திப்பில் எ.டி.எஸ்.பி திரு.பொன்ராம், (எ.த.சா.146) மற்றும் காவலர்களுடன் இருந்த டி.எஸ்.பி. திரு.முத்தமிழ் (எ.த.சா.217)-ன் கூற்று சம்பந்தமாக, ஜே.எஸ்.பி. திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242)-ன் சாட்சியத்தின் உண்மைத்தன்மையைக் காண வேண்டும் அவர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்ல ஜே.எஸ்.பி. திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) மடத்தூர் சென்றார். மடத்தூருக்கு ஜே.எஸ்.பி. திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) வந்ததாக டி.எஸ்.பி. திரு.முத்தமிழ் (எ.த.சா.217) சாட்சியத்தில் எந்தவொரு இடத்திலும் கூறவில்லை என்பதால் ஜே.எஸ்.பி. திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242)-ன் சாட்சியம் பொய்யெனக் கருதப்படுகிறது. அவரது கூற்றுப்படி வான்செய்தி (VHF) மூலம் கிடைத்த தகவலின்பேரில், அவர்கள் பிற்பகல் 12.10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தார்கள். டி.எஸ்.பி. திரு.முத்தமிழ் (எ.த.சா.217), எ.டி.எஸ்.பி. திரு.பொன்ராம், (எ.த.சா.146) மற்றும் காவல் பணியாளர்களுடன் பிற்பகல் 12.45 மணிக்கும் 1.00 மணிக்கும் இடையே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை அடைந்ததாக ஜே.எஸ்.பி. திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப (எ.த.சா.242) அவர்கள் கூறுவது முற்றிலும் முரணாக உள்ளது. ஜே.எஸ்.பி. திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242), ஸ்டெர்லைட் குடியிருப்புகளில் குடியிருப்பவர்களை மீட்கும் நடவடிக்கை முடிந்த பிறகு, அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு



DIG IN INSIDE COLLECTORATE

புறப்பட்டதாகவும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்தபோதுதான் துப்பாக்கிச்சூடு அவருக்குத் தெரிய வந்தது என்றும், கூறுவது முற்றிலும் பொய்யானது. இது அதிர்ச்சியளிக்கிறது. துப்பாக்கிச்சூட்டில் ஐந்து உயிர்களை இழந்திருக்கும் நிகழ்வு சாதாரணமானது அல்ல. காவல்துறையில் ஜே.எஸ்.பி. நிலையில் இருப்பவருக்கு இது தெரியாது என்று கூறித் தப்பிக்க முடியாது. நுண்ணறிவு இல்லை என்பது அறியாமைப் பாசாங்கு ஆகும். ஏ.டி.எஸ்.பி. திரு.பொன்ராம், (எ.த.சா.146)-ன் சாட்சியம் டி.எஸ்.பி. திரு.முத்தமிழ் (எ.த.சா.217)-ன் சாட்சியத்துடன் கிட்டத்தட்ட எல்லா வகையிலும் ஒத்துப்போகிறது. ஆனால் ஜே.எஸ்.பி. திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242)-ன் சாட்சியத்துடன் மாறுபடுகிறது. ஜே.எஸ்.பி. திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) பிற்பகல் 12.45 மணிக்கு வந்ததாக கூறுவதும் தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும் திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும் பிற்பகல் 12.45 மணிக்கும் 1.00 மணிக்கும் இடையே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்ததாகக் கூறுவதும், அவர்கள் பணியை எய்த்துள்ளனர் எனத் தோன்றச் செய்கிறது.

அதே நேரத்தில் பைபாஸ் பாலத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஆண் காவலர்கள் மற்றும் மகளிர் காவலர்களின் இருசக்கர வாகனங்கள் எரியும் காட்சியைக் கடந்தோம். அதில் மேற்சொன்ன தனியாருக்குச் சொந்தமான வாகனங்கள் போராட்டக்காரர்கள் ஊர்வலம் வரும் பாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன என்பதைக் குறிப்பிட வேண்டும். போராட்டக்காரர்களின்



INSIDE COLLECTORATE

பாதையில் அவ்வாறு நிறுத்தி வைத்த வாகனங்கள் அந்தக் கூட்டத்தால் நிச்சயமாக சேதப்படுத்தப்படும் அல்லது எரிக்கப்படும் என்பதை அந்த வாகனங்களின் உரிமையாளர்கள் உணர்ந்திருக்க வேண்டும். சம்மதத்துடன் நேரும் இடர்களுக்கு இழப்பீடு கிடைக்காது என்றும், அவ்வாறான சேதங்களுக்கு யாதொரு நிவாரணத் தொகையும் கிடைக்காது என்றும் கூறும் புகழ்பெற்ற கோட்பாடான "Volenti non fit injuria" என்பதை இந்த ஆணையம் நினைவுபடுத்துகிறது. வன்முறையாளர்கள் யார் என்று காவல் பணியாளர்களும் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. காப்பீட்டுத் தொகை இல்லை என்றாலோ, காப்பீட்டைப் புதுப்பிக்கத் தவறி இருந்தாலோ, அரசிடமிருந்து இழப்பீடு கோரமுடியாது. இழப்பீட்டு நிறுவனத்திடமிருந்தும் கிடைக்கப் பெறாது.

எப்.சி.ஐ.ரவுண்டானாவில் மேற்சொன்ன சோகமான செயல்பாட்டிற்குப் பிறகு, டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர், இ.கா.ப. (எ.கு.சா.246) மாவட்டக் காவல் அலுவலகத்திற்குச் சென்று ஐ.ஜி-யைச் சந்தித்தார். ஐ.ஜி., அவரை மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயில் வளைவில் நிலவும் சூழலைக் கையாளுவதற்கு அங்கு செல்லுமாறு அறிவுறுத்தினார். அதன்படி டி.ஐ.ஜி. மேற்சொன்ன வளைவைச் சென்றடைந்தார். ஐ.ஜி.யும் தொடர்ந்து சென்றார். ஐ.ஜி-யும், டி.ஐ.ஜி-யும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிப் போராட்டக்காரர்கள் கூட்டம் அலைமோதியதைப் பார்த்தார்கள். டி.ஐ.ஜி. அந்தச் சூழலைக் கையாளும் வகையில், ஐ.ஜி., மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தலைவாயிலை ஒட்டியுள்ள சாலையில் சென்றுவிட்டார். அந்தச் சூழ்நிலையில் அங்கிருந்த ஆளிநர்களுக்கு



INSIDE COLLECTORATE

யாதொரு அறிவுரையும் வழங்காமல், ஐ.ஜி. அப்படியே விட்டுவிட்டுச் சென்றது ஏமாற்றம் அளிக்கிறது. டி.ஐ.ஜி. அவரது பங்கிற்கு அங்கிருந்து பின்வாங்கி, வளைவிற்குள் சென்றார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் கூட்டம் வரத் தொடங்கியதும் அங்கு பாதுகாப்புப் பணிக்காக அமர்த்தப்பட்டிருந்த காவல் பணியாளர்களும் அங்கிருந்து பின்வாங்கி, அந்த இடத்தைவிட்டு மேற்கு நோக்கியும், வளைவிற்குள்ளும் தப்பிச் சென்றனர்.

காவல் ஆய்வாளரான திரு.திருமலை (எ.த.சா.197) மற்றும் சிறப்பு நிர்வாக நடுவரான திரு.சேகர் (எ.த.சா.182) அவரது சாட்சியத்தில், திரு.சேகர் (எ.த.சா.182) சம்பவ இடத்தின் சூழல் மோசமாக இருந்ததாகக் கருதியதால், சூழ்நிலையின் தேவையை உணர்ந்து, திரு.சேகர் (எ.த.சா.182) போராட்டக்காரர்களின் மீது Sten shells - கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்தும்படி உத்தரவிட்டுள்ளார். காவல் சார் ஆய்வாளர் திரு.பூமிபாலன் (எ.த.சா.196) இரண்டு Sten shells-ஆல் சுட்டார். இரண்டு சாட்சிகளின் (எ.த.சா.197 மற்றும் எ.த.சா.182) சாட்சியம் இந்த ஆணையத்தால் ஏற்கனவே அறிக்கை தொகுதி-I-ல் பரிசீலிக்கப்பட்டுள்ளது. ஆவண ஆதாரங்களை ஆய்வு செய்ததிலிருந்து, அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்தார்கள் என்பதும், துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு உத்தரவிட்டார் என்பதும் பொய்யானது மற்றும் கற்பனையானது எனக் கோரும் அவர்களின் கூற்று உண்மையெனத் தெரிய வருகிறது. திரு.சேகர் (எ.த.சா.182) இந்த ஆணையத்தால் விசாரணை செய்யப்படும் போது வினவப்பட்ட வினாக்களுக்கு திரு.சேகர் (எ.த.சா.182) அளித்த விடைகளிலிருந்தா




CAR PARKING IN COLLECTORATE

படக்காட்சிகளிலிருந்தும் அது உறுதியாகிறது. படக்காட்சிகளில் எந்தவொரு இடத்திலும் அவரையோ, காவல் ஆய்வாளர் திரு.திருமலையையோ (எ.த.சா.197) காண இயலவில்லை. சிறப்பு நிருவாக நடுவரான திரு.சேகர் (எ.த.சா.182) மற்றும் காவல் ஆய்வாளரான திரு.திருமலை (எ.த.சா.197) ஆகிய இருவரும், Sten shells பயன்படுத்துவதற்கு முன் திரு.திருமலை (எ.த.சா.197) மெகா போன் மூலம் போராட்டக்காரர்களின் கூட்டத்தைச் சட்டவிரோதக் கூட்டம் என்றும், அவர்களாகக் கலைந்து செல்லாவிட்டால் காவல் துறையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்திக் கூட்டத்தைக் கலைக்க வேண்டியிருக்கும் என அறிவித்தார் என்றும் கூறுகிறார்கள். ஆனால் காவல் துறையினர் தாக்கல் செய்த படக்காட்சிகளில் எந்தவொரு இடத்திலும் காவல் ஆய்வாளர் திரு.திருமலை (எ.த.சா.197) மற்றும் சிறப்பு நிருவாக நடுவர் திரு.சேகர் (எ.த.சா.182) ஆகிய இருவருமே இல்லை, மேலும் அதனை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். மொத்தத்தில் இருவரது சாட்சியங்களைப் பார்க்கும்போது, இருவரும் ஒருவொருக்கொருவர் ஒத்ததாகக் கூறியிருக்கும் அவர்களின் சாட்சியத்தில் நம்பகத்தன்மை இல்லை. ஒப்புக்கொள்ளாமல் அனுமானமாகச் சொன்னாலும், காவல் ஆய்வாளர் திரு.திருமலை (எ.த.சா.197) மெகாபோன் மூலமாக இவ்வாறான அறிவிப்பு செய்திருக்க இயலாது, அந்த நேரத்தில் போராட்டக்காரர்கள் 500 மீட்டர் தூரத்தில் இருக்கும்போது திரு.திருமலை (எ.த.சா.197) அவ்வாறு சொல்லியிருக்க வாய்ப்பு இல்லை. சத்தமிட்டுக்கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நடந்து வந்து கொண்டிருந்த



INSIDE COLLECTORATE

போராட்டக்காரர்களின் காதுகளில், மெகாபோன் மூலமான எச்சரிக்கை எவ்வாறு கேட்டிருக்கக் கூடும் என வியப்பாக உள்ளது. இந்த இரண்டு சாட்சிகளும் ஒரே மாதிரியாக அவர்கள் சொல்லும் விதத்தில், மேற்சொன்ன சூழலில் Sten shells-ஆல் சுடப்பட்டதாகக் கூறுவது நம்ப முடியாதது. மேலும் இந்த இரண்டு சாட்சிகளும் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் அங்கு இருந்தார்கள் என்று சொல்வதே பொய்யானதாகும்.

சம்பவ இடத்தில் ஏ.டி.எஸ்.பி திரு.மாரிமுத்து இருந்தார். அவர் எ.த.சா.225 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் சாட்சியத்தில், சம்பவ இடத்தில் காவல் ஆய்வாளர் திரு.திருமலை (எ.த.சா.197) மற்றும் சிறப்பு நிருவாக நடுவர் திரு.சேகர் (எ.த.சா.182) ஆகியோர் இருந்தார்கள் என்று கூறியுள்ளார். அவர் சாட்சியத்தில், சிறப்பு நிருவாக நடுவரான திரு.சேகர் (எ.த.சா.182), கூட்டத்தின் மீது தடியடியும், கண்ணீர்ப்புகைக் குண்டுகள் சுடவும், காவல் ஆய்வாளர் திரு.திருமலை (எ.த.சா.197)க்கு உத்தரவிட்டார். திரு.திருமலை (எ.த.சா.197) மெகாபோன் மூலமாக, கண்ணீர்ப்புகைக் குண்டுகளை சுடுவதற்கு, சார் ஆய்வாளர் திரு.பூமிபாலன் (எ.த.சா.196)ஐ அறிவுறுத்தினார். அதன்படி திரு.பூமிபாலன் (எ.த.சா.196) உத்தரவுகளை நிறைவேற்றினார். அவர் சாட்சியத்தில், திரு.சேகர் (எ.த.சா.182) போராட்டக்காரர் ஊர்வலத்தில் சேர்ந்து வந்தார் என்றும், திரு.சேகரை (எ.த.சா.182) அதற்கு முன்னரே தெரியும் என்றும் கூறியுள்ளார். இருப்பினும், விசாரணையின்போது காணொலிக் காட்சிகளை திரு.சேகர்




INSIDE COLLECTORATE

(எ.த.சா.182)-இடம் காட்டியபோது, எப்.சி.ஐ.ரவுண்டானா முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரையிலான முழு நிகழ்வையும் காட்டும் அந்தக் காணொலிக் காட்சிகளில், திரு.சேகர் (எ.த.சா.182) காணப்படவில்லை எனவும், திரு.திருமலை (எ.த.சா.197) மெகாபோன் மூலமாக அறிவிப்பு செய்த காட்சியும் இல்லை எனவும் ஒப்புக்கொண்டார். அதன் அடிப்படையில், திரு.திருமலை (எ.த.சா.197) திரு.பூமிபாலனுக்கு (எ.த.சா.196) உத்தரவிட்டார் என்பதும், அதன்படி இரண்டு Sten shells பயன்படுத்திச் சுட்டார் என்பதும் காணப்படவில்லை. எ.டி.எஸ்.பி.திரு.மாரிமுத்து (எ.த.சா.225), காவல் ஆய்வாளர் திரு.திருமலை (எ.த.சா.197) மற்றும் சிறப்பு நிர்வாக நடுவர் திரு.சேகர் (எ.த.சா.182) ஆணையத்தின் முன், சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையைப் போல் மீண்டும் மீண்டும் ஒரே கருத்தைக் கூறுகின்றனர். அதனை நம்பவோ, ஏற்றுக்கொள்ளவோ முடியாது. சம்பவ இடத்தில் காவல் துறையில் உயர்நிலையில் உள்ள எ.டி.எஸ்.பி.திரு.மாரிமுத்து (எ.த.சா.225) இருந்துள்ளார். அவர் அந்த இடத்தில் இருந்தபோது, சிறப்பு நிர்வாக நடுவர் திரு.சேகர் (எ.த.சா.182)-ஐக் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைச் சுடுவதற்கு எப்படி மற்றும் என் உத்தரவிட்டார் என்பதும், காவல் ஆய்வாளர் திரு.திருமலையிடம் (எ.த.சா.197) கூறி, திரு.பூமிபாலனை (எ.த.சா.196) துப்பாக்கிச் சூட்டை என் நிறைவேற்றக் கூறினார் என்பதற்கும், எ.டி.எஸ்.பி.திரு.மாரிமுத்து (எ.த.சா.225) அங்கு இருப்பதைப் பொருட்படுத்தாமல் என் அவ்வாறு செய்யப்பட்டது என்பதற்கும் விளக்கம் எதுவுமில்லை. திரு.சேகர் (எ.த.சா.182) மற்றும் திருமலை (எ.த.சா.197) ஆல்



INSIDE COLLECTORATE

முன்வைக்கப்படும் கருத்து, ஏ.டி.எஸ்.பி. திரு.மாரிமுத்து (எ.த.சா.225) மற்றும் சார் ஆய்வாளர் திரு.பூமிபாலன் (எ.த.சா.196) ஆகியோரால் ஆதரிக்கப்பட வேண்டியுள்ளதால், அது நம்பத்தகுந்ததாக இல்லை.

காணொலிப் படக்காட்சி, காவல் அலுவலர்கள் மற்றும் சிறப்பு நிருவாக நடுவரின் வாய்மொழிச் சாட்சியத்திலிருந்து மாறுபடுகிறது. ஏற்கெனவே குறிப்பிட்டபடி, அலுவல் சாட்சிகளான ஏ.டி.எஸ்.பி. திரு.மாரிமுத்து (எ.த.சா.225), திரு.திருமலை (எ.த.சா.197), திரு.சேகர் (எ.த.சா.182) மற்றும் சார் ஆய்வாளர் திரு.பூமிபாலன் ஆகியோர், பாளையங்கோட்டை சாலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளைவு முன்பாக நடந்த சம்பவம் தொடர்பாக ஒருவொருக்கொருவர் கணிசமான அளவில் உடன்படும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்கள். இந்த ஆணையம், முன்னர் சொன்ன காரணங்களினால், போராட்டக்காரர்களின் கூட்டத்திற்குக் காவல் துறையினர் ஆற்றிய எதிர்வினை குறித்த அவர்களுடைய கூற்றை நம்பவில்லை.

ஒருபுறம் படக்காட்சிகளுக்கும், மறுபுறம் சாட்சிகளின் வாய்மொழி சாட்சிகளுக்கும் இடையேயான பொருத்தமின்மையை நோக்கும்போது இது மேலோங்கி நிற்கும். படக்காட்சிகளில் யாதொரு தலையீடும் இல்லாத நேர்வில், நிகழ்வுகளைப் பதிவு செய்யும்போது இருந்தவற்றையே காட்டும். வாய்மொழிச் சாட்சியத்தைப் பொருத்தவரையில், வாக்குமூலம் அளிப்பவரின் வழக்கிற்குத் தகுந்தவாறு மாற்றப்பட்டிருக்கலாம். கள நிலவர உண்மைகளை மட்டுமே வெளிப்படுத்தும் படக்காட்சிகளைப் போல அல்லாமல், வாய்மொழிச்


NEWS 18
தமிழ்நாடு
மாவட்டம்
/ News18TamilNadu
VIDEOCON: 589 AIRTEL: 793 TATA SKY: 1561 | JIO TV | All Cable Network

சாட்சியங்களில் சொல்லிக் கொடுத்தல், திரித்தல் மற்றும் தேவைக்கு ஏற்ற வகையில் மாற்றிக் கூறுதல் ஆகியவற்றுக்கான ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. 'மனிதர்கள் பொய் கூறலாம் ஆனால் சூழ்நிலைகள் கூறாது" ("Memory lie but not the circumstances") என்பதே பழமொழியாகும். இதுவே சாட்சிய விதியாக மட்டுமின்றி, விவேகம் மற்றும் விடாமுயற்சியின் விதியாகவும் உள்ளது. அவ்வாறெனில், பதிவு செய்யப்பட்ட நேரத்தில் உண்மை நிலையைக் காட்டுகின்ற படக்காட்சிகள், வாய்மொழிச் சாட்சியத்தைவிட முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியதாகும். மேலும் படக்காட்சி பதிவுகள் காவல்துறையினரால் அளிக்கப்பட்டவை ஆகும்.

இத்தருணத்தில் அப்போதைய திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளருடன் இணைந்த ஆயுதப்படை சார் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் (எ.த.சா.223) அவரது சாட்சியத்தில், சூழ்நிலைக்குத் தேவைப்படும் நேர்வில் பயன்படுத்தும் வகையில், அதிரடிப்படை வாகனத்தில் காவல் துறையினரால் வைக்கப்பட்டிருந்த பல்வேறு ஆயுதங்களையும் தளவாடங்களையும் குறித்துப் பேசியுள்ளார். கலவரக்காரர்களைச் சுடுவதற்கு முன்னர், காவல் துறையினர் ஒலிப்பெருக்கி (Megaphone) மூலம் எச்சரிக்கை செய்ய வேண்டும் என்றும், அத்துடன் 5 அடி நீளமும் 2 அடி அகலமும் கொண்ட சிவப்புக் கொடியை அசைத்து எச்சரிக்க வேண்டும் என்றும், அந்தக் கொடியில் வெள்ளை நிற எழுத்துகளில் 'நீங்கள் கூடி இருப்பது சட்டவிரோதமான கூட்டம், உடனே கலைந்து செல்லுங்கள். இல்லை என்றால் கண்ணீர்ப்புகைக் குண்டு



உபயோகித்து கலைக்க நேரிடும்" என்ற வாசகத்தை இடம்பெறச் செய்ய வேண்டும். அதன்படி, போராட்ட கூட்டத்தினர் சட்டவிரோதமாக கூடினால் அவர்களை எச்சரிக்கை செய்ய வேண்டும் எனவும் அவர் சாட்சியத்தில் குறிப்பாகத் தெரிவித்தார். வெள்ளை எழுத்துகளுடன் கூடிய சிவப்புக் கொடியை அசைத்து எச்சரிக்கை செய்ததாக யாதொரு ஆவண ஆதாரமும் இல்லை. ஒலிப்பெருக்கி (Megaphone) / பொது மக்களிடம் உரையாற்றும் அமைப்புமுறை வாயிலாக எச்சரிக்கை செய்திருந்தாலும், கூட்டத்தினரின் இரைச்சலில் அது போராட்டக்காரர்களின் செவிகளில் அது கேட்டிருக்காது என்பதால் அவர்களைச் சென்றடைந்து இருக்காது. வெள்ளை நிற எழுத்துகள் கொண்ட சிவப்புச் கொடியை அசைத்துக் காட்டியிருந்தால், போராட்டக்காரர்கள் காணும் வகையில் இருந்திருக்கும். அத்தகைய நடவடிக்கை, ஒரு வெற்று நடைமுறையாக மட்டும் அல்லாமல், காவல்துறையின் எச்சரிக்கை குறித்து, கூட்டத்தினரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகும். அத்தகைய இறுதியான எச்சரிக்கையைக் கொண்ட வெள்ளை எழுத்துகளைக் கொண்ட சிவப்புக் கொடியை, வி.வி.டி.சிக்னலிலேயே அல்லது எப்.சி.ஐ.ரவுண்டானாவில் அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பாக உள்ள தேசிய நெடுஞ்சாலையிலேயே காட்டியிருந்தால், போராட்டக்காரர்களுக்கு அவர்களது திட்டப்படி முன்னேறிச் செல்வதற்கு, அது ஒரு தடையாக அமைந்திருக்கும். எ.த.சா.223 திரு.செந்தில்குமார் என்பவரின் சாட்சியத்திலிருந்து, அவ்வாறான சிவப்புக் கொடி, காவல் கண்காணிப்பாளர், டி.ஐ.ஜி மற்றும் ஐ.ஜி ஆகியோரது அனைத்து அதிரடிப்படை


108

வாகனங்களிலும் இருக்கும் என்று கூறியுள்ளார். அந்தச் சிவப்புக் கொடிகள் விதிமுறையின்படி ஏன் காட்டப்படவில்லை என்பது புரியவில்லை.

ஐந்து உயிர்களைப் பலிவாங்கிய, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் நிகழ்ந்த துப்பாக்கிச்சூடு சம்பந்தமாக சரியான முடிவுக்கு வருவதற்கு, புதுக்கோட்டை, காவல் ஆய்வாளர் திரு.திருமலை (எ.த.சா.197) மற்றும் திரு.பூமிபாலன் (எ.த.சா.196) ஆகியோரின் சாட்சியங்களை, டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர் (எ.த.சா.246) மற்றும் திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) ஆகியோரின் சாட்சியங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது தகுந்ததாக இருக்கும். சார் ஆய்வாளரான திரு.பூமிபாலன் (எ.த.சா.196)-ன் கூற்றின் படி, அவரும் டி.ஐ.ஜி. திரு.கபில் குமார் சி.சரத்கர் (எ.த.சா.246)-ம் போராட்டக்காரர்களின் கல்லெறிதலைத் தாக்குப்பிடிக்க முடியாமல், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் தலைவாயிலுக்குச் செல்லும் சிறிய சாலை நோக்கிப் பின்வாங்கிச் சென்றனர் என்றும், அடங்காத கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிக் கற்களை எறிந்துகொண்டே முன்னேறி வந்தது என்றும், டி.ஐ.ஜி. (எ.த.சா.246)-ன் உத்தரவின்படி, அவர் Sten shells ஆல் இரண்டு முறை சுட்டார் என்றும், ஆனால் பயனில்லை என்றும், அவர்கள் மேலும் பின்வாங்கினார்கள் என்றும், காவல் துறையினர் கால் தெறிக்க ஓடினார்கள் என்றும், அப்போது காலை 11.50 மணி இருக்கும் என்றும் தெரிவித்தார். மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் கிழக்கே உள்ள மிதிவண்டி நிறுத்துமிடத்திலிருந்து புகை வெளிவந்து கொண்டிருந்தது என்றும், தீ வேகமாகப்



PROTESTERS GATHERED NEAR ARCH AFTER INITIAL SHOOTING
INSIDE COLLECTORATE RAISING SLOGANS


பரவி எரிந்து கொண்டிருந்தது என்றும், சிவில் உடையில் இருந்த ஒருவர் டி.ஐ.ஜி. (எ.த.சா.246)-யிடம் விரைந்து சென்று, அவரிடம் பேசிக்கொண்டிருந்தார் என்றும், அவர் வட்டாட்சியர் திரு.சேகர் (எ.த.சா.182) என்பது பின்னர் தெரிய வந்தது என்றும், டி.ஐ.ஜி (எ.த.சா.246)-ன் உத்தரவின்படி காவலர் 1160 திரு.ராஜா (எ.த.சா.200) அவரது 410 Musket Rifle-லில் இருந்து ஒரு முறை buckshot ஆல் சுட்டார் என்றும், கூட்டம் பெருகியது என்றும், காவல் துறையினர் மேற்கு திசை நோக்கி பின்வாங்கினார்கள் என்றும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்த வாகனங்கள் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தன என்றும், சிதறி இருந்த காவலர்கள் ஒன்று சேர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தலைவாயில் வழியாக விரைந்து வந்து கூட்டத்தை விரட்டினர் என்றும், அந்தச் சமயம் துப்பாக்கி சூடும் சத்தம் இங்கும் அங்குமாகக் கேட்டது என்றும், மக்கள் பாதுகாப்பு தேடி ஓடினார்கள் என்றும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் கிழக்குப் பக்கத்திலிருந்து, குறிப்பாக, ஸ்டெர்லைட் குடியிருப்பில் இருந்து கருமையான அடர்புகை வருவதை அவர் பார்த்தார் என்றும், இந்நிலையில், டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர், இ.கா.ப. (எ.த.சா.246) இந்தச் சாட்சி உட்பட அவரது அதிரடிப்படையுடன் நடந்தே ஸ்டெர்லைட் குடியிருப்பை அடைந்தார் என்றும் தெரிவித்தார்

காவல் ஆய்வாளரான திரு.திருமலை (எ.த.சா.197) மற்றும் சிறப்பு நிருவாக நடுவரான திரு.சேகர் (எ.த.சா.182) ஆகியோர் திரு.பூமிபாலன் (எ.த.சா.196)-ன்



NEAR COLLECTORATE ARCH

சாட்சியத்திற்கு முற்றிலும் இணக்கமாகச் சாட்சியம் அளித்துள்ளனர். இந்தச் சாட்சிகளின் உண்மைத் தன்மையைப் பரிசீலிக்கலாம். டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர், இ.கா.ப. (எ.த.சா.246)-ன் சாட்சியத்தைக் குறிப்பிட வேண்டும். அவர் விசாரிக்கப்பட்ட போது, சம்பந்தப்பட்ட கண்காணிப்புக் கேமராவில் (CCT Camera) பதிவு செய்யப்பட்ட காட்சிகள் அவரிடம் காட்டப்பட்டன. சி.சி.டி.சி.கேமரா எண்.3-ல் பதிவு, காலை 10.49 மணியில் தொடங்கி, பகல் 12.09 மணிக்கு முடிவடைந்துள்ளது. அந்தப் பதிவில் திரு.சேகர் (எ.த.சா.182) மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தலைவாயிலை நோக்கி விரைந்து சென்று மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடத்திற்குள் அவசரமாக நுழைவது தெரிகிறது. அதற்குமேல் எதுவுமில்லை. இது ஒரே ஒரு நிமிடம், அதாவது 11.46 மணி முதல் 11.47 வரை மட்டுமே உள்ளது. அதன் பிறகு அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காணப்படவில்லை. டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர், இ.கா.ப. (எ.த.சா.246) இந்த விவரத்தை ஒப்புக்கொண்டுள்ளார். இந்த ஆணையம், இந்த மூன்று சாட்சிகளின் சாட்சியத்தை, டி.ஐ.ஜி. (எ.த.சா.246)-யிடமிருந்து பெறப்பட்ட யதார்த்தமான பதிவின் பின்புலத்தை வைத்துப் பார்க்கும்போது, நடைபெற்ற நிகழ்வுகள் சம்பந்தமாக இந்த மூன்று சாட்சிகளுமே ஒருமித்துக் கூறியிருப்பினும், இந்த மூன்று சாட்சிகளின் கூற்றுகளும் உறுதியாக நம்பகத்தன்மை அற்றவை என்பதையே காட்டுகின்றன. இந்த 3 சாட்சிகளும் அவர்களின் சாட்சியங்களில், மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்குள் நிறுத்தி வைத்திருந்த வாகனங்களைப் போராட்டக்காரர்கள் எரித்தார்கள் என்றும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச்



கிழக்குப் பக்கத்தில் உள்ள இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் நிறுத்தி வைத்திருந்த இருசக்கர வாகனங்களைப் போராட்டக்காரர்கள் எரித்தார்கள் என்றும், பின்னர் காவல்துறையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடிக்கச் செய்து அதன் பிறகு துப்பாக்கிச்சூடு நடத்தியதாகத் தெரிவித்துள்ளார்கள். போராட்டக்காரர்கள் கற்களை எறிதல், தீ வைத்தல் மற்றும் நாசமாக்கல் செயல்களில் ஈடுபட்டதால், உயிருக்கு ஆபத்து விளைவிக்கத் தக்க ஆயுதங்களைக் கொண்டு காவல் துறையினர் சுட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதே இவர்களின் வாக்குமூலமாகும். திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247), டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர், இ.கா.ப. (எ.த.சா.246) ஆகியோரது சாட்சியத்தைக் கவனித்துப் பார்த்தால், மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் எரிவதற்கும், மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு அருகே இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் எரிவதற்கும் முன்பே துப்பாக்கிச்சூடு நடந்திருப்பது தெளிவாகவும், சந்தேகத்திற்கு இடமளிக்காமலும் தெரிய வருகிறது. முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது என்னவெனில், ஸ்டெர்லைட் குடியிருப்புகளில் வாகனங்கள் எரிக்கப்பட்டது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் துப்பாக்கிச்சூடு சம்பவம் நடந்ததற்குப் பிறகுதான் என ஸ்டெர்லைட் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் சாட்சியத்திலிருந்தும் மற்றும் அப்போது பணியிலிருந்த காவல் துறையினரின் சாட்சியத்திலிருந்தும் தெரிய வருகிறது. இது சம்பந்தமாக காவல் அலுவலர்கள் எ.த.சா.81 சோபியா, எ.த.சா.92 ஜெயசங்கர், எ.த.சா.93 M.முருகன், எ.த.சா.135 P.முத்து, எ.த.சா.137 திருமதி.வீரகாளி, எ.த.சா.138 பொன்னம்பல ராஜா, எ.த.சா.139 ராஜசேகர்,



எ.த.சா.140 கணேசன் மற்றும் ஸ்டெர்லைட் குடியிருப்புக்கு எ.த.சா.ஆ.49-ன்படி பாதுகாப்புத் திட்டத்தில் பொறுப்பில் இருந்த காவல் ஆய்வாளரான எ.த.சா.165 திருமதி.செல்வி ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். காவல் ஆய்வாளரின் அலுவலக வாகனத்திற்கும் தீ வைக்கப்பட்டது. ஸ்டெர்லைட் அலுவலர்கள் குடியிருப்புகளைச் சேர்ந்தவர்களின் சாட்சியத்தில் அலுவலர்களின் குடியிருப்புகளில் உள்ள வாகனங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் துப்பாக்கிச்சூடு நடைபெற்றதற்குப் பிறகு எரிக்கப்பட்டன என்று கூறியுள்ளார்கள். அவர்கள் ம.சா.730 திரு.அருண்பிரசாத் மற்றும் ஆ2இ பிளாக்கில் வசிக்கும் ம.சா.776 திரு.V.ராஜகிருஷ்ணன், ம.சா.744 திரு.ஜிதேந்திர தாகூர், J1 பிளாக்கில் வசிக்கும் ம.சா.746 திரு.சைதன்ய குன்னம், H1 பிளாக்கில் வசிக்கும் ம.சா.754 திரு.S.கார்த்தீசன், ம.சா.753 திருமதி.ஜோதி R.கிருஷ்ணா, ம.சா.766 திரு.சுமீத் பர்மா மற்றும் H2 பிளாக்கில் வசிக்கும் ம.சா.767 திரு.டைட்டுன் குமார் போபி, ம.சா.764 திரு.D.தனவேல் மற்றும் G பிளாக்கில் வசிக்கும் ம.சா.765 திரு.P.திவாகரன் ஆகியோர் இது சம்பந்தமாக சாட்சியம் கூறியுள்ளார்கள்.

இந்த ஆணையம் முன்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள படக்காட்சி, இந்த ஆணையத்திற்கு உண்மை சம்பவத்தை அதன் அனைத்துக் கோணங்களிலும் உறுதியாகப் படம் போட்டுக் காட்டும். மீண்டும் திரும்பவும் நினைவு படுத்துவது யாதெனில், மனிதர்கள் பொய் சொல்லலாம், ஆனால் சூழ்நிலைகள் பொய் சொல்லாது. அதேபோல் சம்பவத்தின்போது எடுக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட



DECEASED KARTHIC CARRIED BY PROTESTER

படக்காட்சிக்கு முன்னுரிமை கொடுத்து நம்பிக்கை கொள்ள வேண்டியதாகும். அங்கு துப்பாக்கிச்சூடு நடந்த உடனே கந்தையாவும் தமிழரசனும் இறந்து விட்டார்கள். சம்பவ இடத்திலேயே அவர்களின் இறப்பு நிகழ்ந்து அவர்களின் இறந்த உடல்கள் தரையிலேயே கிடந்தன. முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, அந்த நேரத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மற்றும் அருகில் உள்ள இருசக்கர வாகன நிறுத்தும் இடத்தில் இருந்த வாகனங்கள் அனைத்தும் சேதமில்லாமலும், முழுமையான பாதுகாப்புடனும் இருந்தன. ஒரு சில வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் எரிக்கப்படவில்லை. காணொளியில் உள்ள காட்சிகளிலிருந்து, வாகனங்கள் எரிக்கப்படுவதற்கு முன்பே துப்பாக்கிச்சூடு நடந்துள்ளது என்பதும், அதற்கு மாறாக அல்ல என்பதும் சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாகிறது. வாகனங்களுக்குத் தீ வைத்ததாலும், தொடர்ச்சியாக காவல்துறையினர் மீது கற்களை எறிந்ததாலுமே, காவல் துறையினரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்கிற காவல்துறைத் தரப்பின் சாட்சியம் பொய்யானது.

போராட்டக்காரர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் உள்ளே கல் எறிதலில் ஈடுபட்டுக் கண்டிக்கத்தக்க நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. ஆனால் அதுபோன்ற நிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் துப்பாக்கிச்சூடு நடத்திப் போராட்டக்காரர்களில் 6 நபர்களை இறக்கச் செய்தது தேவையானதா என்பதை மனதில் கொள்ள வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், துப்பாக்கிச் சூடு நடத்த



DECEASED KARTHIC BROUGHT TO HOSPITAL
BY THE PROTESTERS

வேண்டிய அளவுக்கு உயிருக்கு அல்லது உடலுக்கு உடனடி ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய அத்தகைய கட்டாயச் சூழ்நிலை இருந்ததா என்பதைக் கண்டறிய வேண்டும். இந்த ஆணையம், ஆவண ஆதாரங்கள் உள்ளிட்ட சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள், வாய்மொழி சாட்சியம், ஆவணச் சாட்சியம், படக்காட்சிகள் ஆகியவற்றைக் கூர்ந்து பரிசீலித்தபோது, அபாயத்திற்குப் பதிலடியாக காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியது சரியல்ல எனத் தவிர்க்க முடியாத முடிவுக்கு வர வேண்டியுள்ளது. பலம் வாய்ந்த ஆயுதம் வைத்திருக்கும் காவல்துறையினருக்கு எதிராக, போராட்டக்காரர்கள் பெரும்பாலும் ஆயுதம் இன்றியும், ஒரு சிலர் கற்களும், சிறிய கற்களும் மட்டுமே வைத்திருந்தார்கள். கூட்டம் கற்களை எறிவதில் ஈடுபட்டிருந்தாலும், காவல்துறையினர் துப்பாக்கிசூடு (encounter) நடத்தியது மிருகத்தனமானது. அதை நிரூபிக்கும் வகையில் போராட்டக்காரர்களில் சிலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், ஸ்டெர்லைட் அலுவலர் குடியிருப்புகளிலும் இருசக்கர வாகனங்களுக்கும் மற்ற வாகனங்களுக்கும் தீ வைத்த காரணத்தால், ஆத்திரமடைந்த காவல் துறையினர் பொதுமக்களின் நடத்தையைக் கண்டித்தனர். காவல் துறையினர் துப்பாக்கியால் சுட்டு விலை மதிப்பற்ற உயிர்களை இழக்கச் செய்துவிட்டார்கள்.

துப்பாக்கிச்சூடு சம்பவத்தை நிகழ்த்தியதற்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், ஸ்டெர்லைட் குடியிருப்புகளிலும் தீ வைப்பு நிகழ்வில் சிலர் ஈடுபட்டார்கள், ஆனால் துரதிர்ஷ்டவசமாக தீங்கு விளைவித்தவர்களின் அடையாளத்தைக் கண்டறியவில்லை. இதைக் காவல்துறையினரோ, பின்னர்



DECEASED KARTHIC CARRIED BY PROTESTERS
IN MOTOR CYCLE

புலன் விசாரணையை மேற்கொள்ள ஒப்படைக்கப்பட்ட சி.பி.ஐ.யோ கண்டுபிடிக்கவில்லை. ஆணையம், நேர்மையான முயற்சிகள் எடுத்து அந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டவர்களை அடையாளம் காண, சி.சி.டி.வி. பதிவுகளிலிருந்து எடுக்கப்பட்ட படங்களைத் தூத்துக்குடிக் காவல் கண்காணிப்பாளருக்கும் சி.பி.ஐ.க்கும் அனுப்பி வைத்தது இரண்டு அமைப்புகளுமே அந்த நபர்களை நிச்சயமாக அடையாளம் காட்ட இயலாமைக்கு வருத்தம் தெரிவித்தார்கள். ஆணையம், பொதுமக்களில் பல்வேறுபட்ட சாட்சிகளை விசாரித்ததிலிருந்து, சில ஆண்கள் இரகசியமாகப் போராட்டக் கூட்டத்தில் நுழைந்து நாச வேலைகளில் ஈடுபட்டார்கள் என்றும், அவர்கள் ஸ்டெர்லைட் நிருவாகம் மற்றும் காவல்துறையின் கூட்டுப் பங்களிப்புடன், அவர்களின் வேண்டுகோளின்பேரில் அவர்களின் நோக்கத்திற்காகச் செயல்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். இதை சாதாரணமாக எடுத்துக்கொண்டு விட்டுவிட முடியாது. இது நிச்சயமாக சம்பந்தப்பட்ட அலுவலர்களால் தொடர்ந்து விசாரிக்கப்பட வேண்டியதாகும்.

டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர், இ.கா.ப. (எ.த.சா.246) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடந்த துப்பாக்கிச்சூடு பற்றிக் கூறுவது யாதெனில், கற்களை எறியும் போராட்டக்காரர்கள் கூட்டம் வளாகத்திற்குள் நுழைந்தது என்றும், அவர் அப்பொழுது அந்த இடத்திலிருந்து 150 மீட்டர் தொலைவில் அதிரடிப்படையுடன் இருந்தார் என்றும், அதிக அளவில் கற்கள் எறியப்பட்டன என்றும், அதில் டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர், இ.கா.ப.



INJURED TAKEN TO HOSPITAL

(எ.த.சா.246) உள்பட காவல்துறையினர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தலைவாயிலுக்குச் செல்லும் சாலையின் மூலைக்குச் சென்றார் என்றும், போராட்டக்காரர்கள் சமூக நல அலுவலகத்தைத் தாண்டி வந்து, காவல்துறையினர் மீதும், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் மீதும் கற்களை வீசினார்கள் என்றும், அவரின் அறிவுரையின்படி திரு.பூமிபாலன் (எ.த.சா.196) Sten shells ஆல் சுட்டார் என்றும், hand grenades-களையும் வீசினார் என்றும், ஆனால் அவை பலனளிக்கவில்லை என்றும், அந்தச் சமயம் அங்கிருந்த சிறப்பு நிருவாக நடுவர் திரு.சேகரின் (எ.த.சா.182) உத்தரவுகளின்படி திரு.ராஜா (எ.த.சா.200) மூன்று முறை buckshots 0.410 Musket-ஆல் சுட்டார் என்றும், 200 நபர்கள் எண்ணிக்கை கொண்ட கூட்டம் கலைந்து செல்லாமல் அங்கேயே இருந்தது என்றும், அவரின் அறிவுரைகளின்படி அதிரடிப்படைக் காவலர் திரு.தாண்டவமூர்த்தி (எ.த.சா.199) மூன்று முறை Plastic bullets 0.303 Rifle -ஆல் சுட்டார் என்றும், மேற்கொண்டு அவரின் அறிவுரைகளின்பேரில் திரு.ராஜா (எ.த.சா.200) மீண்டும் ball rounds 0.410 musket -ஆல் சுட்டார் என்றும் அவர் மேலும் கூறுகிறார். அவர் மேலும் அவரது சாட்சியத்தில், போராட்டக்காரர்கள் சுற்றிலும் அனைத்துப் பக்கங்களிலும் கற்களை எறிந்தார்கள் என்றும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தலைவாயிலில் இருந்து காவல்துறையினர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திற்கு திரும்ப அழைக்கப்பட்டனர் என்றும், அந்தச் சமயத்தில் ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு, அதன்



POLICE NEAR KORAPALLAM ROAD

தலைவாயில் வழியாக நுழைந்தார் என்றும், போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் மீது கற்களை எறிந்து, கண்ணாடிகளுக்குச் சேதம் ஏற்படுத்தினார்கள் என்றும், காவல்துறையினர் அவர்களைத் துரத்தத் தொடங்கினர் என்றும், கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் தலைவாயிலிலிருந்து கிழக்குப் பக்கம் நோக்கி ஓடியது என்றும், மக்களின் மற்றொரு கும்பல் அவர்களுடன் சேர்ந்து கொண்டு, காவல்துறையினர் மீது கற்களை எறிந்தது என்றும், டி.ஐ.ஜி.யின் அறிவுரைகளின்படி அவரின் Gunman திரு.சங்கர் (எ.த.சா.201) 5 முறை 9 மி.மீ. பிஸ்டலில் போராட்டக்காரர்களின் மீது சுட்டார் என்றும், கார் ஆய்வாளர் திரு.ரெஜ்னிஸ் (எ.த.சா.198) அவரின் பிஸ்டலுடன் ஓடிக்கொண்டு, போராட்டக்காரர்களைச் சுட்டார் என்றும், 5 நிமிடங்கள் கழித்து, வெள்ளை வேட்டியும், வெள்ளை சட்டையும் அணிந்த ஒரு நபர் ஆவின் பூத்திற்கு எதிரே துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் கிடந்தார் என்றும், பின்னர் அவர் "கந்தையா" என்று அடையாளம் காணப்பட்டு, உறுதி செய்யப்பட்டது என்றும், வளைவிற்கு மேற்கே சிவப்புச் சட்டை அணிந்த ஒருவர் காயம்பட்டுக் கிடந்தார் என்றும், பின்னர் அவர் "தமிழரசன்" என்று அடையாளம் காணப்பட்டார் என்றும், துப்பாக்கிச்சூடு முடிவடைந்த உடனேயே போராட்டக்காரர்கள் கலைந்து சென்றார்கள் என்றும், வளைவை நோக்கி ஓடினார்கள் என்றும், காவலர்கள் குழு அவர்களைத் துரத்திக் கொண்டு



DECEASED TAMILARASAN

சென்றார்கள் என்றும், போராட்டக்காரர்கள் வளைவு அருகே இருந்தார்கள் என்றும் தெரிவித்தார்.

மேலும், ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) சம்பவ இடத்திற்கு வந்தார். அவர் வளைவிற்குள் நுழைந்தார். கவனமாக, சிரமத்துடன் நடந்து, போராட்டக்காரர்களுக்கு இடையே நுழைந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தலைவாயிலுக்கு அதிரடிப்படையுடன் சென்றார். அந்தச் சமயம் கற்கள் மழை போல பொழிந்ததன் காரணமாக, அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்திற்குள் சென்றார். அந்த நேரத்தில் ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) அதிரடிப்படையுடன் வந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தலைவாயிலில் மறுபடியும் ஒன்று சேர்ந்தார். டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர், இ.கா.ப. (எ.த.சா.246) அறிவுரைகளின்படி துப்பாக்கிச்சூடு பற்றி டி.ஐ.ஜி. (எ.த.சா.246) அவரின் சாட்சியத்தில் கூறியபடி, துப்பாக்கிச்சூட்டில் உடனடியாக 5 நபர்கள் இறந்துவிட்டதாகக் கூறியுள்ளார். ஐ.ஜி. (எ.த.சா.247) மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தில் நுழைவதற்கு முன் அவர் தன் சாட்சியத்தில், அவர் கிழக்குப் பக்கத்தில் போராட்டக்காரர்களை நோக்கிச் சென்று எதிர்க்கும் தன்மை உள்ள போராட்டக்காரர்களைச் சமாதானப்படுத்த முயற்சி மேற்கொண்டார். அவர்களை நோக்கிச் செல்வதற்கு முன் சமாதானச் சைகையாக கைகளை வெளியே நீட்டிக்கொண்ட நிலையில் நடந்து சென்றார்



DECEASED TAMILARASAN INSIDE COLLECTORATE

போராட்டக்காரர்கள், அவரின் சீருடை மற்றும் பதவி நிலைக்குக் கட்டுப்பட்டு, போராட்டத்தைக் கைவிட்டு விடுவார்கள் என்று அவர் நம்பினார்.

இந்த ஆணையத்தின் கருத்து ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) அந்தச் சமயம் நிலவிய சூழ்நிலைகள் மேலோங்கி நிற்கையில், போராட்டக்காரர்கள் ஆவேசமான மனநிலையில், சைகையை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இல்லாதபோது, அவரது அனுபவமின்மை, புத்திக்கூர்மை மற்றும் தீர்வு எடுப்பதில் அனுபவமின்மை காரணமான சூழ்நிலைகளில் அவரது முடிவு முற்றிலும் பொருந்தாததாகும். இந்த ஆணையத்தைக் கவனிக்கச் செய்யத் தூண்டுவது, டி.ஐ.ஜி. துப்பாக்கிச்சூட்டிற்குச் சிறப்பு நிர்வாக நடுவர் திரு.சேகரின் (எ.த.சா.182) உத்தரவுப்படி என்று சொல்லப்படும் நேர்வில், குறிப்பாக ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247)யுடன் அந்த இடத்தில் இருந்திருந்தும் அவருடன் திரு.சேகர் (எ.த.சா.182) எந்தவித ஆலோசனையுமோ அல்லது பேச்சுவார்த்தையோ நடத்தவில்லை என்பதாகும். டி.ஐ.ஜி பொறுப்புணர்வு இல்லாமல் மனம் போன போக்கில் செயல்பட்டதாகத் தெரிகிறது. இது நிலைமைக்குத் தகுந்த தேவையான வழிகாட்டுதலின்படி செயல்படாமல், சிந்தனையற்றுச் செயல்பட்டுள்ளார் என்ற விமர்சனத்தை வரவழைத்துக் கொண்டதாக அமையும். டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர், இ.கா.ப. (எ.த.சா.246) அவரது சாட்சியத்தில், துப்பாக்கிக் குண்டுகளினால் அடிபட்டு இறந்து விழுந்த கந்தையா மற்றும் தமிழரசன் ஆகிய இரண்டு நபர்களின் இறப்பு குறித்து மட்டுமே கூறுகிறாரே அன்றி, இதேபோல் காவல்துறையின் துப்பாக்கிக்



DECEASED TAMILARASAN CARRIED BY PROTESTER BY THEIR TWO WHEELERS

குண்டுகளால் சுடப்பட்டு, இதே முறையில் இறந்த கார்த்திக், ஸ்னோலின் மற்றும் ரஞ்சித்குமார் ஆகிய மற்ற மூன்று நபர்களின் இறப்பு பற்றி எதுவும் கூறவில்லை. காணொலிக் காட்சிப் பதிவுகளில், இறந்தவர்களான கார்த்திக், ஸ்னோலின் மற்றும் ரஞ்சித்குமார் ஆகியோர் இருசக்கர வாகனம் மற்றும் நல்லதம்பி ஆம்புலன்ஸ் முறையே கொண்டு செல்லப்பட்டனர் என்றும், இறந்து போனவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் காவல்துறையினர் துப்பாக்கியால் சுடப்பட்டு விழுந்தனர் என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு முறையே, பிற்பகல் 12.15 மணி, 12.20 மணி மற்றும் 12.25 மணிக்கு மரணத்தை ஏற்படுத்தும் துப்பாக்கிக் குண்டு காயங்களுடன் கொண்டு செல்லப்பட்டுள்ளது நிரூபணமாகியுள்ளது. முதலாவது துப்பாக்கிச்சூடு எப்பொழுது நடைபெற்றுள்ளது என்பதைப் பார்த்தால், முதலாவது துப்பாக்கிச்சூடு பகல் 11.57 மணிக்கும், பகல் 12.06 மணிக்கும் இடையே நடைபெற்றுள்ளது என்பதும் பாதிக்கப்பட்டவர்கள் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு முறையே, பிற்பகல் 12.15 மணி, 12.20 மணி மற்றும் 12.25 மணிக்குக் கொண்டுவரப்பட்டு துப்பாக்கிக் குண்டுக் காயங்களால் இறந்துவிட்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற முதலாவது துப்பாக்கிச்சூட்டின் நேரம் பகல் 11.57 முதல் பகல் 12.06 மணி வரை ஆகும். மேற்சொன்ன அனைவரின் மரணமும், முதலாவது துப்பாக்கிச்சூட்டில் அடைந்த துப்பாக்கிக் குண்டுக் காயங்களால் ஏற்பட்டுள்ளது என்று உறுதியாக முடிவு செய்யலாம்.



NEAR BIKE PARKING INSIDE COLLECTORATE

காவல்துறையினர் மீது இடைவிடாது கல் வீச்சும், கடுமையான தாக்குதலும் போராட்டக்காரர்கள் செய்ததில் சந்தேகமில்லை என்றாலும், வலுவான ஆயுதங்களை வைத்திருந்த காவல்துறையினரின் உயிருக்கோ, உடலுக்கோ பெரிய அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில், போராட்டக்காரர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்யவில்லை. கற்கள் மழையாகப் பொழிந்ததால் காவல்துறையினர் பின்வாங்கினர். போராட்டக்காரர்கள் அச்சுறுத்தும் எவ்வித ஆயுதங்களையும் வைத்திருக்கவோ, காவல் துறையினரை மிரட்டும் அளவிற்கு அவற்றைப் பயன்படுத்தவோ இல்லாத நிலையில், போராட்டக்காரர்களின் மீது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய ஆயுதங்களைக் கொண்டு காவல் துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கான ஒரு சூழலாக இது அமையவில்லை.

அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய நிலையில் இருந்தாலும், அந்த மிரட்டலைக் கண்டு, உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களைப் பயன்படுத்துவது அவசியம் என்று கூற முடியாது. சூழ்நிலைக்கு ஏற்றவாறு எதிர்வினையாற்றும் வகையில், தீங்கைத் தடுப்பதற்கு ஏற்ப காவல் துறையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பிட்டுக் கூற வேண்டியதில்லை எனினும், இந்த வழக்கில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்த நிலையில், காவல்துறையினரின் எதிர்வினை அதிகமாக இருந்தது. கொந்தளிப்பான சூழ்நிலையில், காவல்துறையினர் இயல்பு நிலையைக் கொண்டு வருவதற்கு, உணர்ச்சி வசப்படாமல் பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் பராமரிக்க



DECEASED KANTHIAH FOUND WITH
POOL OF BLOOD UNATTANDED

வேண்டும். முழுமையான சமநிலையையும் கடைபிடிக்க வேண்டும். காவல் துறையினர் முழுமையான சரிசம நிலையைக் கடைப்பிடிக்க வேண்டிய ஓர் ஒழுங்குமுறை அமைப்பாகும். சூழ்நிலைகள் பல்வேறு வகையில் மாறுகின்ற போதும், அனைத்துச் சூழல்களிலும் வெளிப்படும் வகையில், அவர்களின் ஒருங்கிணைப்பில் அதனைப் பின்பற்ற வேண்டும். மேற்சொன்ன கருத்தின் பின்புலத்தில், போராட்டக்காரர்கள் கற்களை எறிந்த விதத்தை ஆய்வு செய்ததில், அவர்களின் அச்சுறுத்தலுக்கு, காவல்துறையினரின் இந்தப் பகிரங்கமான செயல் ஒரு மிகை நடவடிக்கையாகும்.

இந்த ஆணையத்தால் விசாரிக்கப்பட்ட காவல்துறை அலுவலர்கள் திரு.மணிகண்டன் (எ.த.சா.32), திருமதி.S.சசிகலா (எ.த.சா.33), திரு.வேலப்பன் (எ.த.சா.34), திருமதி.மாரியம்மாள் (எ.த.சா.35), திருமதி.மகேஸ்வரி (எ.த.சா.36), திருமதி.சண்முக நிஷா (எ.த.சா.38), திருமதி.மகேஸ்வரி (எ.த.சா.39), திருமதி.S.பகவதியம்மாள் (எ.த.சா.40), திருமதி.அமுதசூர்யா (எ.த.சா.41), திருமதி.கலைசெல்வி (எ.த.சா.42), திருமதி.கற்பகவள்ளி (எ.த.சா.43), திரு.ஆறுமுகம் (எ.த.சா.44), திரு.ராபின்ராஜ் சசிகுமார் (எ.த.சா.45), திரு.M.பாலகிருஷ்ணன் (எ.த.சா.46), திரு.பால்முருகன் (எ.த.சா.47), திரு.முருகேசன் (எ.த.சா.48), திரு.சரவணன் (எ.த.சா.68), திரு.வீரபாண்டியன் (எ.த.சா.69), திரு.விக்னேஷ் (எ.த.சா.71), திரு.M.சசிகுமார் (எ.த.சா.72), திரு.S.பிரபு (எ.த.சா.73), திரு.J.ஹரிஷ் கிறிஸ்டோபர் (எ.த.சா.74),



SANTHOSH RAJ ALONG WITH DECEASED KANTHAIAH
INSIDE COLLECTORATE

திரு.சரவணபாண்டி (எ.த.சா.75), திரு.P.செந்தில்குமார் (எ.த.சா.76), திரு.கார்த்திக் (எ.த.சா.77), திரு.சத்யமூர்த்தி (எ.த.சா.78), திரு.அருண்குமார் (எ.த.சா.79), திரு.R.மணிரத்தினம் (எ.த.சா.80), திரு.ஆனந்தராஜ் (எ.த.சா.100), திருமதி.அஜிதா (எ.த.சா.158), திருமதி.செல்வி நித்யா (எ.த.சா.160), திருமதி.சபுரா பானு (எ.த.சா.162), திருமதி.செல்வராணி (எ.த.சா.166), திருமதி.மேரி ஜெமிதா (எ.த.சா 168) மற்றும் திருமதி.கிரேஸ் மரியம்மாள் (எ.த.சா.170) ஆகியோர் ஏறத்தாழ ஒரே மாதிரியாகக் கூறியுள்ளார்கள். கல் எறிதலை எதிர்த்து நிற்க முடியவில்லை என்றும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலிருந்து பின்வாங்கி விட்டதாகவும், மீண்டும் அந்த இடத்திற்கு அவர்கள் திரும்பி வரவில்லை என்றும், துப்பாக்கிச்சூடு நடந்து 5 நபர்கள் இறந்துவிட்டது பற்றித் தங்களுக்குத் தெரியாது என்றும் கூறியுள்ளதை இதில் கவனிக்க வேண்டும். மேலோட்டமாகப் பார்க்கும்போது, சாட்சியத்தின்படி, இந்தக் காவல் அலுவலர்களின் சாட்சியங்களைப் பரிசீலித்ததில், ஒரு அலுவலருக்குக் கடுமையான காயம் ஏற்பட்டது தெரிகிறது. வேறு யாருக்கும் காயம் ஏற்படவில்லை. காயமடைந்த காவல்துறை அலுவலரின் பெயர் திரு.மணிகண்டன் (எ.த.சா.32). அவருக்கு உதடுகளிலும் பல்லிலும் சேர்த்துக் கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது. அதற்குத் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுள்ளார், அவர் மருத்துவச் செலவைத் திரும்பப் பெறவும், இழப்பீடு பெறவும் தகுதியுள்ளவர் ஆகிறார்.



SANTHOSH RAJ INSIDE COLLECTORATE

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் நடந்த முதலாவது துப்பாக்கிச்சூடு தொடர்பாக, டி.ஐ.ஜி அவரது சாட்சியத்தில், போராட்டக்காரர்கள் சிதறி, வளைவை நோக்கி ஓடினார்கள். அவர்களைக் காவல்துறையினர் துரத்திச் சென்றார்கள். போராட்டக்காரர்கள் வளைவு அருகே கூடினார்கள். காவல்துறையினர் அதன் பிறகு மேற்குப் பக்கமாகச் சென்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு உள்ளே, கிழக்கு மேற்காகச் செல்லும் சாலையின் மூலையில் நின்றிருந்தார்கள். போராட்டக்காரர்கள் மேற்குப் பக்கத்திலிருந்தும் வளைவிலிருந்தும் திரும்பி வந்தார்கள். போராட்டக்காரர்களின் கடுமையான தாக்குதலைக் காவல்துறையினரால் சமாளிக்க முடியவில்லை. போராட்டக்காரர்கள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திற்குச் சென்றார்கள். இம்முறை போராட்டக்காரர்கள் ஏராளமான கற்களை எறிந்தார்கள். அவர்கள் வாகனங்களுக்கும் தீ வைத்தார்கள். அச்சமயம் ஸ்டெர்லைட் அலுவலர்கள் குடியிருப்புகள் தாமிரா-II-இல் இருந்து புகை வெளிப்பட்டது. காவல்துறையினர் போராட்டக்காரர்களை விரட்டினார்கள். போராட்டக்காரர்கள் இங்கும் அங்குமாக ஓடினார்கள். வளைவுப் பகுதியில் வெளியே செல்வதற்கும் ஸ்டெர்லைட் அலுவலர் குடியிருப்புகளுக்குச் செல்வதற்கும் இடையூறாக, வளைவு அருகில் போராட்டக்காரர்கள் அதிக அளவில் இருந்ததையும் பார்த்ததால், டி.ஐ.ஜி. (அ.த.சா.246) அவரின் அதிரடிப்படையைச் சேர்ந்த திரு.தாண்டவமூர்த்தி என்பவரிடம், மாவட்ட ஆட்சியர் அலுவலக முதலாவது திருப்பத்திலிருந்து, வளைவுப் பகுதியிலுள்ள கூட்டத்தினர் மீது சுடுமாறு கூறினார். மேற்சொன்ன



**DECEASED SNOWLIN**

திரு.தாண்டவமூர்த்தி அவரின் 0.303 Rifle மூலம் ஒரு முறை சுட்டார். கூட்டம் கலையாமல் இருந்தது. டி.ஐ.ஜி.யின் உத்தரவுப்படி திரு.தாண்டவமூர்த்தி 3 முறை சுட்டார். 3 முறையும் அந்தக் குறி தப்பியது. டி.ஐ.ஜி. (எ.த.சா.246), திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207)-விடம் யாருடைய பெயர் அவருக்கு அப்போது தெரியும் என்று கேட்டார். பின்னர் டி.ஐ.ஜி.யின் உத்தரவின்பேரில் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) ஒரு நடவையல்ல, 3 முறை சுட்டார். கூட்டம் பல திசைகளுக்கும் சிதறியது. காவல்துறையினர் முதன்மை வாயில் வழியாக நான்கு வழிச் சாலையை அடைந்தார்கள்.

ஏறத்தாழ அதே சமயத்தில் ஐ.ஜி. திரு.சைலேந்தகுமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) சாட்சியத்தின்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடத்திற்கு உள்ளே இருந்து வெளியே வந்து இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தை அடைந்ததாகக் கூறியுள்ளார். டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரத்கர், இ.கா.ப. (எ.த.சா.246) அவரைச் சந்தித்து, அவரிடம் சிறப்பு நிருவாக நடுவர் உத்தரவின் பேரில் ஏற்கனவே போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளதாகத் தகவல் தெரிவித்தார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் போராட்டக்காரர்கள் யாரும் காணப்படவில்லை. எனினும் போராட்டக்காரர்கள் முதன்மை வாயிலில் திரும்பவும் ஒன்றுகூடி, கற்களையும் பெட்ரோல் குண்டுகளையும் எறிய ஆரம்பித்தார்கள். ஏ.டி.எஸ்.பி. திரு.மாரிமுத்து, (எ.த.சா.225) உட்பட 49 காவல்துறை அலுவலர்களுக்குக் காயங்கள் ஏற்பட்டன. போராட்டக்காரர்கள்



DECEASED SNOWLIN CARRIED BY THE PROTESTERS

காவல்துறையினரைத் துரத்தினார்கள். ஐ.ஜி. (எ.த.சா.247) மீண்டும் பகல் 12.05/12.06 மணிக்கு மாவட்டக் காவல் அலுவலகத்திற்குள் சென்றுவிட்டார். போராட்டக்காரர்கள் பெட்ரோல் குண்டுகளை எறிவதை, மாவட்டக் காவல் அலுவலகத்திலிருந்து அவரால் பார்க்க முடிந்தது. ஏ.டி.எஸ்.பி. திரு.மாரிமுத்து, (எ.த.சா.225) மற்றும் திரு.லிங்கத்திருமாறன் (எ.த.சா.212) ஆகியோரிடம் பேரிடர் கட்டுப்பாட்டு ஆயுதங்கள் அச்சமயம் இல்லை என்பது ஐ.ஜி. (எ.த.சா.247)-க்குத் தெரிய வந்தது. தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் (எ.த.சா.248), திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் (எ.த.சா.240) மற்றும் திருநெல்வேலிக் காவல் துணை ஆணையாளர் (எ.த.சா.234) ஆகியோர் அப்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை வந்தடையவில்லை. ஐ.ஜி. (எ.த.சா.247)-உடன் டி.ஐ.ஜி. (எ.த.சா.246), ஏ.டி.எஸ்.பி. (எ.த.சா.225) மற்றும் இரண்டு டி.எஸ்.பி.க்கள் மட்டும் இருந்தார்கள். அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குப் பேரிடர் கட்டுப்பாட்டு ஆயுதங்களை அனுப்புமாறு, மாவட்டக் காவல் அலுவலகத்தில் அமைந்துள்ள சிறப்புக் கட்டுப்பாட்டு அறை மூலமாகக் கூறினார். இதற்கிடையில் ஐ.ஜி. (எ.த.சா.247) ஒரு Bolt Action மற்றொன்று 0.303 Rifle ஆகிய இரண்டு துப்பாக்கிகளைச் சிறப்புக் கட்டுப்பாட்டு அறைப் பொறுப்பில் இருந்த காவல் ஆய்வாளர் திருமதி.வனிதாராணி (எ.த.சா.227) மூலம் பெற்றார். Bolt Action Rifle Guard Commander திரு.சொர்ணமணி (எ.த.சா.211)-யிடம் ஒப்படைக்கப்பட்டது. மற்றொரு ஆயுதம் ஆயுதப்படைக் காவலர் திரு.சுடலைக்கண்ணுவிடம்



DECEASED SNOWLIN IN HOSPITAL

ஒப்படைக்கப்பட்டது. அச்சமயம் ஐ.ஜி. (எ.த.சா.247) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாகனங்கள் எரிக்கப்படுவதைப் பார்த்தார். ஸ்டெர்லைட் அலுவலர் குடியிருப்புகளில் தாமிரா-II-இல் வாகனங்கள் எரிக்கப்படுவதாகத் தாமிரா குடியிருப்புகளில் பணியிலிருந்த ஆய்வாளர் செல்வி (எ.த.சா.16)-யிடமிருந்து VHF மூலம் தகவல் கேட்டறிந்தார். டி.ஐ.ஜி. (எ.த.சா.246) அவருடைய காவலர்கள் குழுவை முதன்மை வளைவிற்கு வழிநடத்திச் சென்றார். டி.எஸ்.பி. திரு.லிங்கத்திருமாறன் (எ.த.சா.212) அவருடைய காவலர்கள் குழுவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மேற்குப் பக்கம் வழிநடத்திச் சென்றார். ஐ.ஜி. (எ.த.சா.247) அவருடைய அனைத்து மூன்று குழுக்களும் போராட்டக்காரர்களைக் கலைப்பதில் ஈடுபட்டார்கள். ஐ.ஜி. (எ.த.சா.247), திரு.லிங்கத்திருமாறன் (எ.த.சா.212)-ன் அறிவுரைகளின்படி துப்பாக்கிச்சூடு நடந்ததாகத் தெரியவந்தது அவருக்கு டி.ஐ.ஜி. (எ.த.சா.246) அறிவுரைகளின்படி மற்றொரு துப்பாக்கிச்சூடு நடைபெற்றதாகவும் தெரிய வந்தது. வன்முறையாளர் ஒருவர் வன்முறையில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்த ஐ.ஜி. (எ.த.சா.247), சார் ஆய்வாளர் திரு.சொர்ணமணி (எ.த.சா.211)-யிடம் அந்த நபரை இடுப்புக்குக் கீழே சுடுமாறு அறிவுறுத்தினார். அந்த நபருக்குக் காலில் காயம் ஏற்பட்டது. அந்த நபர் நடக்க முடியாமல் நொண்டினார். பொதுமக்களில் ஒரு சிலர் அந்த நபரைத் தூக்கி, வளைவை நோக்கிக் கொண்டு சென்றார்கள். ஐ.ஜி. (எ.த.சா.247)-இன் உத்தரவுப்படி, ஐ.ஜியின் குழுவில் இருந்த திரு.சதீஷ்குமார் (எ.த.சா.202) மாவட்ட



DECEASED RANJITH AND DECEASED SNOWLIN IN THE NALLATHAMBI AMBULANCE

ஆட்சியர் அலுவலகத்தின் 1-வது வளைவில் காணப்பட்ட கூட்டத்தை நோக்கி, ஒன்றன்பின் ஒன்றாக 2 முறை இடைவெளி விட்டு 410 Musket மூலமாகச் சுட்டார். கூட்டம் மேற்குப் பக்கத்திலிருந்து முன்னேற ஆரம்பித்தவுடன் ஐ.ஜி. (எ.த.சா.247)-யின் உத்தரவுப்படி திரு.சதீஷ்குமார் (எ.த.சா.202) மீண்டும் மேற்கு நோக்கிச் சுட்டார். அவர் இடைவெளி விட்டு இரண்டு முறை 410 Musket மூலம் இடுப்பிற்குக் கீழே சுட்டார்.

ஐ.ஜி. (எ.த.சா.247) கூறியபடி, ஒன்று ஐ.ஜி. தலைமையிலும், மற்றொன்று டி.ஐ.ஜி. தலைமையிலும் இன்னுமொன்று திரு.லிங்கத்திருமாறன் (எ.த.சா.212) தலைமையிலும் 3 காவல்துறை அலுவலர்கள் குழு, வெவ்வேறு திசைகளில் கூட்டத்தைக் கலைக்கவும், துப்பாக்கியால் சுடவும் நிறுத்தப்பட்டார்கள். டி.எஸ்.பி. திரு.லிங்கத்திருமாறன் (எ.த.சா.212) அவரது சாட்சியத்தில் இது சம்பந்தமாகக் கூறியுள்ளதைப் பரிசீலிக்க வேண்டும். மகளிர்க் காவலர்களும் அதைப்போல, சட்டம் ஒழுங்குப் பிரிவைச் சேர்ந்த காவலர்களும், எழுச்சி மிகுந்த கூட்டத்தைப் பார்த்தவுடன் கால் தெறிக்க ஓடினார்கள். அப்போது பகல் 11.45 மணி முதல் 12.00 மணிக்குள் இருக்கும். கூட்டத்தை விரட்டிச் செல்வதால் யாதொரு பயனுமில்லை என ஐ.ஜி. மற்றும் டி.ஐ.ஜி. உணர்ந்து, பின்னர் டி.எஸ்.பி. திரு.லிங்கத்திருமாறன் (எ.த.சா.212)-ஆல் அடையாளம் உறுதி செய்யப்பட்ட, அப்போது 0.303 Rifle வைத்திருந்த ஆயுதப்படைக் காவலர் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207)-விடம், எச்சரிக்கை விடுக்கும் வகையில், தெற்கு மற்றும் மேற்குப் பக்கம் நோக்கித்



DECEASED RANJITH CARRIED BY PROTESTER

துப்பாக்கியால் சுடுமாறு அறிவுறுத்தினார். அப்போது பகல் 12.10 மணி இருக்கும். அதற்கு சிறிது நேரத்திற்கு முன்னர், திரு.லிங்கத்திருமாறன் (எ.த.சா.212) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் துப்பாக்கி சுடும் சத்தத்தைக் கேட்டார். அதில் 2 நபர்களுக்குக் காயங்கள் ஏற்பட்டன. திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) மேற்கு நோக்கிச் சுட்டார், அது தரையில் பட்டு வெடித்தது. யாருக்கும் காயம் ஏற்படவில்லை. கூட்டம் கலைந்து, மேற்கு நோக்கி ஓடி, பின்னர் பாளையங்கோட்டை தேசிய நெடுஞ்சாலைக்குச் சென்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ள வாகன நிறுத்துமிடத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் தலைவாயிலிலும் இருந்த வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. கூட்டத்தைக் கலைப்பதற்காக திரு.லிங்கத்திருமாறன் (எ.த.சா.212)-இன் அறிவுரைகளின்படி எச்சரிக்கை விடுக்கும் வகையில் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) மொத்தம் 4 சுற்றுகள் சுட்டார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் முதல் முறையாக டி.ஐ.ஜி. (எ.த.சா.246)-இன் உத்தரவின்பேரில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றுள்ளது. இந்தத் துப்பாக்கிச்சூடு சம்பவத்தால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் 5 போராட்டக்காரர்கள் உயிரிழந்துள்ளனர். டி.ஐ.ஜி. (எ.த.சா.246), அவரது சாட்சியத்தில் 2 போராட்டக்காரர்கள் இறந்து கிடந்ததைப் பார்த்தேன் என்று கூறியுள்ளார். இறந்துபோன மற்ற 3 நபர்களைப் பற்றி அவர் கூறவில்லை. அவர்களைப் போராட்டக்காரர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு



**DECEASED RANJITH BROUGHT TO HOSPITAL BY PROTESTERS**

சென்றிருக்கலாம். உண்மையில், காவல் துறையினர் சுட்ட குண்டுகளால் 5 பேர் இறந்துள்ளனர். ஏற்கெனவே முதன்மை வாயிலுக்குத் துரத்தப்பட்ட, பதற்றம் நிறைந்த போராட்டக்காரர்கள், அதன் பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டில், யாரும் காயம் அடைந்துள்ளார்களா அல்லது இறந்துள்ளார்களா என்பதைக் கண்டறிய மீண்டும் நுழைந்தார்கள். துப்பாக்கிச்சூடு நடந்தவுடன், காயம் அடைந்தவர்களுக்கோ இறந்தவர்களுக்கோ காவல் துறையினர் யாதொரு உதவியும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்புடைய காவல்துறை நிலையாணைகளில் குறிப்பிட்டுள்ளவாறு, செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் வெளிப்படையாக மீறியுள்ள செயலாகும். இந்தச் சூழ்நிலையில், போராட்டக்காரர்கள் சிலர், துணிச்சலாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் நுழைந்து, பகல் 11.05 மணி முதல் 12.06 மணி வரையில் நேர்ந்த துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் அல்லது இறந்தவருக்கு உதவி செய்வதற்காக விரைந்தார்கள். 25 முதல் 30 எண்ணிக்கை கொண்ட குண்டர்கள் போராட்டக்காரர்களுடன் கலந்துள்ளார்கள் என்பதும், அவர்கள் சுதந்திரமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் நுழைந்து, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கும், பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருசக்கர மோட்டார் வாகனங்களுக்கும் தீ வைத்து அழிக்கும் செயலில் ஈடுபட்டார்கள் என்பதும் தெரிய வருகிறது.



DECEASED RANJITH

இத்தருணத்தில், துப்பாக்கிக் குண்டு பாய்ந்த கந்தையா ரத்த வெள்ளத்தில் கிடந்தார், கடைசி மூச்சு இருக்கும் வரை அவரைச் சுற்றி இருந்த யாரும் உதவிக்குச் செல்லவில்லை. இறந்து போனவரை அப்புறப்படுத்தவும், காயமடைந்தவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவும் வேண்டும் என்று காவல் நிலையாணைகளில் கூறப்பட்டுள்ளது. ஆனால் காவல்துறையினர் அதற்கு முரணாகச் செயல்பட்டுள்ளார்கள். மோசமான துன்பத்தில் உள்ள ஒரு நபருக்கு யாரும் உதவி செய்யாதது மனத்தை உருக்குகின்ற செயலாகும்.

மற்றொரு எடுத்துக்காட்டு, படுகாயமடைந்த சந்தோஷ் ராஜ் (ம.சா.73) மேற்சொன்ன சம்பவத்தில், தலையிலிருந்து பாதம் வரை காயங்களின் ஏற்பட்டதன் காரணமாக, ரத்தம் சொட்டச் சொட்ட இருந்த தன்னை, வெளியே கொண்டு சென்று, மருத்துவமனைக்குக் கொண்டு சேர்க்கக் கூறிக் கதறி அழுதார். அவரின் கதறலும் அழுகையும் செவிட்டுக் காதுகளில் விழுந்தது போல் ஆனது. குறிப்பாக, மாவட்ட ஆட்சியர் வளாகம், காவல்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது, அருகிலேயே காவல்துறையினர் இருந்தும், அவரின் பக்கத்தில் செல்ல முற்படவில்லை. இந்தக் கொடூரச் சூழலில், சந்தோஷ் ராஜ் (ம.சா 73)-இன் அழுகை வனத்தில் கத்திய அழுகையாக ஆனது.

முழு வளாகமும் காவல்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது, போராட்டக்காரர்கள் என்ற போர்வையில் ஒரு குழு வளாகத்திற்குள் நுழைந்து, வேடிக்கைக் காவல் துறையினரின் முன்னிலையில், அத்தகைய இறுக்கமான


POLICE

சூழ்நிலையில், பொருட்களை அழிப்பதில் எப்படி ஈடுபட்டிருக்க முடியும். இந்த ஆணையம் பொதுமக்களின் பிரதிநிதிகளாகப் பலரை விசாரித்தபோது, மேற்சொன்ன குழுவினர் கூலிக்கு அமர்த்தப்பட்ட குண்டர்கள் என்றும், பொதுமக்களின் ஓர் அங்கமாக நுழைந்து, போராட்டக்காரர்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்கு அழைத்து வரப்பட்டவர்கள் என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த ஆணையம், அந்த நாசவேலைகளில் ஈடுபட்ட குழுவினரின் அடையாளத்தைக் கண்டுபிடிக்குமாறு, தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கு வருத்தத்துடன் கடிதம் எழுதியது. அதைப் போல, அக்கறையும் பொறுப்பும் கொண்டு புலன் விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்யுமாறு சி.பி.ஐ.க்கும் கடிதம் அனுப்பியது. மாவட்டக் காவல் துறையும் யாதொரு சி.பி.ஐ. அலுவலரும் மேற்சொன்ன குண்டர்களை அடையாளம் காண இயலவில்லை. இந்த இரு அதிகார மையங்களும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் மட்டுமல்லாது, ஸ்டெர்லைட் அலுவலர்க் குடியிருப்புகளிலும், வாகனங்களை எரித்தவர்களைக் கண்டுபிடிக்க இயலவில்லை என்று தெரிவித்திருப்பது துரதிருஷ்டவசமானது. விரிவான புலனாய்வு மேற்கொள்ள, குறிப்பாக, குற்றம் செய்தவராகக் கருதப்படுபவரின் அடையாளத்தைக் கண்டறிய சி.பி.ஐ.க்கும், மாவட்டக் காவல் துறைக்கும் சட்டப்படியான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் செய்து தர வேண்டும். அவர்கள் நியாயமான முடிவுக்கு வருவதற்கு மண்ணையும் தோண்டியெடுக்கலாம். இரண்டு அலுவலர்களும் மேற்சொன்ன நபர்களை அடையாளம் காண இயலவில்லை என்று கூறுவது



அவர்கள் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதாக இல்லை. எவ்வித மர்மச் சூழலிலும் சிக்கலை அவிழ்க்கக்கூடிய முகமை சி.பி.ஐ. எனப் பொதுமக்கள் பெரிதும் எதிர்பார்க்கும் ஒரு முகமை, அதன் பொறுப்பைத் தட்டிக் கழிப்பது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது.

காவல்துறையினர் இறுதி நடவடிக்கையாக, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்கிறார்கள். போராட்டக்காரர்களுக்குக் கடுமையான மரணக் காயங்கள் ஏற்படும் என்று முற்றிலும் அறிந்திருந்தும் அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். மேற்கொண்டு துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் என்பதைப் போராட்டக்காரர்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும். எச்சரிக்கை உண்மையானதாகவும், பொருள் பொதிந்ததாகவும் இருக்க வேண்டுமே தவிர ஏமாற்றுவதாக அல்லது நடைமுறைச் செயலாக இருக்கக்கூடாது.

காவல் துறையினர், வழக்கின் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, போராட்டக்காரர்களை ஒலிப்பெருக்கி (Megaphone) மூலம் எச்சரிக்கை அறிவிப்பு செய்திருக்க வேண்டும். கூட்டம் கலைய வேண்டும் இல்லையெனில், காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு உட்பட, பலத்தைப் பயன்படுத்திக் கூட்டம் கலைக்கப்படும் என்று எச்சரிக்கை செய்த பிறகுதான் பலத்தை உபயோகிக்க வேண்டும். போராட்டக்காரர்கள் இடைவிடாத மற்றும் நிலையில்லாத செயல்கள் மூலம் எதிர்ப்பைத் தெரிவித்த பின்னரே, காவல் துறையினர் இறுதி நடவடிக்கையாகத் துப்பாக்கிச் சூடும் பலத்தை உபயோகித்திருக்க வேண்டும்.



காவல் துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தப் போவதைப் போராட்டக்காரர்களை அறியச் செய்திருக்க வேண்டும். அது உறுதியாக, போராட்டக்காரர்கள் நிலைத்து நிற்பதைத் தடுத்து, அந்த இடத்தை விட்டு விலகிச் செல்லவும் வைத்திருக்கும். யூகத்தின் அடிப்படையில் பார்த்தாலும், துப்பாக்கிச்சூடு நடத்தும் காவல் துறையினரின் நடவடிக்கை குறித்து, போராட்டத்தில் முன்னால் நிற்கும் போராட்டக்காரர்களுக்கு மட்டுமே தெரியும், பின்னால் நிற்பவர்களுக்குத் தெரியாது.

மேற்சொன்ன அறிவிப்பு போராட்டக்காரர்களைச் சென்றடையும் அளவிற்குக் கேட்கத்தக்க ஒலிப்பெருக்கியைப் (Megaphone) பயன்படுத்தி, காவல் துறையினர் பயனுள்ள அறிவிப்பை செய்திருக்க வேண்டும். காவல் துறையினர், ஒரே வளாகத்திலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம், சமூக நல அலுவலகம் ஆகியவற்றின் மேல் மாடிகளிலிருந்து மெகாபோன் மூலம் அறிவிப்பு செய்திருக்க வேண்டும். இது சம்பந்தமாக மெகாபோன் அல்லது ஆம்பிலிபயர் மூலமாகப் பயனுள்ள வகையில் அறிவிப்பு செய்ததாகக் காட்டுகின்ற ஆவண ஆதாரம் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

இவ்வழக்கில், காவல்துறையினர் மறைவிடங்களிலிருந்து வெகுதொலைவில் இருந்த போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி இருக்கிறார்கள். Ballistic Report வடிவில் ஆதாரங்கள் துப்பாக்கிச்சூடு long range shooting என்றும் short range shooting இல்லையென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. காவல் துறையினர், மாவட்ட ஆட்சியர் அலுவலக Heritage பூங்காவினுள் மறைந்து கொண்டு,



அங்கிருந்து துப்பாக்கியால் சுட்டு, அதனால் போராட்டக்காரர்களுக்கு உயிரிழப்புகள் மற்றும் கடுங்காயங்கள் ஏற்பட்டன. இது கொடூரமான செயல் என்கிற விமர்சனத்திற்கு ஏற்புடையதாகும். ஆணையம் இச்செயலைக் கண்டு வியப்புறுகிறது.

**மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் கடுமையான காயங்கள் அடைந்த பாதிக்கப்பட்ட நபர்கள்.**

1. <u>இறந்து போன கார்த்திக்.</u>

21 வயதுடைய கார்த்திக் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டில், மரணக் காயங்கள் ஏற்பட்டு இறந்துபோன, பாதிக்கப்பட்ட 5 நபர்களில் ஒருவர். பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மருத்துவர் அம்பிகா பிரசாத் பத்ரா மூலம் குறியிடப்பட்ட பிரேதப் பரிசோதனைச் சான்றிதழில் (Ex.C.38) இறப்புக்கு முந்தைய காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

A lacerated circular punctured wound of 3x2 cm in diameter over the right side front of head with inverted and abraded wound margin 160 cm above the right side heel lever suggestive of missile entry wound.

பிரேதப்பரிசோதனை செய்த மருத்துவரின் கருத்து :

The internal aspect of scalp corresponding to external injury had contusion mingled with bony fragments which could have been caused due to high velocity missile travel. Examination of remnants revealed brain haemorrhage and laceration due to missile impact.

The nature and size of the wound suggest the firearm might have been fired from distant range, the bullet could have been fired straight from the



COLLECTORATE MAIN ARCH AFTER INCIDENT

right side of the fron of head and travelled diagonally opposite to left end of head without exiting out of the cranial cavity.

துப்பாக்கிப் பிரிவுத் தடய அறிவியல் நிபுணர் மருத்துவர் G.திருநாவுக்கரசு C.W.10 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார், அவரின் கருத்து மண்டைக்குழியில் காணப்படும் ஈயத்துண்டு, 0.410 அங்குல (Ball) தோட்டாவினுடைய கூட்டுப் பொருளாக இருக்கலாம். பிரேதப் பரிசோதனைச் சான்றிதழையும், தடயவியல் நிபுணரின் அறிக்கையையும் சேர்த்து வாய்மொழிச் சாட்சியத்துடன் சேர்த்துப் பார்த்தால், நீண்ட தூரத்திலிருந்து துப்பாக்கியால் சுடப்பட்டதால், இறந்துபோன கார்த்திக்கிற்கு மரணக் காயங்கள் ஏற்பட்டு, அதனால் இறப்பு ஏற்பட்டுள்ளது என்னும் தவிர்க்க முடியாத முடிவுக்கு வரவேண்டியுள்ளது. ஆணையம் முன்பாகக் காட்டப்பட்ட, காணொலிக் காட்சியின் பதிவில் (Video Footage), இறந்துபோன கார்த்திக், அவருக்குக் காயங்கள் அடைந்த பிறகு, அன்று பிற்பகல் 12.15 மணிக்கு, போராட்டக்காரர்களால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள நல்லதம்பி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அதன் பின்னர், அ.சா.116 டேனியல்ராஜ் கூறியபடி, இறக்கும் நிலையில், தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டார். காவல்துறையின் நடவடிக்கையால் கார்த்திக் கடுங்காயமடைந்து, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த போது, போராட்டக்காரர்களே கார்த்திக்கை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். துன்பத்தில் உள்ளோருக்கு விரைந்து சென்று உதவி செய்வதே, காவல்துறையின் கடமையாகும். ஆனால்,



DECEASED MANIRAJ OUTSIDE COLLECTORATE

அத்துன்பமே காவல் துறையினரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் பார்வையாளராக வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். தெரிந்தும், ஆலோசனை செய்தும் உரிய நேரத்தில் ஒரு உயிரைக் காப்பாற்றவில்லை. இரத்தக்கசிவுக் காயத்துடன் உயிருக்குப் போராடிய இறுதி நிமிட நேரத்தில், கார்த்திக்கை மருத்துவமனைக்குத் கொண்டு செல்ல, சம்பவ இடத்திற்கு 108 ஆம்புலன்சை அழைப்பதற்கு காவல் துறையினர் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. இது காவல்துறையின் தரப்பில் மேற்கொள்ளப்பட்ட அசட்டையான குற்றச்செயல் ஆகும். காவல் நிலையாணையின்படி சட்டத் தேவைகளை மறுக்க முடியாது. காவல் துறையினர் சூழ்நிலையைப் பொறுத்து, தயாராக இருந்து விரைந்து சென்று நிவாரணம், உதவி செய்து, மனிதாபிமானம் மற்றும் கருணையின் அடிப்படையில் உயிரைக் காப்பாற்ற வேண்டும். இறந்துபோன கார்த்திக்கின் நெற்றியின் முன்பக்கத்தில் காயம் இருந்தது. அதிவேகமாகச் சுட்டபோது, தோட்டா தலையைத் துளைத்துக் கொண்டு சென்றுள்ளது.

இறந்துபோன கார்த்திக், யாருடைய தோட்டா மூலம் தலையில் காயம் ஏற்பட்டு இறந்தார் என்று ஆவண ஆதாரம் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். டி.ஐ.ஜி.யின் உத்தரவின்படி, டி.ஐ.ஜி.யின் அதிரடிப்படையைச் சேர்ந்த திரு.ராஜா (எ.த.கா.200) 3 buckshots ஆல் சுட்டு, 5 நிமிடம் கழித்து மறுபடியும் 0.410 Musket லிருந்து ball ஆல் சுட்டார். துடயவியல் நிபுணர், 0.410 அங்குல ஒற்றைக்குண்டு



INSIDE COLLECTORATE

தோட்டாவால் சுட்டதில், கார்த்திக்கின் மண்டைக்குழி வழியாகத் தோட்டாவின் துண்டுகள் துளைத்துக் கொண்டு சென்றுள்ளதாக சிதைந்த எறிபொருள் காணப்பட்டதன் அடிப்படையில் கூறியுள்ளார். திரு.ராஜா (எ.த.சா.200) 0.410 Musket-ஐ பகல் 11.57 மணி முதல் 12.10 மணி வரை பயன்படுத்திருக்கிறார் என்பது தெரிகிறது. பகல் 12.15 மணியளவில் கார்த்திக் கொண்டு செல்லப்பட்டிருக்கும் நேரத்தைப் பார்க்கும்போது, அந்நேரத்தில் காவலர் திரு.ராஜா (எ.த.சா.200) 0.410 Musket வைத்திருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டிக் குற்றம் கூற முடியும்.

இரண்டு விவகாரங்களைப் பரிசீலிக்க வேண்டும். முதலாவது, காவல் துறையினர் இதுபோன்ற சூழ்நிலையில் சட்டப்படித் தேவை இருந்தால் மட்டுமே சுடுவதற்கு முடிவு எடுக்கலாம், மேலும் இடுப்புக்குக் கீழே சுடலாம். இந்த வழக்கில் போராட்டக்காரரின் நெற்றியைக் குறிபார்த்துச் சுடுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. காவல்துறையினர் கார்த்திக்கிற்கு இத்தகைய உடல் காயத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடாது. இடுப்பிற்குக் கீழேதான் சுட வேண்டும் என்று இருக்கும்போது, காவல் துறையினர் செய்யவிருக்கும் தீமையை உணர்ந்து, தலையில் சுட்டிருப்பது, குற்ற உணர்வுடன் செயல்பட்டு மரணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதையே காட்டுகிறது.

மற்றொரு பார்வையாக, காவல் துறையினர் ஏன் குறைவான வேகம் கொண்ட வெடிமருந்தைப் பயன்படுத்தாமல் அதிவேகம் கொண்ட வெடிமருந்தைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதாகும். போராட்டக்காரர்களைக் கலைப்பது



INJURIED PERSON WITH POLICE

மட்டுமே காவல் துறையின் நோக்கமாக இருந்திருந்தால், போராட்டக்காரர்களை காவல் துறையினர் கொல்ல வேண்டியதில்லை. கார்த்திக் இழிவானவர் என்றோ, கார்த்திக்கின் முன்வரலாறு மோசமாக இருந்ததாகவோ காவல் துறையினரிடம் ஆதாரம் எதுவும் கிடையாது.

போராட்டக்காரர்கள் காவல் துறையினருக்கு அயல்நாட்டு எதிரிகளோ, நாட்டின் அமைதிக்கும் மகிழ்விற்கும் கவனத்திற்கும் பாதுகாப்பிற்கும் வலுவான மிரட்டல் அளிப்பவர்களோ அல்லர். அவர்கள் இந்நாட்டின் மரியாதைக்குரிய குடியுரிமை பெற்றோரின் முக்கியமான ஓர் அங்கம் ஆவார்கள். குடியரசு அமைப்பில், ஒவ்வொரு குடிமகனுக்கும், அரசமைப்பின் படி, உரிமைப் பாதுகாப்பு, ஆர்ப்பாட்டம் மற்றும் போராட்டம் நடத்துவது உள்ளிட்ட கருத்துச் சுதந்திரம் உள்ளது. எதிரி நாட்டினுடன் போர்ச் சூழலில் உள்ளபோது, அனைத்து வகையான வழிமுறைகளையும் கடைபிடிக்க இயலாது. வேறு வகையில் சொல்ல வேண்டுமென்றால், அன்பிலும் போரிலும் நியாயம் இருக்க வேண்டும். அவ்வாறான செயல் எதுவும் இவ்வழக்கில் கடைபிடிக்கபடவில்லை.

2. <u>***இறந்து போன தமிழரசன்:***</u>

இவருக்கு 45 வயது. இவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள், மரணத்தை ஏற்படுத்தும் தோட்டா காயங்கள் அடைந்தோரில் ஒருவர். மருத்துவர் அம்பிகா பிரசாத் பத்ரா (C.W.08) மூலமாக ஆ.த.சா.ஆ.40 ஆகக் குறியிடப்பட்டுள்ள பிரேதப் பரிசோதனைச் சான்றிதழில் பிரேதப் பரிசோதனைக்கு முன் காணப்பட்ட காயங்கள் பின்வருமாறு:



INJURIED CARRIED BY PROTESTERS

1. A Circular punctured laceration wound of 1 cm diameter with inverted abraded margin was found at the end of the right mastoid tail of cranial autopsy suture 153 cm above the left side heel suggestive of missile entry wound.
2. An excavated sutured, lacerated wound of size 3cmx1.5cmxcranium deep was present over right side front of head 158cm from right great-toe level. Removing the suture and examining, the margins were everted and contused suggestive of missile exit wound.
3. Multiple abraded contusions and abrasions of varying shapes and size from 4cmx2cmx1cm over the right side of the face and left forehead.

**<u>உள் காயங்கள்:</u>**

An excavated punched out fracture was found over the left mastoid bone with laceration of adjoining soft tissues indicative of missile entry wound. The part of skull base on the right side upto the front of the skull had comminuted fracture suggestive of missile track. Gross disruption, laceration, right anterior part of skull and scalp corresponding t oexternal injury no.2 suggestive of missile exit wound track. On examination of dissected brain remants showed hemorrhage and laceration due to fire arm missile.

**<u>கருத்து:</u>**

மேற்குறிப்பிட்ட காயங்கள் அனைத்தும் பிரேதப் பரிசோதனைக்கு முந்தைய காயங்களாகும். இந்தக் காயங்கள் துப்பாக்கிச் சூட்டில் ஏற்பட்ட காயங்களுடன் ஒத்து இருக்கின்றன. இறந்தவரின் இறப்புக்கு தலைக் காயங்களும் அவற்றின் பாதிப்புகளுமே காரணமாகும். காயம் எண்:3 வெளிக்காயம், கடினமான மற்றும் சொரசொரப்பான மேற்பரப்பு கொண்ட பொருளால் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது.



PROTESTERS CARRIED DECEASED

டி.ஐ.ஜி.யின் அறிவுரையை மதிப்புடன் நினைவுப்படுத்திப் பார்க்க வேண்டும். Gunman திரு.சங்கர் (எ.த.சா.201) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் தலைவாயிலில் (Portico) தென்மேற்குப் பகுதியில் போராட்டக்காரர்களின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினார். அச்சமயம் சிறப்பு நிருவாக நடுவர் திரு.சேகர் (எ.த.சா.182), தனக்கு அதிகாரங்களைக் கொடுத்திருப்பதாகக் கூறிய காவல் ஆய்வாளர் திரு.திருமலை (எ.த.சா.197)-யின் உத்தரவுகளின் பேரில், சார் ஆய்வாளர் திரு.ரென்னிஸ் (எ.த.சா.198) துப்பாக்கியால் சுட்டார். இது சம்பந்தமாக இந்த ஆணையத்தின் அறிக்கையில் முந்தைய பத்திகளில் பரிசீலிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தலைவாயிலில் சார் ஆய்வாளர் திரு.ரென்னிஸ் (எ.த.சா.198) ஆறு சுற்றுகளும், திரு.சங்கர் (எ.த.சா.201) ஐந்து சுற்றுகளும் சுட்டனர். துப்பாக்கிச் சூடுகள் - Spree இந்த இரண்டு காவல் அலுவலர்களால் பகல் 11.57 மணிக்குத் தொடங்கப்பட்டு 12.10 மணி வரை நடைபெற்றிருக்கிறது. திரு.ரென்னிஸ் (எ.த.சா.198) படத்தாரிலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தலைவாயிலுக்கு, மேலலுவலர்களின் அனுமதியில்லாமலும், காவல் நிலை ஆணைகளைக் கடைப்பிடிக்காமலும் சொந்த விருப்பின் பேரில், Butt எண்.50, SL எண்.16105215 என்ற எண் கொண்ட 9mm Pistol-ஆல் 6 சுற்றுகள் சுட்டுக்கொண்டே மாவட்ட ஆட்சியர் அலுவலக தலைவாயிலுக்கு நுழைந்துள்ளார். திரு.ரென்னிஸுக்கு (எ.த.சா.198) டி.ஐ.ஜி.யால் குற்றக் குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது




DECEASED CARRIED BY PROTESTER IN THEIR TWO WHEELER

முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். காவல் அலுவலர் ஒருவர், தாமாக வந்து, பொறுப்பற்ற தன்மையுடன் செயல்பட்ட அவரது நடத்தையை வெளிப்படையாகக் காட்டுகிறது. துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட நேரம் பகல் 11.57 முதல் 12.10 மணி வரையாகும். தமிழரசன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். ஆனால் தமிழரசன் இறந்த நிலையில் கொண்டு வரப்பட்டார் என்று மருத்துவர் சான்றளித்துள்ளார். அதனால் திரு.சங்கர் (எ.த.சா.201) அல்லது திரு.ரென்னிஸ் (எ.த.சா.198) சுட்டதன் காரணமாக ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டுக் காயங்களினால் தமிழரசன் இறந்துள்ளார் என்று உறுதியாக முடிவு செய்யப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (Portico) கண்காணிப்புக் கேமராக்கள் காட்சிகளைப் படம் பிடித்துள்ளது. காவல் துறையினரால் குறிவைத்துச் சுடப்படுவதைத் தவிர்க்கும் வகையில் தமிழரசன் ஓடியபோது சுடப்பட்டுள்ளார் என்பதை ஆணையம் குறிப்பிடுகிறது. இதைத் தடுக்க முடியவில்லை என்றால், காவல் துறையினர் குறைந்தபட்ச மனிதத் தன்மையுடன் நடந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட வேண்டும். உதவிக்கு ஆள் இல்லாத நிலையில், உயிருக்கோ, உடல் உறுப்புகளுக்கோ ஆபத்து ஏற்படக்கூடாது என உயிருக்கு அஞ்சி ஓடுபவர்களைக் காவல் துறையினர் சுடக் கூடாது. இறந்துபோன கார்த்திக் தொடர்பான ஒவ்வொரு அம்சத்திலும், ஆணையத்தின் விமர்சனம் சரியானது. அதேபோல் ஆணையத்தின் விமர்சனம் தமிழரசனுக்கும் பொருந்தும். தமிழரசனும் எறத்தாழ இதைப் போலவே கொல்லப்பட்டிருக்கிறார். இவர்களைப்



PARAMASIVAM AFTER RECEVING GUNSHOT INJURY
OUTSIDE THE COLLECTORATE

பொறுத்து முழுச் சம்பவமும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

தமிழரசன் மீதான பரிசீலனையை முடிப்பதற்கு முன் பொதுமக்கள் தரப்பில் ஒருசில சாட்சிகளின் வாய்மொழிச் சாட்சியங்களைக் குறிப்பிடுவது பயனுள்ளதாக இருக்கும். ம.சா.94 அனாமிகா அவரது சாட்சியத்தில், போராட்டத்தின்போது தமிழரசன் உள்பட போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வாயிலுக்குள் நுழைந்தார்கள். அதன்பிறகு, ஒருசில நிமிடங்களில், ஒருவர் முதன்மை வாயிலை நோக்கிக் காயத்துடன் ஓடி வருவதைச் சாட்சி பார்த்தார். காயமடைந்த அந்த நபருக்குப் பக்கவாட்டில் தமிழரசன் ஓடிவந்து கொண்டிருந்தபோது, தமிழரசன் காவல் துறையினரால் சுடப்பட்டு முதுகு பக்கமாக கீழே விழுந்தார். தமிழரசன் அணிந்திருந்த சிவப்புச் சட்டையால் அவரது முகத்தை மூடியதையும், அவரைச் சில போராட்டக்காரர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதையும் ம.சா.94 அனாமிகா பார்த்தார்.

ம.சா.106 திரு.கெபிஸ்டன் முதன்மை வாயிலுக்குள் நுழைந்த போராட்டக்காரர்களில் ஒருவர். 10 முதல் 15 லத்தி மற்றும் Rifleகள் வைத்திருந்த காவல் துறையினரை பார்த்தார். அவரது சாட்சியத்தின்படி காவல்துறையினர் போராட்டக்காரர்களை நோக்கிச் சுட ஆரம்பித்தார்கள், தமிழரசன் துப்பாக்கிக் குண்டுக் காயம் அடைந்து கீழே விழுந்துவிட்டார். அவர் மேலும் தன் சாட்சியத்தில், காவல் துறையினர் உண்மையாக நாசவேலையில் ஈடுபட்டவர்களைத் தேர்ந்தெடுத்து, தனித்து இலக்காகக் கொண்டு செயல்பட்டனர். சிவப்புச் சட்டை



PROTESTER WITH GUNSHOT INJURY

அணிந்திருந்த தமிழரசன் இடதுசாரி கருத்தியலைக் கொண்டவர் என்பது தெரிகிறது. தமிழரசனைக் காவல் துறையினர் இலக்காகக் கருத இது ஒரு வாய்ப்பு என்பது பொதுமக்களின் கருத்தாகும். ம.சா.334 திரு.சுர்ஜித் தன் சாட்சியத்தில், தமிழரசன் மருத்துவமனைக்கு நண்பகல் 12.00 மணியளவில் கொண்டு செல்லப்பட்டார் என்று கூறியுள்ளார்.

ம.சா.10 திரு.கிளிண்டன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் நடந்த துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர். அவர் சாட்சியத்தில், அவருக்குத் தெரிந்தவரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் இரண்டு நபர்கள் இறந்து கிடந்தார்கள் என்று கூறியுள்ளார்.

துப்பாக்கிச்சூடு தூண்டப்படாத ஒன்று என்றும், தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்றும், ஆயுதமில்லாத போராட்டக்காரர்கள் மீது மிகவும் குறைவான நடவடிக்கையைக் காவல் துறையினர் மேற்கொண்டிருக்கலாம் என்பதும் தவிர்க்க இயலாத முடிவாகும்.

3. <u>இறந்து போன கந்தையா:</u>

இந்த வரிசையில் 3-வது நபர் கந்தையா. அவருக்கு 55 வயது. திரு.ரென்னிஸ் (எ.த.சா.198) அல்லது திரு.சங்கர் (எ.த.சா.201)-ஆல் காவல் ஆய்வாளர் திரு.திருமலை (எ.த.சா.197) மற்றும் டி.ஐ.ஜி. (எ.த.சா.246) முறையே உத்தரவுகளின் பேரில் தமிழரசனுக்கு துப்பாக்கியால் சுட்டு இறப்பு ஏற்படுத்தியது போன்றே கந்தையாவுக்கும் துப்பாக்கியால் சுட்டு இறப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



A PROTESTERS WITH GUNSHOT INJURY

தந்தையாரின் உடலில் காணப்பட்ட காயங்கள் விவரம் பின்வருமாறு :

1. A circular 1 cm diameter punctured laceration would with inverted, abraded and contused marging present over left side shoulder blade area 129cm from left heel suggestive of missile entry wound.
2. An elliptical excavated puncture lacerated would of size 2cmx1cmxchest cavity deep was found at left side of third rib space 132 cm above the left heel, suggestive missile exit wound.
3. A circular punctured lectured lacerated wound of 1cm diameter with inverted abraded and contused margin was present over the dorsum of right wrist area, 26cm down the right elbow, suggestive of missile entry wound.
4. An oval excavated punctured, lacerated wound of size of 1.5cmx1cmxradius deep was present over the dorsum of right hand, 29cm distal to the elbow prominence, suggestive of missile exit wound.

உள்காயங்கள்:

1. Soft tissue, laceration and contusion involving the left chest wall at T5 – T6 level posteriorly and fifth rib anteriorly corresponding to external injuries No.1 & 2 suggestive of missile wound track. The love of left lung, vertebrae and ribs disrupted along the missile track.
2. The soft tissues and right radious bone lacerated/fractured corresponding to external injuries No.3 & 4 suggestive of missile wound track.

மேற்சொன்ன காயங்கள் பிரேதப் பரிசோதனைக்கு முந்தையவை. காயங்களின் தன்மை பற்றியும் முக்கியமானது. மார்பின் பின்புறத்தில் துளைக்காயம் காணப்பட்டது. குண்டு வெளியேறிய காயம் மார்பில் காணப்பட்டுள்ளது. தோட்டா




FIRE SERVICE ROAD

கந்தையாவின் பின்பக்கத்தில் நுழைந்து, உடலைத் துளைத்துக் கொண்டு மார்பு வழியாக வெளியேறியுள்ளது வெளிப்படையாகத் தெரிகிறது. தமிழரசனுக்கு ஏற்பட்ட தலைக்காயங்கள் அதிர்ச்சி அளிக்கக் கூடியவை. கந்தையாவுக்கு ஏற்படுத்தப்பட்ட காயங்கள் குறைவான அதிர்ச்சியூட்டும், கடுமையான மற்றும் சற்றுக் கடுமை குறைவான காயங்கள். ஆனால் காயங்களின் காரணமாக கந்தையா இறந்துள்ளார். பிற்பகல் 1.00 மணி வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தவரை, யாரும் சிகிச்சைக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யாமல் அங்கேயே கிடந்தார். காணொலிக் காட்சிகளைப் பார்க்கும்போது, கந்தையாவைக் கொன்றது மட்டுமல்ல, உயிருக்குப் போராடும் மனிதனை, கடைசி நிமிட முயற்சியாக மருத்துவமனைக்குக் கொண்டுபோகும் மனிதாபிமானம் கூட இல்லாமல் இருந்திருக்கிறார்கள். கந்தையா சுடப்பட்ட நேரம் மற்றும் இடம் ஆகியவற்றைப் பார்க்கும்போது திரு.சங்கர் (ம.சா.201) அல்லது சார் ஆய்வாளர் திரு.ரென்னிஸ் (எ.த.சா.198) இவர்களில் ஒருவரால் சுடப்பட்டு, கந்தையாவுக்கு ஏற்பட்ட துப்பாக்கிச்சூடு காயங்களால் கந்தையா இறந்துவிட்டார் என்று உறுதியாக முடிவுக்கு வரலாம்.

திரு.சந்தோஷ் ராஜின் (ம.சா.73) சாட்சியம், சம்பவம் ஏற்பட்ட விதம் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றிலிருந்து, கந்தையா அவருடைய முடிவைச் சந்தித்தது குறித்த தெளிவு கிடைக்கிறது. இது உண்மையில் மிக வருந்தத்தக்க ஒரு நிகழ்வாக உள்ளது. திரு.சந்தோஷ் ராஜ் (ம.சா.73) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின்




FIRE SERVICE ROAD

முக்கிய வாயிலில் ஏனைய போராட்டக்காரர்களுடன் நுழைந்தார். 5 அல்லது 6 காவலர்கள் பெரிய ரிவால்வார்களுடன் இருப்பதைப் பார்த்தார். அந்தச் சமயம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் நல்ல நிலையில் பாதுகாப்பாக இருந்ததைப் பார்த்தார். துப்பாக்கிச்சூட்டிற்கு முன் வாகனங்கள் முற்றிலும் பாதுகாப்பாக இருந்துள்ளன என்பதும், காவல் துறையின் துப்பாக்கிச்சூட்டிற்குப் பிறகுதான் வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன என்பதும் இதிலிருந்து தெரிய வருகிறது. காவல் துறைக்குச் சொந்தமான பொலிரோ ஜீப்பின் மீது சில போராட்டக்காரர்கள் கல்வீச்சில் ஈடுபட்டதைப் பார்த்தார், அந்தச் சமயம் சுமார் 50 காவல் பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் தலைவாயிலிலிருந்து ஓடி வந்து தடியடி நடத்த ஆரம்பித்தார்கள். அவர் உரத்த குரலில் போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டம் நடத்த விரும்புகிறார்கள் என்று கத்தினார். போராட்டக்காரர்களின் அழுகுரலைக் காவல் துறையினர் காதில் வாங்கவில்லை. ஒரு காவலர் கந்தையாவைக் குறிவைத்துக் கைத்துப்பாக்கியால் சுட்டதையும், கந்தையா ஆவின் பூத்திற்கு முன்னால் தோட்டாவால் சுடப்பட்டதால் விழுந்ததையும் அவர் பார்த்தார். காவல் துறையின் நடவடிக்கையைத் தடுத்தவர்கள் மீது காவல் துறையினர் தடியடி நடத்தினார்கள், ஆனால் அது தொடரப்பட்டதால் அந்தப் போராட்டக்காரர்கள் தப்பி ஓட ஆரம்பித்தார்கள். அவரைத் தடியால் அடித்ததால், அவருக்குக் கடுமையான காயம் ஏற்பட்டு இரத்தம் வடிந்தது. அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வெளியே செல்ல விரும்பினார். ஆனால் ஒருவரும் அவருக்கு உதவிக்கு வரவில்லை. அவர் ரத்தக்காயங்களுடன் மாவட்ட



FIRE SERVICE ROAD

ஆட்சியர் அலுவலகத்திற்கு உள்ளே இருந்த கேன்டீனுக்கு நடந்தே சென்றார். அன்றை போராட்டக்காரர்களில் சிலர் மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டு சென்றார்கள். கந்தையா தனியார் ஆம்புலன்ஸில் பிற்பகல் 1.35 மணிக்கு மருத்துவமனைக்கு இறந்த நிலையில் கொண்டு வரப்பட்டார்.

கண்ணால் கண்ட சாட்சியான திரு.சந்தோஷ் ராஜ் (ம.சா.73) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிலவிய இழிநிலையைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளார். அவரது சாட்சியம், கொடூரமான முறையில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு, அதில் கந்தையாவிற்கு உயிரிழப்பு ஏற்படும் அளவுக்குக் காயங்கள் ஏற்பட்டு, உடலமைப்பு சிதையும் அளவிற்கு இருந்தார் என்பதற்கு போதிய விளக்கத்தை அது அளிக்கிறது. காவல் நிலையாணைகளில் கோரப்படுகிறவாறு, மனிதாபிமானம் அற்ற முறையில் நடந்ததை இது வெளிக்காட்டுகிறது. இந்த ஆணையம், அறிக்கையின் முந்தைய பகுதியில், போராட்டக்காரர்களில் பிறருக்கு உதவி செய்பவர்கள் சிலர், காயமடைந்த காவல் துறையினருக்கு விரைந்து வந்து உதவி செய்தது பாராட்டுக்குரியது என்று பதிவு செய்துள்ளது. ஆனால் அதற்கு இணையான உதவியாக, மகளிர்க் காவலர்கள் மற்றும் ஆண் காவலர்கள் அடங்கிய நற்படையினர், இன்னொரு சகமனிதருக்கு உதவி செய்ய முன்வரவில்லை. இவ்விதமான பிரச்சனைகள் நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் ஆணையம் நினைவுப்படுத்துகிறது. தனி மனிதனிடமுள்ள குறைந்தபட்ச மனிதாபிமானத்தை நீக்காமல், அவரிடம் உள்ள குற்றம் செய்யும் உணர்வை நீக்க வேண்டும்: "mutatis



FIRE SERVICE ROAD

mutandis" என்ற கோட்பாட்டைக் காவல்துறை கடைபிடிக்க வேண்டும். மனித நேயம் அவசியமாகத் தேவைப்பட்ட நேரத்தில், காவல் துறையினர் துன்பத்தையும் துயரையும் நீக்குவதில் தலையிடாமல் இருந்தனர். காவல்துறை, பரிதாபகரமான துயரத்தில் இருந்தவர்களுக்கு உதவி செய்ய முன்வராமல், செயல்படாமல் இருந்துள்ளனர்.

4. <u>இறந்து போன ஸ்னோலின்</u>

இந்த வரிசையில் 4-வது நபர் ஸ்னோலின். இவர் 18 வயது இளம்பெண். இறந்து போன ஸ்னோலினுக்குப் பிரேதப் பரிசோதனை செய்த பாண்டிச்சேரி ஜிப்மர் மருததுவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, மருத்துவர் அம்பிகா பிரசாத் பத்ரா (C.W.08) கூறியுள்ளபடி, இறந்து போன ஸ்னோலினுக்கு மரணக் காயங்கள் இருந்தன. அவரிடம் காணப்பட்ட காயங்கள் பின்வருமாறு

1. A circular punctured wound of 4mm diameter with abraded contused and inverted margine was present over the nape of neck right side of the medline, 135cm above the right side heel, suggestive of bullet entry wound.
2. An excavated, irregular, lacerated would of size 2.5 cm x 2 cm x left mandible deep with comminuted fracture underlying left jaw bone, 134cm aove the right side heel suggestive of missile exit wound.
3. A horizontally placed punctured out lacerated wound size 1cmx0.6cmxskull deep with abraded, contused and inverted marging pearallel to the right eye-brow, 141 cm from the right heel and suggestive of bullet graze injury.



FIRE SERVICE ROAD

4. Multiple abrasions and abraded contusions of varying shapes and size ranging from 3cmx1cm upto 2cmx1cm were present over the left knee prominence and forsum of right foot.

<u>உள்காயங்கள் பின்வருமாறு</u> :

Neck soft issue laceration and fracture of C3 vertebrae corresponding to external injury No.1 & 2 suggestive of missile track. Gross soft tissue disruption with damage to the adjoining bones and cartilages in left side mouth and spine corresponding to external injury No.2 suggestive of missile exit track.

அனைத்துக் காயங்களும் பிரேதப் பரிசோதனைக்கு முந்தைய காயங்களாகும் என்பதும், துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுக்கு ஒத்ததாக இருக்கின்றன என்பதும் அவரின் கருத்தாகும். இறந்து போனவரின் இறப்பானது, கழுத்துப்பகுதி காயங்களினாலும் மற்றும் அதன் சிக்கல்களாலும் ஏற்பட்டிருக்கும். வெளிக்காயம் எண் 3, காயங்கள் 1 மற்றும் 2-ற்கு முன்பே ஏற்பட்டிருக்கும். காயம் எண்.1 மற்றும் 2 துப்பாக்கியை உபயோகித்ததன் காரணமாக ஏற்பட்டிருக்கும். 3வது காயம் வேறு துப்பாக்கியை உபயோகித்ததால் ஏற்பட்டிருக்கும். இரண்டு துப்பாக்கிகளும் குறுகிய இடைவெளி நேரத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

திரு.சங்கர் (எ.த.சா.201) மற்றும் திரு.ரென்னிஸ் (எ.த.சா.198) நடத்திய துப்பாக்கிச்சூட்டின் தொடர்ச்சியாக திரு.தாண்டவமூர்த்தி (எ.த.சா.199) மற்றும் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியிருப்பதாகத் தெரிகிறது. சில அடையாளம் தெரியாத நபர்கள் நுழைந்து, அங்கு நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களை எரித்ததற்குப் பிறகு காவல் துறையினரின் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. இந்த இரண்டு காவல்



ANTHONIYAR CHURCH

அலுவலர்களும் 0.303 Rifle மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வாயிலிலிருந்து முதலாவது வளைவை நோக்கிப் போராட்டக்காரர்கள் மீது சுட்டார்கள் என்பதை ஆவண ஆதாரங்கள் காட்டுகின்றன. இறந்து போனவர்களின் வரிசையில் 4-வது நபரான ஸ்னோலின், ஆணையத்தில் விசாரிக்கப்பட்டுள்ள அவரின் பதின்ம வயது நண்பர்களுடன் போராட்ட இடத்திலிருந்து பின்வாங்கி ஓடிவரும்போது துப்பாக்கிச்சூட்டுக் காயங்களினால் இறந்துள்ளார். ஸ்னோலினுக்குக் கழுத்துப் பகுதியில் தோட்டா நுழைவுக் காயமும், அதற்கு இணையாக தோட்டா வெளியேறிய காயமும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் காயங்களாகும். பிரேதப்பரிசோதனை செய்த மருத்துவரின் சாட்சியத்தைக் கவனமாகப் பரிசீலிக்கும்போது ஸ்னோலின் இரண்டு முறை துப்பாக்கிகளால் குறுகிய இடைவெளிக் காலத்தில் ஒன்றன் பின் ஒன்றாகச் சுடப்பட்டுள்ளார் என்பதைக் காட்டுகிறது. காயமடைந்த இடமான, வலது கன்னத்தில் சுடப்பட்டதால் ஏற்பட்ட காயம் என்பதைக் காட்டுகிறது. தோட்டா கன்னத்தின் முன் பகுதி வழியாகச் செங்குத்தாகச் சென்று சிதைத்து விட்டதையும் காட்டுகிறது. ஸ்னோலினுக்கு ஏற்பட்ட உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் காயங்கள், முறையே டி.ஐ.ஜி. (எ.த.சா.246) மற்றும் டி.எஸ்.பி. திரு.லிங்கத்திருமாறன் (எ.த.சா.212) உத்தரவுகளின்படி திரு.தாண்டவமூர்த்தி (எ.த.சா.199) மற்றும் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) ஆகியோர் துப்பாக்கி உபயோகித்ததன் காரணமாகவே ஏற்பட்டுள்ளன. காயம் ஏற்பட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருந்த ஸ்னோலின் குறித்த காணொலிப் படக்காட்சிகள் மோசமாகவும், கொடுமையாகவும் இருந்தன. அவரை ஆரம்பத்தில் மாவட்ட



ANTHONIYAR CHURCH

ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள நல்லதம்பி மருத்துவமனைக்கு போராட்டக்காரர்களே கொண்டு சென்றிருக்கிறார்கள். அதன் பின்னர், உயிர் பிரியும் இறுதி நிமிடத்திலேயே அவரைத் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். ஸ்னோலின் ஒரு தனியார் ஆம்புலன்ஸில் பகல் 12.20 மணிக்குத்தான் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்.

ஸ்னோலினுக்குத் துணையாக டிஷானி (ம.சா.43), பினோலின் பிரியங்கா (ம.சா.61) மற்றும் இன்பெண்டா (ம.சா.15) அவரது தாயார் வனிதா (ம.சா.08) மற்றும் மனோகரன் (ம.சா.70) மற்றும் சிலர் சென்றார்கள். ம.சா.43 டிஷானி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவிற்குள் (Arch) சென்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆதார் அட்டைகள் வழங்கப்படும் இடம் அருகே ஒரு ஜமுக்காளத்தை விரிக்க முற்பட்டார். அவர்களது திட்டம் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து மனு கொடுப்பதாகும். இவ்வாறிருக்கையில் அவரின் தாயார் துப்பாக்கிச்சூடு சத்தத்தைக் கேட்டதாகக் கூறி, அந்த இடத்தை விட்டுப் போய் விடுவோம் என்று அழுது கூக்குரலிட்டார். ஆனால் அந்தச் சமயத்தில் காவல் துறையினர் ஸ்னோலினைச் சுட்டு விட்டார்கள். ஸ்னோலினின் வாயிலிருந்து ரத்தம் வந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில் இன்பெண்டா (ம.சா.15) அவரைக் கீழே உட்காருமாறு கூறினார். அந்தச் சமயம் ஒரு தோட்டா எங்கிருந்தோ வந்து கீழ்பக்கம் உள்ள நடைபாதை வேலியில் விழுந்தது. அவர்கள் எழுந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவிற்கு வெளியே வர ஆரம்பித்தார்கள். அந்தச் சமயம் ஒரு காவலர் அவரின் இடது கையைப் பிடித்து




THE CHENNAI SILKS

முறுக்கினார். அவர் 3 நாட்கள் நாட்டு வைத்தியம் பார்த்தார். அவருக்கு வலி குறையவில்லை. அவர் அரசு மருத்துவமனையில் 29.05.2018 அன்று அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைக்குப் பிறகு 13.06.2018 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

ம.சா.61 பினோவின் பிரியங்காவும் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் ஸ்னோலினின் உடனிருந்தவராவார். ஸ்னோலின் துப்பாக்கிக் குண்டு காயங்களுடன் ரத்தம் கசிந்தவாறு இருந்ததையும், ஸ்னோலினை மருத்துவமனைக்குச் சில போராட்டக்காரர்கள் கொண்டு சென்றதையும் பினோவின் பிரியங்கா (ம.சா.61) பார்த்தார். அவர் மேலும் தன் சாட்சியத்தில், ஒரு போராட்டக்காரருக்குத் துப்பாக்கிச்சூடு காயத்தால் இடுப்புக்குக் கீழேயும், மற்றொருவருக்கு வலது தொடையிலும் காயங்கள் ஏற்பட்டது குறித்தும் கூறியுள்ளார். பினோவின் பிரியங்காவுக்கு (ம.சா.61) தலையில் அடிபட்டது. அவருக்கு மயக்கமாகி விட்டது. அவருக்கு நினைவு திரும்பியபோது நல்லதம்பி மருத்துவமனையில் இருந்தார். திரு.மனோகரன் (ம.சா.70), திரு.பாக்கியராஜ் (ம.சா.109), தாஷினி (ம.சா.43) மற்றும் பினோவின் பிரியங்கா (ம.சா.61) ஆகியோரது சாட்சியங்கள் ஒத்ததாக உள்ளன. ம.சா.70-விற்கு மட்டும் துப்பாக்கிச்சூட்டில் இடது முழங்காலில் காயம் ஏற்பட்டுள்ளது.

மேலே கண்ட சாட்சியத்தை ஆய்வு செய்யும்போது, இறந்துபோன ஸ்னோலின் அவருடைய நண்பர்கள் குழுவுடன் இருந்தார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. தூத்துக்குடியில் மிகவும் சர்ச்சைக்குரிய விவகாரம்




THE CHENNAI SILK

நிகழ்ந்து கொண்டிருப்பதை எதிர்த்துப் போரிடவே, போராட்டக்காரர்களுடன் சேர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளைவில் நுழைந்தார் எனத் தெரிய வருகிறது. அந்தப் பெண்கள் அனைவரும் 20 வயது நிரம்பியவர்கள். அவர்கள், போராட்டத்தின் ஒற்றுமையை வெளிக்காட்டுவதற்காக, பனிமயமாதா கோவிலிலிருந்து நடந்தே அவ்வளவு தொலைவிற்கு வந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் கோஷமிட்டதைத் தவிர வேறு எந்தவிதமான சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டதாக முற்றிலும் யாதொரு ஆவண ஆதாரமும் இல்லை. பெண்கள் குழு என்ற நோக்கில், பொது நோக்கத்தை ஆதரித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முக்கிய வளைவிற்குள் கூடியவர்களைக் காவல் துறையினர் குறிவைத்துள்ளார்கள். காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றவுடன், அவர்கள் பின்வாங்க ஆரம்பித்தார்கள் என்பது தெரிய வருகிறது. காவல் துறையின் நடவடிக்கைக்கு அஞ்சிப் போராட்டக் களத்திலிருந்து விலகிச்செல்ல ஆரம்பித்தார்கள். காவல் அலுவலர்கள் உள்ளிட்ட யாருடைய உயிருக்கோ, உடலுக்கோ அல்லது சொத்துக்கோ எவ்வித மிரட்டலும் விடுக்காத நிலையில், காவல் துறையினர் அந்தப் பெண்களைப் பார்த்ததும் துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார்கள்

ஸ்னோலினுக்கு ஏற்பட்ட உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் காயம் மற்றும் பிரேதப்பரிசோதனை அறிக்கையாகிய மருத்துவரின் சாட்சியம் இவற்றிலிருந்து, இரண்டு வெவ்வேறு துப்பாக்கிகளை உபயோகித்து, கன்னம் உள்ளிட்ட தலைப்பகுதியில், உதவிக்கு ஆளில்லாத ஸ்னோலினுக்குக் காயங்கள்



ROYAL FURNITURE

ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அவசியம் துப்பாக்கியால் சுட வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் ஏன் காவல் நிலையாணையின்படி இடுப்புக்கு கீழே சுட்டிருக்கக் கூடாது? அதேபோல் தெளிவாக விவரிக்க முடியாத, கண்டிக்கத்தக்க காவல் துறையின் துப்பாக்கிச்சூடு நடவடிக்கையில், இளம்பெண் ஸ்னோலின் மற்றும் அவரின் கூட்டாளிகள் மீதான நடவடிக்கையில், ஒரு தோட்டா நடைபாதையை ஒட்டியுள்ள வேலிப் பகுதியில் விழுந்ததால் அதிர்ஷ்டவசமாக மற்றொரு இளம்பெண்ணுக்கு ஆபத்து ஏற்பட வில்லை. துப்பாக்கிச்சூட்டில் மோசமான காயங்கள் ஏற்பட்ட ஸ்னோலினை போராட்டக்காரர்களில் நல்ல உள்ளம் கொண்ட சிலர் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். பொன்னான நேரத்தை வீணாக்காமல் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லக் கடமைப்பட்டுள்ள யாதொரு காவல் அலுவலரும், காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முன்வரவில்லை.

5. <u>இறந்து போன ரஞ்சித்குமார்:</u>

5வது மற்றும் இறுதி நபராக, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் காவல் துறையினரின் துப்பாக்கிச்சூட்டில் ஏற்பட்ட துப்பாக்கிக் குண்டு காயங்களினால் இறந்தவர் 25 வயதுள்ள ரஞ்சித்குமார்.

பிரேதப்பரிசோதனைக்கு முந்தைய காயங்கள் பின்வருமாறு :

1. A circular perforated would (bullet entry wound) of diameter 4mm with surrounding abrasion width of 2mm all around the wound noted in the left occipital region which is 8cm from the left mastoid process and 3cm away



DECEASED JAYARAMAN IN THE PROCESSION
IN MARKET ROAD

from the midline. The wound margin is inverted. The wound is 174cms away from the right heel.

2. An irregular lacerated perforated wound (bullet exit wound) of size 2cmx1cmxbrain deep seen over the left side of head which is 7cms above the left ear and 7cm away from the midline. The wound margin is everted.
3. An abrasion size 3.5cmx1.5cm seen below the right eye.
4. An abrasion size 3cmx2cm seen in the outer aspect of right angle of mouth.
5. An abrasion size 1cmx1cm seen in the right side of forehead.
6. An abrasion size 4cmx3cm seen over the left cheek.
7. An abrasion size 2cmx1cm seen over the chin.
8. An abrasion size 4cmx2.5cm seen over the outer aspect of upper one third of right arm.
9. An abrasion size 6cmx2cm seen over the back of middle of left forearm.

இறந்துபோன ரஞ்சித்குமார் தலையின் பின்பக்கத்தில் ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில், தோட்டா, மூளையில் ஏற்படுத்திய துருத்திய காயத்தின் காரணமாக இறந்திருக்கிறார் என்பது பிரேதப்பரிசோதனை செய்த மருத்துவர் C.மனோகரன் (C.W.6)-ன் கருத்தாகும்.

அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள் உள்ள மாவட்ட சமூக நல அலுவலகக் கட்டடத்திற்கு அருகே, தென்வடல் சாலையில் கிழக்கும் பக்கத்தில், தலையில் மோசமான காயங்களுடன் கிடந்தார். அதே நேரத்தில் ஐ.ஜி.யின் அறிவுரைகளின்படி சார் ஆய்வாளர் திரு.சொர்ணமணி (எ.த.சா.211) Bolt Action Rifle மூலம் துப்பாக்கியால் சுட்டார். டி.எஸ்.பி. திரு.லிங்கத்திருமாறன் (எ.த.சா.212) அறிவுரைகளின்படி காவலர் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207)



SOUTH POLICE STATION

அதே பகுதியில் துப்பாக்கியால் சுட்டார் என்பது ஐ.ஜி., திரு.லிங்கத்திருமாறன் (எ.த.சா.212), திரு.சொர்ணமணி (எ.த.சா.211) மற்றும் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) ஆகியோரின் சாட்சியத்திலிருந்து தெரிகிறது. இந்த விவரங்கள் மற்றும் சூழ்நிலைகள், ரஞ்சித்குமாரின் இறப்பில் துப்பாக்கியால் சுட்டவர்கள் சார் ஆய்வாளர் திரு.சொர்ணமணி (எ.த.சா.211) மற்றும் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) எனக் காட்டுகிறது. இறந்துபோன ரஞ்சித்குமாரின் தலையின் பின்பக்கத்தில் காயம் ஏற்பட்டது. அது உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் காயமாகும். அவர் அந்த இடத்திலிருந்து பின்வாங்கி ஓடியபோதும் காவல் துறையினர் விடவில்லை. மேற்சொன்ன நபர்கள் பிரச்சினை செய்பவர்கள் அல்ல அவர் போராட்ட இடத்திலிருந்து திரும்பிக் கால் தெறிக்க ஓடினார். அவருக்குத் துப்பாக்கிச்சூட்டில், தலையில் ஊடுருவிய காரணத்தால், மரணக் காயம் ஏற்பட்டு இறப்பு ஏற்பட்டுள்ளது. ஓடுகின்ற நபரைச் சுடுவது துணிச்சலோ வலிமையோ என்று கூற முடியாது. இது வீரச் செயல் அல்ல, கோழைத்தனமான செயலாகும். இந்தச் செயலுக்குக் காவல்துறை நன்மதிப்பை பெறாது.

இறந்த ரஞ்சித்குமார் ரத்த வெள்ளத்தில் கிடந்தார். அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக் காவலர்கள் யாரும் வரவில்லை. ஒரு புகைப்படக்காரர், திரு.முத்துகிருஷ்ணன் (ம.சா.92) என்பவர், வேறு இருவருடன் சேர்ந்து ரஞ்சித்குமாரைத் தூக்கி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளைவு அருகே தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு தனியார் ஆம்புலன்ஸில் தூத்துக்குடி




SOUTH POLICE STATION

அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். அவர்களுடன் பிற்பகல் 12.25 மணிக்கு இறந்துபோன மற்றொருவரான ஸ்னோலினையும் கொண்டு சென்றார்கள்.

இதுவரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் மரணக் காயங்கள் ஏற்பட்ட நபர்கள் சம்பந்தமாகப் பரிசீலித்தோம். அதே துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் போராட்டக்காரர்களில் பலருக்குத் துப்பாக்கிச்சூட்டில் கடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளன. காயமடைந்த 7 நபர்கள் இந்த ஆணையம் முன்பாக ஆஜராகி விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் திரு.நெல்சன்ராய் (ம.சா.4), திரு.சண்முகராஜ் (ம.சா.5), திரு.கிளின்டன் (ம.சா.10), திரு.பரமசிவம் (ம.சா.11), திரு.இராமச்சந்திரன் (ம.சா.16), இவ்லின் விக்டோரியா (ம.சா.23) மற்றும் திரு.மனோகரன் (ம.சா.70) ஆவர். அவர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் பற்றியும் அவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுப் பரிகாரம் பற்றியும் அறிக்கையில் தேவையான இடத்தில் பரிசீலிக்கப்படும்.

மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திற்குள் நடந்த தடியடியில் காயமடைந்த போராட்டக்காரர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இன்பெண்டா (ம.சா.15), மரியஜூடி தேறயா (ம.சா.42), பினோலின் பிரியங்கா (ம.சா.61), உலகநாத பெருமாள் (ம.சா.69), சந்தோஷ்ராஜ் (ம.சா.73) மற்றும் அந்தோணி (ம.சா.75) ஆகியோர்.



மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை ஒட்டி வெளியே நடைபெற்ற தூண்டுதலற்ற துப்பாக்கிச்சூடு :

சிறிது நேரத்தில் ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் காவல்துறையின் சிலந்திக்கூடு நடவடிக்கையிலிருந்து வெளியே வந்தார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவு அருகே மற்றொரு குழப்பம் ஏற்பட்டது. அவர் போராட்டகாரர் கூட்டத்தின் ஒரு பிரிவினரை, மேற்குப் புறம் பாளையங்கோட்டை நான்கு வழிச்சாலையில் விரட்டிக்கொண்டு சென்றார். அப்பொழுது ஜே.எஸ்.பி. திரு.செல்வநாகரத்தினம், இ.கா.ப. (எ.த.சா.242) தன் குழுவினருடன் வந்தார். ஸ்டெர்லைட் ஊழியர்க் குடியிருப்புகளில் தீ அதிகமாக எரிந்து கொண்டிருப்பதாகவும் அங்கு விரைந்து செல்லுமாறும் அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அப்பொழுது பிற்பகல் 12.40 மணி இருக்கும். அந்த நேரத்திற்குச் சற்று முன்னர்தான் ஸ்டெர்லைட் அலுவலர்க் குடியிருப்புகளை நோக்கிச்சென்ற ஒரு தீயணைப்பு வாகனம், போராட்டக்காரர்களால் தீ வைக்கப்பட்டதாக வான் செய்தி (VHF) மூலமாக ஐ.ஜி.க்குத் தகவல் கிடைத்தது. இதற்கிடையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் பாளையங்கோட்டை நான்கு வழிச்சாலையில், ஒரு காவல் ஆய்வாளர், அவரின் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, வன்முறை கும்பல் ஒன்று, அந்த வாகனத்தைத் தீ வைக்க முயற்சி செய்தது. அதனால் அவர் திரு.சொர்ணமணியிடம் (எ.த.சா.211) கூடுமாறு



STERLITE QUARTERS

உத்தரவிட்டார். அதன்படி அவர் Bolt Action Rifle மூலம் ஒரு தடவை சுட்டார். கூட்டம் கலைந்துவிட்டது. காவல் துறையினர் காவல் ஆய்வாளர் திரு.விஜயகுமாரை (எ.த.சா.120) மீட்டனர். அப்பொழுது நேரம் பிற்பகல் 12.45 மணி முதல் 12.50 மணி வரை இருக்கும். கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவுப் பகுதியிலிருந்து கலைந்து, கிழக்கு நோக்கிச் சென்றது. அப்போது விருதுநகர் காவல் கண்காணிப்பாளர் திரு.ராஜராஜன், இ.கா.ப. (எ.த.சா.231), மதுரை டி.ஐ.ஜி. திரு.பிரதீப் குமார், இ.கா.ப. (எ.த.சா.241), கன்னியாகுமரி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.ஸ்ரீநாதா, இ.கா.ப. (எ.த.சா.228), ஒருவர் பின் ஒருவராக வந்து சேர்ந்தார்கள். அவர் திரு.ராஜராஜனிடம் (எ.த.சா.231) தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குச் செல்லுமாறும் திரு.ஸ்ரீநாதா (எ.த.சா.228)-ஐ பைபாஸ் பாலம் அருகில் உள்ள ஒரு வீட்டில் தஞ்சம் அடைந்துள்ள காவல் அலுவலர்களை மீட்குமாறும் அறிவுறுத்தினார். அவர் டி.ஐ.ஜி. திரு.பிரதீப்குமாரிடமும் (எ.த.சா.241) தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார். அவர் மதுரைக் காவல் கண்காணிப்பாளர் திரு.மணிவண்ணனிடம், தூத்துக்குடி தென்பகுதிக் காவல் நிலையப் பகுதிக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார். பின்னர் அவர் மாவட்டக் காவல் அலுவலகத்தைச் சென்றடைந்தார். அப்பொழுது பிற்பகல் 1.30 மணி இருக்கும்.



STERLITE QUARTERS

டி.ஐ.ஜி. அவரின் பங்கிற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவு வழியாக அவரின் குழுவினருடன் பாளையங்கோட்டை நான்கு வழிச்சாலையைச் சென்றடைந்தார். அவ்வாறிருக்கையில் அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவிற்குக் கிழக்கே 100 மீட்டர் தொலைவில் நான்கு வழிச்சாலையில் போராட்டக்காரர்கள் கூடியிருப்பதைப் பார்த்தார். சிலர் ஸ்டெர்லைட் அலுவலர் குடியிருப்புகளுக்குச் செல்லும் வழியில் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது பிற்பகல் 1.00 மணி இருக்கும். அவர் திரு.சுடலைக்கண்ணுவிடம் (எ.த.சா.207) கூட்டத்தைக் கலைக்க, சுடுமாறு உத்தரவிட்டார். திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முக்கிய வளைவு அருகே நான்கு வழிச்சாலையில் நின்றுகொண்டு, மேற்கிலிருந்து கிழக்காக 0.303 Rifle மூலம் 3 முறை சுட்டார். யாருக்கும் காயம் ஏற்பட்டதா என்று டி.ஐ.ஜி-க்குத் தெரியாது. கூட்டம் கலைந்துவிட்டது. டி.ஐ.ஜி. அவரது குழுவினருடன் தாமிரா குடியிருப்பிற்குச் சென்று அங்கு வாகனங்களுக்குத் தீ வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார். அதன் பிறகு டி.ஐ.ஜி. தன் குழுவினருடன் போராட்டக்காரர்களை விரட்டிய பின்னர், சுமார் 10 நபர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவுப் பகுதியை அடைந்தார்கள்.

இரண்டு காவல் உயர் அலுவலர்களான ஐ.ஜி. மற்றும் டி.ஐ.ஜி.யின் சாட்சியங்களில், துப்பாக்கியால் சுட்டவர்கள் இவர்களின் உத்தரவுகளின்படி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவிற்கு வெளியே, நான்கு வழிச்சாலையில் பாளையங்கோட்டை ரோட்டில் இரண்டு முறை




RESIDENTS OF STERLITE STAFF QUARTERS
AFTER INCIDENT

துப்பாக்கிச்சூட்டை நடத்தினார்கள். துப்பாக்கியால் சுட்டவர்கள் திரு.சொர்ணமணி (எ.த.சா.211) மற்றும் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207). திரு.சொர்ணமணி (எ.த.சா.211) ஐ.ஜி.யின் உத்தாவின்பேரிலும், திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) டி.ஐ.ஜி.யின் உத்தாவின்பேரிலும் சுட்டார்கள். இதிலிருந்து இரண்டு உயரலுவலர்களின் உத்தரவின்பேரில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதேபோல் 3 போராட்டக்காரர்கள் காவல் துறையின் தோட்டாக்களால் இறந்து விழுந்தார்கள் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது- அவர்கள் மணிராஜன், கிளாஸ்டன் மற்றும் ஜெயராமன்.

6. <u>இறந்து போன மணிராஜன்</u> :

இறந்த மணிராஜனுக்கு 34 வயது. இறந்த மணிராஜனுக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு :

கீழ்க்காணும் பிரேதப்பரிசோதனைக்கு முந்தைய காயங்கள் குறிக்கப்பட்டன :

1. A circular perforated wound **(bullet entry wound)** of diameter 4mm with surrounding abrasion width of 3mm all round the wound noted in the right forehead which is 2.5cms away from the midline and 1cm above the right eye brow. The wound margin is inverted. The wound is 158cms away from the right heel.
2. An irregular lacerated perforated wound **(bullet exit wound)** of size 3cmx3cmxbrain deep seen over the left occipital parental region which is 6cms lateral and back to the left mastoid process and 12cms away from the mid line. The brain matter and bone chips oozing from the wound. The wound margin is everted.



OUTSIDE COLLECTORATE

பிரேதப்பரிசோதனை செய்த மருத்துவர் C.மனோகரன் (C.W.6) என்பவரின் கருத்துப்படி, இறந்துபோனவர் வலப்பக்க நெற்றியில் துப்பாக்கிக் குண்டு துளைத்ததன் விளைவாக இறந்துள்ளார். இறந்தவருக்கு மூளையில் துருத்திய காயத்தினாலும், தோட்டா உச்சிமண்டை எலும்பு வழியாக வெளியேறியதாலும் இறப்பு ஏற்பட்டுள்ளது.

பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சனையை முன்னிறுத்தி மணிராஜன் போராட்டத்தில் கலந்துகொண்டார். ஐ.ஜி. மற்றும் டி.ஐ.ஜி. ஆகியோரின் சாட்சியத்தில், அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவிற்கு வெளியே வந்த பிறகு, அதிக எண்ணிக்கையிலான போராட்டக்காரர்கள் வேண்டத்தகாத செயலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் என்று கூறியுள்ளார்கள். காவல் துறையின் கூற்றுப்படி, போராட்டக்காரர்கள் யாதொரு நாசவேலையும் புரியவில்லை. ஏன் காவல் துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள் என்பதும், மேலும், இடுப்புக்குக் கீழே சுடாமல் தலையில் சுட்டது ஏன் என்பது முழுக் குழப்பமாகவும் புரிந்துகொள்ள முடியாததுமாக இருக்கிறது. காவல் துறையினர் ஆயுதங்களைப் பயன்படுத்திய விதம், இவ்விதமாகச் சூழ்நிலையைக் கையாண்டது ஆகியவை காவல் துறையின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. துப்பாக்கி பயன்படுத்தும் முறையில் பயன்படுத்தப்படவில்லை என்றும், அவ்வாறான சூழ்நிலைகளில் தடியடி நடத்திக் கலைக்க முயன்றும், அதனால் சில போராட்டக்காரர்கள் தப்ப முடியாமல் இருந்த நேரத்தில், காவல் துறையினர்



UNDER THE BYPASS BRIDGE

இவ்வாறு செயல்பட்டிருக்கிறார்கள் என்றும் இந்த ஆணையம் கருத வேண்டியுள்ளது. போர்க்குணம் மிக்க கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்துவது போல, போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்துவதற்கு, காவல் துறையினர் ஆயுதங்களைப் பயன்படுத்தும் அளவிற்கு, இந்த வழக்கின் தன்மை இல்லை. ஸ்டெர்லைட் நிருவாகத்திற்கு எதிராகப் போராடுபவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு, காவல் துறையினர் போராட்டக்காரர்களின் மீது இவ்வளவு சினம் கொண்டு, சற்று அதிகமாக, ஊர்வலப் பாதை முழுவதும் இருந்த போராட்டக்காரர்கள் மீது, காவல் துறையினர் தடியடி நடத்தியுள்ளார்கள். பதிலுக்குப் போராட்டக்காரர்கள் கற்களை வீசியிருக்கிறார்கள். அதுதான் அவர்களின் ஆயுதத்திற்கான ஒரே வழி. துப்பாக்கியால் சுட்ட இருவரில், கிழக்கு நோக்கி, எந்த வகையிலும் மணிராஜனுக்குக் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்கிற விதத்தில், துப்பாக்கியால் சுட்டுள், தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் துப்பாக்கியால் சுட்டுக் களியாட்டம் நடத்தியதற்கு திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) காரணமானவர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த மணிராஜன் சம்பந்தமாக, பொதுமக்களில் இரண்டு சாட்சிகளை விசாரிப்பது பொருத்தமானது ஆகும். ம.சா.14 திரு.ஆனந்தகண்ணன். அவர் 35 வயது நிரம்பியவர். அவர் பெயிண்டர் தொழில் செய்து வருகிறார். அவர் கண்களால் கண்ட சாட்சியாவார். அவர் மிக முக்கியமாக, சம்பவத்தில் காயம் அடைந்தவர். அவர் பைபாஸ் பாலம் அருகே தீ எரிவதை பார்த்தார். என்ன நடந்தது என்பதை அறிய ஆவல் கொண்டு, அந்த இடத்திற்கு



INSIDE COLLECTORATE

மற்றவர்களுடன் சேர்ந்து விரைந்தார். அப்பொழுது காதுகள் செவிடாகும்படி சத்தம் கேட்டது. அவர் பின்பக்கமாகத் திரும்பியபோது ஒரு நபர் நெற்றியில் துப்பாக்கித் தோட்டா அடித்துக் கீழே விழுவதைப் பார்த்தார். திகைத்த ஆனந்த கிருஷ்ணன் (ம.சா.14) காயம் ஏற்பட்டவரைத் தூக்கினார். எங்கேயிருந்து அவர் சுடப்பட்டார் என்று தெரியாது. துப்பாக்கிச்சூடு காயம் அவரின் இடது முழங்காலில் ஏற்பட்டது. அப்பொழுது தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு ஆம்புலன்ஸ் அந்த வழியாக வந்தது. அதில் அவரையும், துப்பாக்கிச்சூடு காயங்கள் அடைந்த மற்ற மூவருடன் சேர்த்து அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். TMMK-க்கு சொந்தமான தனியார் ஆம்புலன்ஸின் ஓட்டுநர், ம.சா.285 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் இறந்துபோன மணிராஜைத் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளார். அதே ஓட்டுநர்தான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினுள் சென்று துப்பாக்கிச்சூட்டில் இறந்துபோன கந்தையாவின் உடலையும் தூக்கித் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றவர்.

7. <u>இறந்து போன கிளாஸ்டன்</u>

இறந்து போன கிளாஸ்டனுக்கு 40 வயது. அவர் மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திற்கு வெளியே காவல் துறையின் துப்பாக்கிச்சூட்டில் பலியான 2-வது நபர்.

பிரேதப் பரிசோதனைக்கு முன் காணப்பட்ட காயங்கள் பின்வருமாறு :



INSIDE COLLECTORATE

1. An oblique lacerated wound of size 2cmx0.5cm to 1cmxscalp deep seen over right side of forehead with black colour marginal abrasion. It lies 1cm above right eye brow, 2cm above and right to bridge of nose and 1cm right to anterior midline. Breath of the wound is broader about 1cm in the lower half and narrower about 0.5cm in the upper half. This wound lies 163cm from the foles of feet.
2. A circular lacerated punctured wound (bullet entry wound) of diameter 1cmxpleural cavity deep seen over the front of left side chest, 5cm inner and below to left nipple, 15cm below the suprasternal notch, 4cm left to the anterior midline and 23cm above the umbilicus. The marging of black in colour. This wound lies 125cm from the foles of feet.
3. An irregular lacerated punctured wound (bullet exit wound) of size vertically 1cm and horizontally 0.5cmxpleural cavity deep seen over the left side of lower part of back chest, 3cm left to the posterior midline and 24cm below to nape of neck marging of the wound was irregular and everted. This wound lies 119cm from the foles of feet.

பிரேதப் பரிசோதனை செய்த பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை மருத்துவர் வினோத் அசோக் சௌத்ரி C.W.9 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இறந்து போனவர், இடப்பக்க மார்பில் ஏற்பட்ட சிதைந்த மற்றும் உள்காயத்தின் காரணமாக ஏற்பட்ட அதிர்ச்சியாலும், ரத்தக் கசிவினாலும் இறந்துள்ளார். இது முன்கையில் ஏற்பட்ட துப்பாக்கித் தோட்டா காயத்துடன் ஒத்து இருக்கிறது என்று கருத்து தெரிவித்துள்ளார்.

கிடைக்கப் பெறுகிற ஆவண ஆதாரங்களிலிருந்து கிளாஸ்டனை யார் சுட்டுக்கொன்றது எனக் கண்டறிய, எந்த அளவுக்கு வாய்ப்பு உள்ளது என்பதை



உறுதி செய்ய வேண்டும். மீண்டும் நினைவிற்கொள்ள வேண்டியது, ஐ.ஜி.யின் உத்தரவுகளின்படி, சார் ஆய்வாளர் திரு.சொர்ணமணி (எ.த.சா.211) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வெளியே நான்கு வழித் தேசிய நெடுஞ்சாலையில் மேற்கு நோக்கிச் சுட்டார். அவ்வாறெனில், இறந்துபோன கிளாஸ்டன் அந்த நேரத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வெளியே முதன்மை வளைவை அடுத்த கீழ்பக்கத்தில் இருந்தார் என்பதால், அவர் இறந்துபோன கிளாஸ்டனைச் சுட்டிருக்க வாய்ப்பில்லை. அப்படியெனில் துப்பாக்கியால் சுட்டவர்களான மற்ற இருவரில், மேற்கு திசையிலிருந்து கிழக்கு நோக்கி டி.ஐ.ஜி. உத்தரவுப்படி சுட்ட திரு.சுடலைக்கண்ணு அல்லது ஐ.ஜி. (எ.த.சா.247)-ன் உத்தரவின்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முக்கிய வளைவுக்கு உள்ளே அருகில் இருந்து கிழக்கு நோக்கி 4 தடவை சுட்ட சதீஷ்குமார் (எ.த.சா.202) தான் இறந்துபோன கிளாஸ்டனைச் சுட்டிருக்கக் கூடும்.

இந்தச் சம்பவத்தைக் கண்களால் கண்ட சாட்சி ம.சா.475 திரு.C.ரூபஸ்ட். அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் எல்லைக்குள் நடந்த துப்பாக்கிச்சூடு பற்றி சாட்சியம் கூறுகிறார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவுக்கு வெளியே சாலையில் கூடியிருந்த மக்கள் மீது காவல் துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதைப் பார்த்தார். அவ்வாறிருக்கையில் சர்வீஸ் சாலையில் நின்று கொண்டிருந்த 30 வயதுடைய இறந்துபோன கிளாஸ்டனின் மார்பில் துப்பாக்கிச்சூடு காயம் ஏற்பட்டுக் கீழே விழுந்தார். சாட்சியும், மற்றொருவரும் அவரைத் தூக்க முயன்றபோது, ஏதோ பொருள் அவரின் நெற்றியில்



DECEASED SHANMUGAM

உரசிக்கொண்டு சென்றிருக்கிறது என்பதை உணர்ந்தார். அவருக்கு ரத்தக்கசிவும் இருந்து கொண்டிருந்தது.

இறந்துபோன கிளாஸ்டன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவிற்கு வெளியே நான்கு வழித் தேசிய நெடுஞ்சாலையில் துப்பாக்கிச்சூட்டில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக இறந்துள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

8. <u>இறந்து போன ஜெயராமன்</u>

இறந்து போன ஜெயராமனுக்கு 42 வயது. அவர் அருகில் சுடப்பட்டு இறந்தவர்களின் வரிசையில் 3-வது நபர். பிரேதப்பரிசோதனை செய்த பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவர் விநோத் அசோக் செனத்ரி பிரேதப் பரிசோதனைக்கு முந்தைய காயங்களைப் பார்த்தார்.

பிரேதப் பரிசோதனைக்கு முந்தைய காயங்கள் பின்வருமாறு :

A sutured wound of length 1cm seen over the right side of face, 2cm front of midline of the right ear, 8cm above angle of mandible on right side and 7cm behind the right eye. The wound was 156cm above the right sole. On removal of suture, a lacerated punctured wound (bullet entry wound) of size 1x0.8cm with brownish black abrasion collar of thickness 0.3cm seen in the upper part of the wound and 0.5cm seen in the lower part of the wound.

தலையில் குண்டு துளைத்த காயம் இருந்தாலும், குண்டு வெளியேறிய காயம் இல்லை. தோட்டா முனையில் நொறுங்கிக்கொண்டு மண்டைக் குழியிலேயே (தலையிலேயே) தங்கிவிட்டது. மருத்துவரின் கருத்துப்படி, கிரானியோ செரிபிரல் பகுதியில் ஊடுருவிய காயத்தால் இறப்பு ஏற்பட்டுள்ளது என்பதாகும். இது துப்பாக்கித் தோட்டா காயத்துடன் பொருந்துகிறது. தோட்டாவின் துகள்கள்




ANTONY SELVARAJ DEAD AFTER
GUNSHOT INJURY

தடயவியல் பரிசோதனை செய்யப்பட்டதில் மண்டைக் குழியிலிருந்து எடுத்ததாகத் தெரிகிறது. சிதைந்த ஈயத்துண்டு சுடப்பட்ட ball (projectile) Portion மூலம் 0.410 அங்குல படைத்தளவாடம் / துப்பாக்கி வெடிமருந்து ஆகும் என்று தடயவியல் நிபுணர் திரு.திருநாவுக்கரசு (C.W.10) கருத்து தெரிவித்துள்ளார்.

இறந்துபோன ஜெயராமன் மேற்குறிப்பிட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து, இறந்து போனவரின் மண்டைக் குழியிலிருந்து எடுக்கப்பட்ட தோட்டாவின் சிதைந்த எறிபொருள் கொண்ட 0.410 Musket மற்றும் அந்தத் துப்பாக்கியைப் பயன்படுத்தியது திரு.சதீஷ்குமார் மட்டுமே என்பதாலும் திரு.கடலைக்கண்ணு அல்ல என்பதாலும், திரு.சதீஷ்குமார்தான் இறந்து போன ஜெயராமனைச் சுட்டிருக்கிறார் என்பதும், திரு.சொர்ணமணி மேற்கு நோக்கித் துப்பாக்கியால் சுட்டார் என்று சொல்லாததாலும், திரு.சதீஷ்குமார்தான் இறந்து போன ஜெயராமனை சுட்டிருக்கிறார் என்பது தெரிகிறது. ஐஜி (எ.த.சா.247)-ன் உத்தரவுகளின்படி திரு.சதீஷ்குமார் (எ.த.சா.202) துப்பாக்கியால் மேற்சொன்னவாறு சுட்டுள்ளார் என்பது முக்கியமானதாகப் பார்க்கப்பட வேண்டியதாகும்.

திரு.முத்துராஜ் (ம.சா.6), கொத்தனார் வேலை செய்பவர், கண்ணால் கண்ட சாட்சி. அவர் தனது நண்பர் செல்வத்துடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவை அடைந்தார். அவர்கள் இருவரும் நீர் பருகிக் கொண்டிருந்தார்கள். அப்போது இருவரும் மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்குள் துப்பாக்கியால் சுடும் சத்தத்தைக் கேட்டனர். மக்கள் வெளியே ஓடி வந்து


camera
N
flag
signal
Villianur
Street
Street
ice factory
school
bridge
bridge
telephone pole 225
maharaja masala factory
DO NO 20-E
Main garvalve
Street garvalve
7.5
7.8
22.8

கொண்டிருந்தார்கள். அவ்வாறிருக்கையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவு அருகே அவர்களுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு முதியவர் காவல் துறையினரால் சுடப்பட்டார். அவரது தலை நொறுங்கியது. காயம் ஏற்பட்டவரைத் தூக்குவதற்காகச் சாட்சி தலைகுனிந்தார். அப்பொழுது ஒரு துப்பாக்கிக் குண்டு அவரது இடப்பக்கத் தாடையை லேசாக உரசிக்கொண்டு சென்றது. அவர் அந்த காயம்பட்ட முதியவருடன் சேர்ந்து கீழே விழுந்து விட்டார். அந்தக் காயம்பட்ட முதியவர்தான் இறந்துபோன ஜெயராமன் ஆவார். காவல்துறையின் எச்சரிக்கை எதுவும் கிடையாது, தடியடி எதுவும் கிடையாது. அவருடன் வந்திருந்த அவரது நண்பர் செல்வம் சாட்சியை அவரது மோட்டார் சைக்கிளில் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்.

ம.சா.302 திரு.சதீஷ், மக்கள் அதிகார அமைப்பிற்கு ஆதரவாகச் செயல்படுபவர் ஆவார். இறந்துபோன ஜெயராமன் உசிலம்பட்டியிலிருந்து வந்த அவருடைய சக இயக்கத்தினர் ஆவார். சாட்சி திரு.சதீஷ் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்தார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து 500 மீட்டர் தொலைவில் அவர் இருந்தார். அவ்வாறிருக்கும்போது, அடுத்த 5 நிமிடங்களுக்குள் அவரது சகத் தோழர்களில் ஒருவர் தலையில் ஒரு துப்பாக்கிக் குண்டு தாக்கிக் கீழே விழுந்து விட்டார். சாட்சி சதீஷ், அவரைத் தூக்கி, மாற்றுத் திறனாளிகளுக்குரிய வாகனத்தில் வைத்து, மாற்றுத் திறனாளி அவ்வாகனத்தை ஓட்டிச் செல்ல, இவ்வாறு தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் மருத்துவமனை வரை நடந்தே



THERSPURAM

சென்றார். பின்னரே துப்பாக்கிக் குண்டு தாக்கி கீழே விழுந்தவர் பெயர் ஜெயராமன் என்பது தெரிய வந்தது.

காவல் துறையின் அணுகுமுறை, போராட்டக்காரர்களின் தலையில் அல்லது மார்பில் குறிவைத்துச் சுட்டு உடனடி இறப்பை ஏற்படுத்துவதுதான் என்பதையே இந்த மூன்று நிகழ்வுகளும் காட்டுகின்றன. காவல்துறை, போராட்டக்காரர்களுக்குக் காயங்களையும் கடுங்காயங்களையும் ஏற்படுத்துவதன் மூலம், மரணம் ஏற்படுத்துவதே நோக்கமாகக் கொண்டுள்ளனர் என்பதையே இது வெளிப்படுத்துகிறது. போராட்டக்காரர்கள், ஆத்திரமூட்டுதல் வகையில் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. காவல் துறையினர் துப்பாக்கியால் சுடும் அளவிற்குப் போராட்டக்காரர்கள் ஆத்திரம் ஊட்டவில்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் துப்பாக்கிச்சூடு நடத்திக் கூட்டம் உடனே கலைந்த பிறகு, அந்தத் துயரத்தைத் தாண்டிப் போராட்டக்காரர்கள் கடுமையான எதிர்ப்பு எதையும் காட்ட முடியாது. போராட்டக்காரர்கள் அந்தச் சூழ்நிலையில் இருந்து வெளிவர முயலும் மனநிலையில் இருந்தார்களே தவிர, காவல் பணியாளர்களுக்குக் காயம் ஏற்படுத்தவோ, உயிருக்கோ கைகால்களுக்கோ அச்சுறுத்தல் செய்யவோ இல்லை. போராட்டக்காரர்களின் நீண்ட நாள் குறைகள் தீர்வு செய்யப்படாமல் இருப்பதால் அவ்வாறு போராட்டம் செய்தார்களே தவிர, காவல் துறையினரைக் கோபமூட்டுவதற்காக அல்ல. காவல் துறையினர் பதில் நடவடிக்கையாக செய்த செயல் சரியானதல்ல. முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வெளியே நான்கு வழிச்சாலையில் எச்சரிக்கை எதுவும்



THERSPURAM

கொடுக்காமல் மறுபடியும் துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்கிறார்கள். மெகாபோன் மூலமாகப் போராட்டக்காரர்களுக்கு அறிவிப்பு எதுவும் அளிக்கவில்லை. இதனால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வெளியே முதன்மை வாயில் அருகில் துரதிருஷ்டவசமான சம்பவம் ஏற்பட்டது.

**<u>காவல்துறையினரின் அத்துமீறல்கள் - மற்றும் அதனால் ஏற்பட்ட மோசமான விளைவுகள்:</u>**

எ.த.சா.205 சிறப்புச் சார் ஆய்வாளர் திரு.சக்திவேல் ஆவார். ஆயுதங்கள் மற்றும் தளவாடங்களுக்கு (Bell of Arms)-க்குப் பொறுப்பாவார். அவரிடம் ஆயுதப்படை ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான கலவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அவசரமாக ஆயுதங்கள் தேவைப்படுவதாகவும், ஆயுதங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் கூறினார். தலைமைக் காவலர் திரு.ராஜா (எ.த.சா.203), தலைமைக் காவலர் திரு.லட்சுமிகாந்தன், காவலர் திரு.முருகன் (எ.த.சா.204), முதல்நிலைக் காவலர் திரு.ஜெயபிரகாஷ் ஆகியோர், காவல் பணியாளர்களுக்கு உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மேற்கண்ட காவலர்களை, உடன் அழைத்துக்கொண்ட சாட்சி சக்திவேல், 5 SLR துப்பாக்கிகள் மற்றும் 50 தோட்டாக்களை எடுத்துக்கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைப் பிற்பகல் 12.50 மணியளவில் அடைந்தார். காவல் ஆய்வாளர் திரு.ஹரிஹரன் (எ.த.சா.213) மற்றும் டி.எஸ்.பி. ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் காவல் ஆய்வாளர் திரு.ஹரிஹரனிடம் (எ.த.சா.213) பேசினார்கள்.




THRESPURAM JUNCTION

திரு.ஹரிஹரன் (எ.த.சா.213) ஆயுதங்களை ஒப்படைக்குமாறு சாட்சியிடம் கேட்டார். அவர் பதிவேட்டில் ஆயுதங்களின் விவரத்தைப் பதிவு செய்துவிட்டு அவற்றில் ஒன்றை திரு.ராஜாவிடமும் (எ.த.சா.203), இன்னொன்றை திரு.லட்சுமிகாந்தனிடமும், மற்றொன்றை திரு.முருகனிடமும் (எ.த.சா.204) கொடுத்தார். இவ்வாறு திரு.ஹரிஹரன் (எ.த.சா.213) தலா 10 தோட்டாக்களுடன் தலா ஒரு SLR-I மூவரிடமும் ஒப்படைத்தார். காவல் ஆய்வாளர் திரு.ஹரிஹரனின் (எ.த.சா.213) அறிவுரையின்பேரில் ஒரு SLR Rifle, 30 தோட்டாக்களுடன் திரு.சுடலைக்கண்ணுவிடம் (எ.த.சா.207) ஒப்படைக்கப்பட்டது. அப்பொழுது பிற்பகல் 12.50 மணி இருக்கும். சாட்சி துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை திரு.சுடலைக்கண்ணுவிடம் ஒப்படைத்ததற்கு விளக்கம் கூறியுள்ளார். அதில் அவர் தூத்துக்குடிக் காவல் கண்காணிப்பாளருடன் இருப்பவர் என்றும், அவை அவருக்கு தேவைப்படுகிறது என்றும் கூறியுள்ளார். சாட்சி முதலில் மறுத்துள்ளார். ஆனால் காவல் ஆய்வாளர் திரு.ஹரிஹரன் (எ.த.சா.213) அறிவுரையின்பேரில் மட்டுமே சுடலைக்கண்ணுவிடம் (எ.த.சா.207) மேற்சொன்ன ஆயுதங்களும் தளவாடங்களும் ஒப்படைக்கப்பட்டன. இவ்வாறாக திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) ஒரு சிறப்பு நிலையில் உள்ள காவலர். அவர் தேவையில்லாமல் இந்தச் சூழ்நிலையில் ஆயுதம் ஏந்தியிருந்தார். காவல் ஆய்வாளர் திரு.ஹரிஹரன் (எ.த.சா.213) ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ள இடத்திற்குப் பொறுப்பான அலுவலரை அழைத்து ஆயுதத்தையும், 30 தோட்டாக்களையும்



திரு.கடலைக்கண்ணுவிடம் ஒப்படைக்கச் செய்தார் என்பதும் மூத்தக் காவல் அலுவலர்கள் இருந்தும், ஒரு காவலரிடம் ஒப்படைத்தது எவ்வாறு என்பதையும் கவனிக்க வேண்டியுள்ளது. திரு.கடலைக்கண்ணுவிடம் (எ.த.சா.207) 1 SLR துப்பாக்கியும் 30 தோட்டாக்களும் ஒப்படைக்கப்பட்டன. இதனால் ஒரு அழிவையே ஏற்படுத்த இயலும் என்பதை நடைபெற்ற சம்பவங்களிலிருந்து நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

அடுத்த சூழ்நிலை, ஆணையத்தின் உணர்வை அதிர்ச்சியடையச் செய்வதாகும். வேதனையடையும் விதத்தில் மற்றொரு SLR (Self Loading Rifle) தலைமைக்காவலர் திரு.ராஜாவிடம் (எ.த.சா 203) கொடுக்கப்பட்டது. காவல்துறை Eicher வாகனம் காவல் துறையினருக்கு உணவு கொண்டு வருவதுடன் ஆயுதங்களையும் சேர்த்துக் கொண்டு வந்துள்ளது. திரு.ராஜா (எ.த.சா.203) அந்த வாகனத்தின் மீது ஏறிச் சுட்டுள்ளார். Eicher வாகனத்தில் உணவுடன் சேர்த்து ஆயுதங்களையும் கொண்டு வந்திருப்பது ஆணையத்திற்கு வியப்பை ஏற்படுத்தியிருக்கிறது. காவல் துறையில் உயர்ந்த நிலையில் உள்ள ஐ.ஜி. இந்த இடத்தில் ஆயுதங்களைக் கொண்டுவரச் செய்திருக்கிறார் என்பதை மனதில் கொள்ளவேண்டும். அவ்வாறிருக்கையில் துப்பாக்கியைப் பயன்படுத்துவதற்காகக் கொண்டு வந்திருக்கும் நிகழ்வு தொடர்பாக, அறிவுரை, வழிகாட்டுதல்கள் அல்லது உத்தரவுகள் இன்றி SLR போன்ற ஆயுதங்களை கீழ்நிலையில் உள்ள காவலர்களிடம் ஒப்படைக்கலாமா? என்று கேட்டிருக்க வேண்டும் அல்லது எந்த ஆயுதத்தைக் காவலரிடம் கொடுக்கலாம் என்பதையும் கேட்டிருக்க வேண்டும்.



மாறாக, குறைந்தபட்சம் அந்த இடத்தில் இருந்த டி.ஐ.ஜி அல்லது எஸ்.பி.யிடம் அணுகி அறிவுரைகள் கேட்டிருக்க வேண்டும். திரு.ஹரிஹரனின் நடத்தை விசித்திரமான, தன்னிச்சையான, விருப்பத்தின் பேரில் செயல்பட்ட ஒரு சர்வாதிகாரப் போக்காக உள்ளது. காவல்துறை உயர் அலுவலர்கள் அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் பாதுகாப்புத் திட்டத்தைக் காட்டச் சொல்லிக் கேட்டிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. காவல் ஆய்வாளர் திரு.ஹரிஹரன் (எ.த.சா.213), தலைமைக் காவலர் திரு.ராஜா (எ.த.சா.203) மற்றும் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) அவர்களுடைய பொறுப்பற்ற, அசட்டையான மற்றும் சர்வாதிகாரப் போக்கினால், விலைமதிப்பற்ற உயிர்களை இழக்கச் செய்து விட்டதால் அவர்கள் மீது உயரலுவலர்கள் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

மேற்சொன்ன திரு.ராஜா சீருடையில் இல்லை. அவர் காவல் ஆய்வாளர் திரு.ஹரிஹரன் (எ.த.சா.213) கூறியவாறு Eicher வேன் மீது ஏறித் துப்பாக்கியால் சுட்டுள்ளார். ஒரு முறைதான் சுட்டதாக அவர் கூறினாலும், காணொலிக் காட்சிகளின்படி அவர் இரண்டு முறை சுட்டிருக்கிறார். SLR-லிருந்து வெளியே சென்ற தோட்டாக்கள் யாரையாவது தாக்கியிருக்கலாம் அல்லது தாக்காமலும் இருந்திருக்கலாம். ஆனால் வீரத்தைக் காட்டுவதற்காகக் கண்ணை மூடிக்கொண்டு துப்பாக்கியால் சுடுவது கண்டிக்கத்தக்கது. அவரால் சுடப்பட்ட துப்பாக்கித் தோட்டா யாரையாவது தாக்கியதா இல்லையா என்பதை இந்தச் சூழ்நிலையில் உறுதி செய்ய இயலவில்லை. மொத்த சம்பவமும் முடிவுக்கு வந்த பின்னரும், ராஜா



PROTESTER DAMAGING GOVERNMENT VEHICLES

துப்பாக்கியால் சுட்ட காட்சிகள் அப்பட்டமாக ஊடகங்களில் காட்டப்பட்டுப் பரவியது. இது செய்தித்தாள்களில் தலையங்கங்களாக இடம்பெற்றதுடன் சட்டமன்றப் பேரவையிலும் விவாதப் பொருளானது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதன்மை வளைவிற்கு வெளியே 3 உயிரிழப்புகளுடன், சில போராட்டக்காரர்கள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் அடைந்துள்ளார்கள். அவர்கள் ம.சா.3 திரு.சுப்புராஜ், ம.சா.6 திரு.முத்துராஜ், ம.சா.14 திரு.ஆனந்த கண்ணன், ம.சா.17 திரு.ராஜா, ம.சா.18 திரு.வெலிங்டன், ம.சா.25 திரு.சுகுமார், ம.சா.76 திரு.ராஜசேகர் மற்றும் ம.சா.85 பாதிரியார் திரு.லியோ ஜெயசீலன்.

அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை மற்றும் நிவாரணமாக இழப்பீட்டுத் தொகை ஏதுவும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்றால் அது சம்பந்தமாக இந்த அறிக்கையில் தொடர்புடைய இடத்தில் பரிசீலிக்கப்படும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வெளியே காவல் துறையினர் நடத்திய தடியடியில் போராட்டக்காரர்கள் காயமடைந்துள்ளார்கள். அவர்கள் ம.சா.9 திரு.மரிய சிலுவை எஸ்தர், ம.சா.21 திரு.ஜஸ்டின் செல்வ மித்திஸ், ம.சா.34 திரு.பூல்பாண்டி, ம.சா.35 இசக்கிமுத்து ஹரிஷ், ம.சா.43 செல்வி.டிஷானி, ம.சா.56 திரு.மாணிக்கம், ம.சா.58 கென்னடி, ம.சா.63 திரு.பெலிக்ஸ் மற்றும் ம.சா.65 யோகேஷ்ராம்.

<u>**செல்வசேகர் – மரணம்:**</u>

மேலே சொல்லப்பட்ட 3 போராட்டக்காரர்கள் மணிராஜன், கிளாஸ்டன் மற்றும் ஜெயராமன், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளைவில் தேசிய



COLLECTOR OFFICE DAMAGE

நெடுஞ்சாலையில் துப்பாக்கிச்சூடு காயங்களால் இறந்து விட்டார்கள். மற்றொரு நபரான செல்வசேகர் கூட்ட நெரிசலில் சிக்கி மிதிபட்டுக் காயங்கள் ஏற்பட்டு அந்தக் காயங்கள் காரணமாக மறுநாள் இறந்து விட்டார். அவருக்குத் துப்பாக்கிச்சூடு காயங்கள் இல்லையெனினும், மிதிபட்டதில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக இறந்து விட்டார் என்பது மேலே பரிசோதனை செய்த ஜிப்மர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மருத்துவர் அம்பிகா பிரசாத் பத்ராவின் சாட்சியத்திலிருந்து தெரிகிறது. இறந்து போனவரின் அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர் பெயர் செல்வசேகர் வயது 42. அவருக்கு பிரேதப் பரிசோதனைக்கு முந்தைய காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

1. A sutured wound of length 3cm seen over top of head 16cm above glabella. On removal, it was scab deep lacerated wound and margins found contused. On dissection of scab, red colour contusion over an area of 8cmx7cm seen over fronto-parietal region in top of head.

2. On removal of plaster of paris slab over right lower limb small hospital dressing seen over front of upper part of right leg. Red colours graze abrasion of size 1 to 2cmx1.5cm seen over front of uppor part of right tibia with surrounding contusion. Red colour contusion over an area of 21cmx10cm over muscle plane of inner aspect of middle of right left.



INSIDE COLLECTORATE

3. Red colour abraded contusion of size 2cmx1cm seen over front of upper part of left leg, 2cm below left knee. On dissection red colour contusion over an area of 13cmx7cm seen over muscle plane of upper part of left leg and 8cmx6cm seen over muscle plane of lower part of front of left leg.

பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவர், பிரேத விசாரணைக்கு முந்தைய அனைத்து காயங்களும், அடி முதலானவற்றால் ஏற்பட்ட அதிர்ச்சியும், நெருக்கித் தள்ளியதால் ஏற்பட்ட காயங்களும், கூர்மையான மற்றும் கரடுமுரடான பொருட்களினால் ஏற்பட்ட காயங்களையும் ஒத்திருக்கின்றன என்று தெரிவித்துள்ளார். இறந்து போனவர் மார்பு, தலை மற்றும் கை கால்கள் ஆகிய இடங்களில் பலதரப்பட்ட உள்காயங்கள் ஏற்பட்டதன் காரணமாக இறந்திருக்கலாம். இடப்பக்க விலாவில் முதலாவது எலும்பில் முறிவு ஏற்பட்டு, அதற்கு இணையாக இடது பக்க நுரையீரல் மடல் பகுதி சேதமாகி உள்ளது இங்கு குறிப்பிட்டுக்காட்ட வேண்டியுள்ளது. இந்த விவரங்களை, முதலாவதாக பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவர் வழங்கிய அறிக்கைகளுடன் சேர்த்துப் பார்க்க வேண்டும். முதலாவது பிரேதப் பரிசோதனைச் சான்றிதழில் மார்பின் இடப்பக்கத்தில் ஏற்பட்ட மழுங்கிய காயங்களின் காரணமாகவும், அதன் தொடர்ச்சியாக அதிர்ச்சியும், ரத்தப்போக்கும் ஏற்பட்டதன் காரணமாகவும் இறப்பு ஏற்பட்டிருக்கும் என்று கருத்து கூறப்பட்டுள்ளது. மார்பில் காணப்பட்ட காயங்கள் மீண்டும் மீண்டும் கனமான மற்றும் மழுங்கிய பொருளால் அழுத்தியதாலும்



ஏற்பட்டிருக்கும் காயங்கள் என்று மேலும் கருத்து கூறப்பட்டுள்ளது. மார்பில் ஏற்பட்ட காயங்கள் மூடு காலணி அணிந்த கால்களால் மிதித்ததாலும் துப்பாக்கியின் அடிப்பாகத்தால் (butt portion) கடுமையாகத் தாக்கியதாலும் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று முதலாவது பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவரின் அறிக்கை மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளது. தலைக்காயங்களைப் பொறுத்தமட்டில், அந்தக் காயங்கள் தலையில் லத்தியால் பலமாக அடித்ததால் ஏற்பட்டிருக்கும் என்று முதலாவது பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவரிடமிருந்து வெளிக்கொணரப்பட்டுள்ளது. காலில் ஏற்பட்ட கன்றிய காயமும், எலும்பு முறிவும் துப்பாக்கியின் அடிப்பகுதியால் அடித்ததால் ஏற்பட்டிருக்கும் என்றும் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இரண்டு பிரேதப்பரிசோதனை மருத்துவர்களும் நேர்மையாகக் கருத்து கூறியுள்ளனர். அவர்கள் இறந்துபோன செல்வசேகருக்கு ஏற்பட்ட காயங்கள் தலையில் பலமாக அடித்ததாலும், மார்பில் துப்பாக்கியின் (butt portion) அடிப்பகுதியாலும், லத்தியால் தாக்கியதாலும் மார்பில் மூடு காலணி (பூட்ஸ்) அணிந்த கால்களால் பலமாக மிதித்ததாலும் ஏற்பட்டிருக்கும் என்று கூறியுள்ளார்கள். ம.சா.41 ஜெயக்குமார் மற்றும் ம.சா.97 திரு.தேவபிரியன் ஆகியோரது சாட்சியங்கள் முதன்மையாகப் பரிசீலிக்கப்பட வேண்டியவையாகும். ம.சா.41 ஜெயக்குமார், மரணமடைந்த செல்வசேகரின் உறவினர். அவர் சாட்சியத்தில் மரணமடைந்த செல்வசேகரின் சகோதரி சாந்தா, அவரைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, செல்வசேகர் சாந்தாவிடம் பேசியதாகவும்,



அவரைக் காவலர்கள் சுற்றி நின்று கொண்டு தாக்கியதாகவும், அதனால் அவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டு ரத்தம் கசிவதாகவும், காவல் துறையினர் அவரை மார்பில் மீண்டும் மீண்டும் மிதித்ததாகவும், அவர் நீண்ட காலத்திற்கு உயிருடன் இருக்கமாட்டார் என்றும், அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அடுத்து முதன்மைச் சாலையில் உள்ள செந்தில்முருகன் பழக்கடைக்கு அருகில் கிடப்பதாகவும் தன்னைக் காப்பாற்றுமாறு கேட்டதாகவும் அவர் கூறியுள்ளார். பின்னர் சாட்சியிடம் மறுபடியும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட சாந்தா, செல்வசேகர் மோசமாகக் காயம் அடைந்துள்ளதாகவும், தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தகவல் தெரிவித்துள்ளார்.

ம.சா.97 திரு.தேவபிரியன், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி போல் தோன்றுகிறார். அவர் காவல்துறையினர் தடியடி நடத்தியதையும், போராட்டக்காரர்கள் வெவ்வேறு திசைகளில் ஓடியதையும் பார்த்தார். அவர் மேற்குப் பக்கம் ஓடினார். அப்போது கந்தவிலாஸ் பழக்கடை அருகே 10-க்கு மேற்பட்ட காவலர்கள் ஒரு போராட்டக்காரரைச் சுற்றி வளைத்து, லத்தியால் அவரைக் கடுமையாகத் தாக்கி, மார்பில் பலமாக மிதித்ததைக் கண்டார். சாட்சி அவரை நோக்கி ஓடினார். காவல் துறையினரால் தாக்கப்பட்ட அந்த நபர் வலி தாங்க முடியாமல் கத்தினார்.



அவர் தன்னை விட்டுவிடும்படி, தனது கைகளால் கும்பிட்டு மன்றாடி வேண்டினார். இதற்கிடையில் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது. காவல் துறையினர் எவ்வித எச்சரிக்கை செய்யாமலும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடிக்காமலும் துப்பாக்கிச் சூட்டை ஆரம்பித்தார்கள். பின்னர், அப்போது காயத்துடன் இருந்த, இறந்துபோன செல்வசேகர் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் ஒன்றில் கொண்டு செல்லப்பட்டார்.

ம.சா.41 திரு.ஜெயக்குமாரின் சாட்சியம் மிக முக்கியமானது. இறந்தவரின் சொந்த சகோதரி சாந்தாவிடம் ஆவணமாக வாக்குமூலம் அளித்துள்ளார். அவர் தன்னைக் காவல் துறையினர் தாக்கிய மாமைச் செயலையும், தான் உதவிக்கு யாரும் இல்லாமல் இருந்ததையும், உதவிக்குக் கூக்குரலிட்டுத் தான் அழுததையும் அதில் சொல்லியுள்ளார். இந்தச் சூழ்நிலைகளில் இறந்துபோன செல்வசேகர், தனது சகோதரி சாந்தாவிடம் சொன்னதை இப்பொழுது ம.சா.41 திரு.ஜெயக்குமார் விவரித்தது ஒரு மரண வாக்குமூலம் ஆகுமா அல்லது மரண வாக்குமூலத்திற்கு இணையாகச் சட்ட நுணுக்கங்கள் சம்பந்தமானதாக விவாதிக்க வேண்டுமா என்பது குறித்து அலட்சியம் செய்ய முடியாது. மேலும் முக்கியமான பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இறந்துபோன செல்வசேகர் சம்பந்தமான விபத்துப் பதிவேட்டின் நகல் (A.R.Copy) ம.சா.ஆ.1136 ஆகும். அதில் மருத்துவர் "alleged h/o of assault by approximately 40 unknown persons by wooden log around 12.45 pm on 22.05.2018" என்று பதிவு செய்துள்ளார். ம.சா.609 மருத்துவர் ஜிவான்ஸ் மாறன் குறிப்பு பற்றிக்



குறிப்பிட வேண்டியுள்ளது. மருத்துவர்கள் உட்பட எல்லோருக்கும் 22.05.2018 அன்று போராட்டம் நடக்கவிருந்தது தெரியும். போராட்டக்காரர்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டபோது, காவல் துறையினர் தடியடி நடத்தியும், கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வெடித்தும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் உள்ளார்கள். மருத்துவர் விபத்துப் பதிவேட்டு நகலில் அவர் காயமடைந்தவர் / நோயாளி / அழைத்து வந்தவர், இவர்களிடமிருந்து விவரங்களைச் சேகரித்துத் தேவையான குறிப்பு எழுத வேண்டும் என்பதில் ஐயப்பாடு எதுவும் இல்லை. அப்போது காயமடைந்த செல்வசேகர் உள்பட யாரொருவரும் மருத்துவரிடம் அவ்வாறான தகவல் எதுவும் தரவில்லை. அவர்கள் கலங்கிய மனநிலையில் இருந்தார்கள். காயமடைந்த செல்வசேகரின் உயிரைக் காப்பாற்றுவதிலேயே மிகவும் அக்கறை கொண்டனர். மருத்துவர் சரியாக எழுதியுள்ளாரா என்று அவர்கள் சரிபார்க்கவில்லை. மருத்துவருக்குத்தான் சட்டப்படியும், தர்மப்படியும் செயல்பட வேண்டிய கடமை உள்ளது. விபத்துப் பதிவேட்டில், காவல்துறையின் நடவடிக்கையால் குறிப்பாக அவருக்குக் காயங்கள் ஏற்பட்டிருக்கிறது என்று மருத்துவருக்கு நன்றாகத் தெரியும். அவ்வாறிருக்கும்போது இறந்தவர் 40 அடையாளம் தெரியாத நபர்களால் மரக்கட்டையால் தாக்கப்பட்டதாகப் பதிவு செய்தது உண்மை நிலவரங்களை மறைக்கும் விதமாக உள்ளது.



INSIDE COLLECTORATE

இறந்துபோன செல்வசேகர் வழக்கில் இப்படி இருக்கும் நிலையில், காவல் துறையின் துப்பாக்கிச்சூட்டில் காயங்கள் அடைந்தவர்கள் வழக்கில், மருத்துவர் அதே தந்திரத்தைக் கடைப்பிடித்து, ஒரே மாதிரிப் பதிவு செய்து அடையாளம் தெரியாத நபர்களால் பிற்பகல் 1.15 மணியளவில் (துப்பாக்கிச்சூட்டு காயம்) எப்.சி.ஐ. கிரவுண்டு அருகில் காவல் துறையின் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ம.சா.1 சேர்மராஜ் சம்பந்தமான ம.சா.ஆ.1 ஆகிய விபத்துப் பதிவேட்டு நகலில் சொல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. மற்றொரு உதாரணமாக, ம.சா.9 மரிய சிலுவை எஸ்தருக்கு வழங்கப்பட்ட ம.சா.ஆ.17 விபத்துப் பதிவேட்டு நகலிலும் "Alleged h/o of assault by approximately 40 unknown persons by using stones and wooden log around 11.00 pm near Collector office" என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. கொந்தளிப்பான சூழ்நிலை உள்ளபோது கூட அவரைச்சுற்றி என்ன நடக்கிறது என்று கூட அறியாமல், மருத்துவர், காவல் துறையினருக்கு உடன்பட்டு அதேபோல் பதிவு செய்தது பொய்யானதாக இருக்கிறது. நிச்சயமாக மருத்துவர் விளக்கம் கொடுக்கக் கடமைப்பட்டவர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரே, தேசிய நெடுஞ்சாலையில், ஒரு பழக்கடை அருகே நடந்த சம்பவத்தில், காவல் துறையினர் கடுமையாகத் தாக்கியதில், இறந்துபோன செல்வசேகர் அதிகக் காயங்கள் அடைந்தார் என்பதற்குச் சாத்தியமுள்ளது. ம.சா.285 அப்துல் காதருக்கு, தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்தமான தனியார் ஆம்புலன்ஸின் அவாது சக



DISTRICT INDUSTRIAL CENTRAL
VEHICLE BURN

ஓட்டுநரான ம.சா.294 திரு.ஆசிக் அலியால் தகவல் தெரிவிக்கப்பட்டு, காயமடைந்த செல்வசேகர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ம.சா.285 முகம்மது அப்துல் காதர் அவரது சாட்சியத்தில், ஆசிக் அலி (ம.சா.294) காயமடைந்தவரைத் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அவரது ஆம்புலன்ஸில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள சம்பவ இடத்திலிருந்து கொண்டு சென்றதாகவும், காயமடைந்தவர் மறுநாள் காயங்களின் காரணமாக இறந்துவிட்டதாகவும் கூறியதாகத் தெரிவித்துள்ளார்.

சாட்சியத்தில் உள்ள ஆதாரங்கள், மருத்துவ ஆதாரம் உள்ளிட்ட வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் ஆகியவற்றின் ஒட்டுமொத்த சாராம்சம், செல்வசேகர் போராட்டத்தில் கலந்து கொண்டார் என்பதும், அவர் இரக்கமின்றிக் கொடூரமாகக் காவல் துறையினரால் தாக்கப்பட்டார் என்பதும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வெளியே உள்ள தேசிய நெடுஞ்சாலையில் தாக்கப்பட்டதில், அவருக்குக் காயங்கள் ஏற்பட்டன என்பதையும் காட்டுகிறது. செல்வசேகர் நெரிசலில், கால்களால் மிதிபட்டதால் அவருக்குக் காயங்கள் ஏற்பட்டதாகக் காவல் துறையினர் கூறும் கூற்று தொடக்கத்திலேயே நிராகரிக்கத்தக்கது.

**<u>கூட்டம் குறைதல் – போராட்டக்காரர்கள் பின்வாங்கிய பின்பும் ஏன் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது?</u>**

உண்மையில் விதிவசத்தால் மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நடந்த இரண்டு சம்பவங்களில் காவல் துறையின் துப்பாக்கிச்சூட்டினால் 8 பேர் உயிரிழந்துள்ளனர். துயரம் இத்துடன்




DISTRICT INDUSTRIAL CENTRE

முடியவில்லை. காவல் ஆய்வாளர் திரு.மீனாட்சிநாதன் (எ.த.சா.208) எப்.சி.ஐ. ரவுண்டானா அருகே நடைபெற்ற சம்பவம் குறித்து சாட்சியம் கூறியுள்ளார். 22.05.2018 அன்று பிற்பகல் 12.55 மணிக்கு சுமார் 3000 போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து எப்.சி.ஐ.ரவுண்டானா நோக்கிச் சென்றார். போராட்டக்காரர்கள் கூட்டம் காவல் ஆய்வாளர் திரு.மீனாட்சிநாதனையும் இதர காவல் துறையினரையும் தாக்க ஆரம்பித்தார்கள். அந்தப் போராட்டக்காரர்கள் பைபாஸ் பாலத்திலிருந்து கற்களை எறிவதில் ஈடுபட்டார்கள், அதனால் காவல் ஆய்வாளர் திரு.மீனாட்சிநாதனுக்கு வீக்கமும், இதர காவல் துறையினருக்குக் காயங்களும் ஏற்பட்டன. அவர் பொது அறிவிப்பு அமைப்பின் (Public addressing system) மூலம் கூட்டம் கூடுவது சட்ட விரோதமானது என்றும், அவர்கள் உடனடியாக கலைந்து செல்ல வேண்டுமென்றும் அவர்களை 3 முறை எச்சரித்தார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காவல் துறையினர் போராட்டக்காரர்கள் மீது தடியடி நடத்தி 4 காவலர்களுக்கு காயங்கள் ஏற்பட்டன என்றும், அதனால் 4 காவலர்களாவது கொல்லப்பட வேண்டுமென்று போராட்டக்காரர்கள் பேசிக்கொண்டதைக் கேட்டதாகவும் அவர் கூறியுள்ளார். சிறப்பு நிருவாக நடுவர் அங்கு இல்லை, அதனால் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடிப்பதற்கு அவரே உத்தரவு பிறப்பித்தார். அதன்படி கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வடக்குப் பக்கத்திலும், தெற்குப் பக்கத்திலும் வெடித்தன. அப்பொழுது நேரம் பிற்பகல் 1.00 மணி இருக்கும். 100 முதல் 200 நபர்கள் கொண்ட போராட்டக்காரர்களின் கூட்டம்


BLOCK G

எப்.சி.ஐ.குடோனுக்குள் நுழைந்தது அவர்கள் காவல் துறையினர் மீது கற்களை வீசினார்கள். தங்களையும், பொதுச் சொத்தையும் பாதுகாப்பதற்காகப் போராட்டக்காரர்களை எச்சரித்த பிறகு அவரது அறிவுரையின்பேரில் காவலர் திரு.கண்ணன் (எ.த.சா.21) 0.410 Musket-லிருந்து சுட்டார். யாருக்கும் காயம் ஏற்பட்டதா, இல்லையா என்று அவருக்குத் தெரியாது.10 நிமிடங்களில் அதாவது பிற்பகல் 1.10 மணியளவில் தூத்துக்குடிக் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) மற்றும் திருநெல்வேலிக் காவல் கண்காணிப்பாளர் திரு.அருண்சக்தி குமார் (எ.த.சா.240) அதிரடிப்படையுடன் அங்கு வந்தார்கள்.

திரு.மீனாட்சிநாதனின் கூற்றினை எப்.சி.ஐ. ரவுண்டானா மற்றும் 3வது மைல் ஆகிய பகுதிகளுக்குப் பொறுப்பான சிறப்பு நிருவாக நடுவர் திரு.கோபாலின் (எ.த.சா.185) சாட்சியத்தின் பின்புலத்துடன் பரிசீலிக்க வேண்டும். அவர் தனது சாட்சியத்தில், தலைமையிடத்து வட்டாட்சியர் திருமதி.சிவகாமசுந்தரி (எ.த.சா.181) அலைபேசி மூலம் அன்று பிற்பகல் 1.30 மணிக்கு அழைத்து, அவரது பொறுப்பில் உள்ள பகுதியில், எந்த இடத்திலாவது பிரச்சனை ஏதாவது நடைபெற்றதா என்று உறுதி செய்வதற்காகக் கேட்டார். அதற்கு அவர் இல்லையென்று பதில் சொன்னார். அவர் தனது சாட்சியத்தில் 3வது மைலில் அவர் இருக்கும் வரை எப்.சி.ஐ.குடோன் மற்றும் ரவுண்டானா பகுதி ஆகிய இடங்களில் பிரச்சனை எதுவும் இல்லையென்றும், பிரச்சனை ஏதாவது



HIGHWAY DEPARTMENT

இருக்கிறதா என்று அலைபேசி மூலம் யாரும் அவரிடம் தகவல் தெரிவிக்கவில்லையென்றும் கூறினார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஏற்பட்ட சம்பவங்களை அடுத்து, உடனடியாக ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) கலைந்து செல்லும் கூட்டத்தின் நடவடிக்கையை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டிருந்தார். அங்கு ஒருவர் பின் ஒருவராக விருதுநகர் காவல் கண்காணிப்பாளர் திரு.ராஜராஜன் (எ.த.சா.231), கன்னியாகுமரி காவல் கண்காணிப்பாளர் திரு.ஸ்ரீநாதா (எ.த.சா.228), மதுரைக் காவல் கண்காணிப்பாளர் திரு.மணிவண்ணன் (எ.த.சா.239), மதுரை டி.ஐ.ஜி. திரு.பிரதீப்குமார் (எ.த.சா.241) ஆகியோர் வந்தார்கள். திரு.ராஜராஜனையும் (எ.த.சா.231), டி.ஐ.ஜி. திரு.பிரதீப்குமாரையும் (எ.த.சா.241) தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் உள்ள சூழ்நிலையை கவனிக்குமாறு தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு ஐ.ஜி. அனுப்பிவைத்தார். கன்னியாகுமரி காவல் கண்காணிப்பாளர் திரு.ஸ்ரீநாதா (எ.த.சா.228)-க்கு பைபாஸ் பாலம் அருகே உள்ள ஒரு வீட்டில் தஞ்சம் புகுந்திருந்த காவல் ஆளினர்களை மீட்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மதுரை காவல் கண்காணிப்பாளர் திரு.மணிவண்ணன் (எ.த.சா.239) தூத்துக்குடி தென்பாக காவல் நிலையத்திற்கு புறப்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். ஐ.ஜி. பிற்பகல் 1.30 மணியளவில் மாவட்ட காவல் அலுவலகத்திற்கு திரும்பி வந்தார். அவர் துப்பாக்கிச்சூடு சம்பவங்களால் போராட்டக்காரர்கள் கோபமடைந்திருக்கலாம் என்று உணர்ந்து நகரின் எல்லா பகுதிகளிலும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு



உத்தரவிட்டார். ஐ.ஜி.யின் அறிவுரைகளின்படி மேற்சொன்ன காவல்துறையில் உயர்நிலையில் உள்ள அதிகாரிகள் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றார்கள்.


மதுரை டி.ஐ.ஜி. திரு.பிரதீப் குமார் (எ.த.சா.241) ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) ஒரு யுக்தியை கூறினார்.காவல்துறையினர் பாடத்தூர் வழியாக சுற்றுப்பாதையில் சென்று பைபாஸ் பாலத்தின் இடது பக்கத்திற்குச் சென்று அங்கு கூட்டம் எதுவும் இருப்பின் அதை கலைக்குமாறு அதில் சொல்லப்பட்டுள்ளது. அது ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) ஆல் ஏற்கப்பட்டு அப்போதைய திருநெல்வேலி காவல் துணை ஆணையர் திரு.G.சுகுணாசிங் (எ.த.சா.234) மற்றும் சாட்சி திரு.பிரதீப்குமார் (எ.த.சா.241) ஆகியோர் அந்த நோக்கத்திற்காக அனுப்பப்பட்டார்கள். அவர்கள் இருவரும் அவரவர் அதிரடிப்படையுடன் பைபாஸ் பாலத்தின் தென்பகுதியை அடைந்தார்கள். அவர்கள் பைபாஸ் பாலத்தில் ஏறும்போது அவர்களுடைய வாகனங்களை பாதுகாப்பிற்காக இரு பக்கங்களிலும் அதிரடிப்படையினர் பாதுகாப்புடன் அவர்கள் பயணம் செய்த வாகனங்கள் வரிசையாக மொத்தம் 4 எண்ணிக்கையில் செல்லும் விதத்தில் ஏற்பாடு செய்தார்கள். அந்த வாகனங்கள் கூட்டத்தை நோக்கி முன்னேறும்போது அந்த காவல் வாகனங்களை பார்த்ததும் கூட்டம் கலைந்துவிட்டது. அப்பொழுது பாலத்திற்கு சிறிது கீழே இருந்த காவல் ஆளினர்கள் பாலத்தின் குறுக்கே கடந்துதான் நகரை அடைய முடியும். ஒரு தீயணைப்பு வாகனம் எரிவதை சாட்சி பார்த்தார். அந்த வாகனம் ஸ்டெர்லைட்


LOCK H 2

ஆலைக்கு பாத்தியப்பட்ட தனியார் தீயணைப்பு வாகனம் என்பது அவருக்கு தெரிய வந்தது. சாட்சி திரு.பிரதீப் குமார் (எ.த.சா.241) அவரது குழுவினருடன் திரு.வி.க.நகருக்குச் சென்று அங்கு ஒரு வீட்டில் காலை முதல் தஞ்சமடைந்திருந்த தமிழ்நாடு சிறப்பு காவல் மற்றும் ஆயுதப்படையைச் சேர்ந்த 25 முதல் 30 காவல் ஆளினர்களை மீட்டார்கள்.

கன்னியாகுமரி காவல் கண்காணிப்பாளர் திரு.ஸ்ரீநாதா, இ.கா.ப (எ.த.சா.228) பைபாஸ் பாலத்தை அடைந்து அங்கும் இங்குமாக கூடியிருந்த போராட்டக்காரர்களை கலைத்தார். அவர் தூத்துக்குடி நகரை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தபோது பொதுமக்களையும், வழக்கறிஞர்களையும் நீதிமன்ற வளாகத்தின் அருகே பார்த்தார். அவர் விசாரித்ததில் பிரச்சனை எதுவும் இல்லை என்று தெரிய வந்தது. அவர் அவர்களை நீதிமன்ற வளாகத்திற்குள் செல்லுமாறு அறிவுறுத்திவிட்டு அதன் பின்னர் தென்பாக காவல் நிலையத்திற்கு சென்றார். அவர் போகும் வழியில் பெரிய கூட்டம் எதுவுமில்லை. ஆனால் ஒருசில பொதுமக்கள் குறுக்கு தெருக்களில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார். ஆனால் ஒரு சற்று பெரிய கூட்டம் தென்பாக காவல் நிலையத்திற்கு அருகே குறுக்கு சந்தில் பார்த்தார். அந்த சமயம் திரு.G.கருணா சிங் (எ.த.சா.234) ஏற்கனவே அங்கு இருந்தார்.

மற்றொரு காவல்துறை எஸ்.பி. நிலையில் உள்ள அதிகாரியான காவல் கண்காணிப்பாளர் திரு.மணிவண்ணன் (எ.த.சா.239) பிற்பகல் 2.00 மணிக்கு


N
ANNA NAGAR MAINROAD
ANNA NAGAR 6th STREET
church
majid
DO 42B
DO 42C
DO 42D
DO 41A
DO 45C
DO 15
DO 14
DO 13
DO 12A
DO 11
DO 10
10.8
6.0
9.0
4.8
7.0
3.4
10.4
10.2
10.6
11.0
12.0
12.0
12.4
12.0
12.0
10.6
10.8
9.8
10.4
10.2
10.4
10.2
10.6
10.8
12.0
12.2
12.2
12.2
12.2
11.0
pole
tree

தூத்துக்குடி வந்தடைந்தார். அவர் நேரே வி.வி.டி.சிக்னலுக்குச் சென்றார். அவர் ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) அவர்களைச் சந்தித்தார். ஐ.ஜி. அவரிடம் போராட்டக்காரர்கள் காவல்துறையினருக்கும், நோயாளிகளுக்கும் இடையூறு செய்வதாகவும் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறும் அவருக்கு உத்தரவிட்டார். சாட்சியிடம் ஐ.ஜி. ஏற்கனவே விருதுநகர் காவல் கண்காணிப்பாளர் திரு.ராஜராஜன் (எ.த.சா.231) அவரது ஆட்களுடன் மருத்துவமனையில் இருப்பதாகக் கூறினார். சாட்சி திரு.மணிவண்ணன் (எ.த.சா.239) மருத்துவமனையில் பாதுகாப்பு பணியில் இருந்தபோது மக்கள் மருத்துவமனைக்குள் நுழைய முயற்சித்தார்கள்.ஆனால் காவல்துறையினர் அவர்களை விரட்டியடித்தார்கள். சில நபர்கள் கல் எறிதலில் ஈடுபட்டார்கள். அவர்களும் விரட்டியடிக்கப்பட்டார்கள். குறிப்பிட்டு சொல்லும்படி அசம்பாவிதம் எதுவும் இல்லை. டி.ஐ.ஜி. திரு.கபில்குமார் சி.சரட்கர், இ.கா.ப. (எ.த.சா.246)-ன் அறிவுரைகளின்படி அவர் திரேஸ்புரத்திற்குச் சென்றார்.

குறிப்பிட்டு கூற வேண்டியது ஐ.ஜி. திரு.சைலேஷ்குமார் யாதவ், இ.கா.ப. (எ.த.சா.247) வி.வி.டி.சிக்னலில் பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாகவே வந்துவிட்டார். அவர் மதுரை எஸ்.பி. திரு.மணிவண்ணன் (எ.த.சா.239)-உடன் பேசிக்கொண்டிருந்தார். வி.வி.டி.சிக்னலுக்கு வரும் வழியில் அவருக்கு கஷ்டம் எதுவும் இல்லை. டி.ஐ.ஜி. திரு.பிரதீப்குமார் (எ.த.சா.241) மற்றும் திரு.G.சுகுணா சிங், இ.கா.ப. (எ.த.சா.234) ஆகியோர் ஐ.ஜி.யின் அறிவுரையின்படி அவர்களுக்கு



DECEASED KALIYAPPAN IN GH

ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு சென்றார்கள் போகும் வழியில் சில இடையூறுகளை அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. அவர்களை கலைப்பதற்கான உத்திகளை திறமையாக கையாண்டார்கள். ஐ.ஜி.யால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றடைந்தார்கள். இவ்வாறு உயர் காவல் அதிகாரிகளான ஐ.ஜி., மதுரை டி.ஐ.ஜி. மற்றும் கன்னியாகுமரி காவல் கண்காணிப்பாளர் எந்த தடைகளும் இல்லாமல் அவர்களது இடங்களுக்கு முறையே சென்றடைந்தார்கள். வன்முறை, தீ வைப்பு அல்லது உயிருக்கோ, கை கால்களுக்கோ அல்லது பொதுமக்களின் சொத்துக்கோ ஆபத்து ஏற்படும்; பெரிய அளவில் குற்ற செயல்கள் எதுவும் காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) சம்பவ இடத்திற்கு வரும் வரையில் காவல்துறையினர் மீண்டும் மீண்டும் துப்பாக்கிச்சூடு நடத்தும் அளவிற்கு எதுவும் நிகழவில்லை.தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குச் செல்லும் பாதையில் பொதுமக்கள் அங்கும் இங்குமாக கூடியிருந்தார்கள் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. சென்ற பாதை முழுவதிலும் குறிப்பிடத்தக்க சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு தேவையோ அல்லது சந்தர்ப்பமோ கிடையாது.மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள்ளும், வெளியிலும் துப்பாக்கிச்சூட்டில் பலர் உயிர் இழந்த நிலையில் மக்களுக்கு கோபம் வந்தது மட்டுமே காவல்துறை ஆயுதங்களை எடுக்க தூண்டப்பட்ட சூழ்நிலையாக கருத முடியாது. அவ்வாறு கூறுவது பொருத்தமானதாக இருக்காது. தலைமைக்காவலர் திரு.ராஜாவின் (எ.த.சா.203) கூற்றுப்படி நியாயமான காரணம் எதுவுமின்றி கண்மூடித்தனமாக போராட்டக்காரர்கள் மீது சுட்டனர். காவல் ஆளினர்களுக்கு



POLICE VEHICLE DAMAGE

பிற்பகல் 1.30 மணியளவில் உணவு பொட்டலங்களை விநியோகம் செய்துவிட்டு, மில்லர்புரம் ஆயுதக்கிடங்கு அலுவலகம் வழியாக எப்.சி.ஐ.ரவுண்டானா, 3வது மைல் பாலம், அரசு பாலிடெக்னிக், ஆசிரியர் காலனி சந்திப்பு ஆகிய இடங்கள் வழியாக அவர் வந்தபோது தகாத செயல் எதையும் பார்க்கவில்லை. இது காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு தேவை எழும் அளவிற்கு எவ்வித நிகழ்வும் நடைபெறவில்லை என்பதற்கான சான்றாக உள்ளது என்பதும் தெரிகிறது.

ம.சா.285 முகம்மது அப்துல் காதரின் சாட்சியம் பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு மனித நேயமிக்க தனியார் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் அந்த சமயம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முதல் தூத்துக்குடி அரசு மருத்துவமனை வரையிலான பாதை முழுவதிலும் நிலவிய நிலைமைகள் பற்றி கூறியுள்ளார்.அவர் இறந்து போனவரையும் காயமடைந்த வரையும் த.மு.மு.க அமைப்பிற்கு சொந்தமான தனியார் ஆம்புலன்சில் கொண்டு சென்றிருக்கிறார்.அவர் சாட்சியத்தில் 3-வது மைல் பாலத்தில் ஏறும் இடத்திலும் இறங்கும் இடத்திலும் மக்கள் கூட்டம் இல்லை என்றும், சற்று தூரம் தள்ளி சுமார் 50 நபர்கள் அவர்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் கூறியுள்ளார். காவல் ஆளினர் இருந்தார்கள். அவர் எந்த வன்முறை நிகழ்ச்சியையும் பார்க்கவில்லை. ம.சா.422 திரு.செந்தில்குமார், காயம்பட்டவர்களை நல்லதம்பி மருத்துவமனைக்கு சொந்தமான ஒரு தனியார் ஆம்புலன்சில் 4 முறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். போராட்டக்காரர்கள் வன்முறை எதுவும் செய்ததாக அவர்



ANNA NAGAR

தெரிவிக்கவில்லை.இந்த இரண்டு தனியார் சாட்சிகளின் சாட்சியங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தூத்துக்குடி அரசு மருத்துவமனை வரை முழு பாதையையும் பெரிய வன்முறை சம்பவம் எதுவும் நடைபெறாததை உறுதி செய்யும் தன்மை கொண்டவை.மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் உள்ளேயும், வெளியேயும் ஆக இரண்டு துப்பாக்கிச்சூடு சம்பவங்களுக்குப் பிறகு போராட்டக்காரர்களின் ஒரு சிறிய மற்றும் முக்கியத்துவமில்லாத ஆத்திரத்தால் மீண்டும் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக காவல்துறையினர் கூறுவதை நியாயப்படுத்த முடியாது.

**<u>தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் அவர்களின் கோரிக்கையின்பேரில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது - அது தேவையானதா?</u>**

தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) அவர்களின் கோரிக்கையின்பேரில் எப்.சி.ஐ.ரவுண்டானாவில் ஆரம்பித்து மடத்தூர் சந்திப்பை தாண்டி 3-வது மைல் கடைசிவரை துப்பாக்கிச்சூடு நிகழ்த்தப்பட்டது.பொதுமக்களில் இரண்டு நபர்களுக்கு துப்பாக்கிச்சூடு காயங்கள் ஏற்பட்டன. சண்முகம் என்பவருக்கு எப்.சி.ஐ.கிடங்கிலிருந்து 3-வது மைல் பாலம் ஏறும் இடத்திலும் மற்றொருவரான அந்தோணி செல்வராஜ் என்பவருக்கு 3-வது மைலைத் தாண்டி மடத்தூர் சந்திப்பு அருகில் உள்ள இடத்திலும் துப்பாக்கிச்சூடு காயங்கள் உண்டானது.காயம்பட்ட இருவருக்கும் ஏற்பட்ட துப்பாக்கிச்சூடு காயங்கள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் காயங்கள் என்பது நிரூபணமாகியுள்ளது. வேறு யாருடைய சாட்சியமும் தேவையில்லை. காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் சாட்சியத்தில் அவருடைய


பத்திரகாளி அம்மாள்
திருமண மஹால்

அறிவுரையின்பேரில் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) எத்தனை ரவுண்டுகள் துப்பாக்கிச்சூடு செய்தார் என்பதை தெரிவித்துள்ளார்.(notorious) திரு.சுடலைக்கண்ணு(எ.த.சா.207) எப்.சி.ஐ. ரவுண்டானா அருகில் 5 ரவுண்டுகளும், எப்.சி.ஐ.கிடங்கிலிருந்து 3வது மைல் பாலம் ஆரம்பித்து ஏறும் இடத்தில் 4 ரவுண்டுகளும் சுட்டதாக கூறியுள்ளார். மாறாக திரு திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) தனது ஆதாரத்தில் எப்.சி.ஐ. ரவுண்டானா அருகில் 11 ரவுண்டுகளும், எப்.சி.ஐ.கிடங்கிலிருந்து 3வது மைல் பாலம் ஆரம்பித்து ஏறும் இடத்தில் 6 ரவுண்டுகளும் சுட்டதாக தெரியவந்துள்ளது.இவ்வாறாக திரு.சுடலைக்கண்ணு எத்தனை ரவுண்டுகள் சுட்டார் என்பதில் வெளிப்படையான முரண்பாடு தெரிகிறது. காவல் கண்காணிப்பாளர் (எ.த.சா.248)-ன் அறிவுரையின்பேரில் சுட்ட திரு.சுடலைக்கண்ணு காவல் கண்காணிப்பாளர் 17 ரவுண்டுகள் சுடச்சொன்னாரா அல்லது 9 ரவுண்டுகள் சுடச்சொன்னாரா என்பதற்கு விளக்கம் தர கடமைப்பட்டவர் ஆவார்.

காவல் கண்காணிப்பாளர் 2 தடவைகள் தவிர ஒவ்வொரு தடவையும் வானத்தை நோக்கி சுடுமாறும் திரு.சுடலைக்கண்ணுவை கேட்டதாகவும், 2 தடவைகள் தரையை நோக்கி சுடுமாறும் திரு.சுடலைக்கண்ணுவை கேட்டதாகவும் கூறியுள்ளார். வானத்தை நோக்கி சுடுவது காவல் நிலை ஆணைகள் சரத்துக்கள் பிரகாரம் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை குறிப்பாக பார்க்க வேண்டும். சமயோசித புத்தியில்லாமல் துப்பாக்கிச்சூடு நடத்தியதால் இரண்டு உயிர்கள்



பறிபோனது.கட்டுப்பாடு நிர்ணயிக்கப்படுவதற்கு எத்தனை தடவைகள் கடப்பட்டது என்பது முக்கியம். எப்.சி.ஐ. ரவுண்டானாவிலிருந்து பாதை முழுவதும் காவல் கண்காணிப்பாளரின் அறிவுரைகளின்பேரில் குறிப்பாக உயர் காவல் அதிகாரிகள் சாட்சியத்தில் சொன்னபடி எந்த சம்பவமும் நடக்காதபோதும், மேலும் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் இறந்தவரின் உடலையும், காயம்பட்டவரையும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றவர்கள் கூறியதும் துப்பாக்கியின் உபயோகம் தேவையானதாக இல்லாத போதும் துப்பாக்கிச்சூடு செய்யப்பட்டுள்ளது.காவல் கண்காணிப்பாளர் (எ.த.சா.248) மேலும் பல காவல் அதிகாரிகள் அவர் சொல்வதை செய்வதற்கு கட்டுப்பாட்டில் இருக்கும்போது ஒரு காவலரான சுடலைக்கண்ணுவிடம் SLR மற்றும் 30 தோட்டாக்கள் கொடுக்க காவல் கண்காணிப்பாளர் (எ.த.சா.248) என் முடிவெடுத்தார் என்பதற்கு பதில் இல்லை.

தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) மற்றும் திருநெல்வேலி காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் சக்திகுமார (எ.த.சா.240) இரண்டு கோரசம்பவங்களான துப்பாக்கிச்சூடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் நடந்து முடிந்த பிறகு மீண்டும் பிற்பகல் 1.15 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகாமையில் வந்தார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்த இரண்டு காவல் கண்காணிப்பாளர்களும் போராட்டக்காரர்களின் தொடர்பு மொழிப்பிரச்சனையுடன், நடத்தை குறித்தும் நன்கு அறியாத வேறு மாநிலங்களை பூர்வீகமாக கொண்ட டி.ஐ.ஜி. மற்றும் ஐ.ஜி. ஆகியோரை விட்டுவிட்டு என் சென்றார்கள் என்று புரியவில்லை. சம்பவ



இடத்திற்கு அவர்களது காலதாமதமான வருகை இந்த ஆணையத்தை யூகிக்க வைக்கிறது.

தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) ஆர்வத்தோடு நடவடிக்கையில் ஈடுபட்டார். அவருடன் அவருடைய குழுவினரும் வந்தார்கள். குறிப்பாக அவருடைய குழுவைச் சாராத திரு.கடலைக்கண்ணுவும் வந்தார். அவர் வேகமாகவும், அவசரமாகவும், உண்மையல்லாத பிரச்சனையை ஒரு வன்முறை கும்பல் என்று சொல்லி நசுக்க அடக்க முயன்றார். "To be or not to be" என்ற வாசகம் ஷேக்ஸ்பியரின் 'Hamlet' - கதையில் வரும் ஒரு வரியாகும். இதுபோல உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள் 'To use or not to use" என்பதுதான் தூத்துக்குடி காவல்துறையினருக்கு கேள்வி முடிவு செய்ய வேண்டிய அம்சம். இவ்வாறான சூழலில் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ஆயுதங்களை உபயோகிக்காவிட்டால் ஏற்படும் தீங்கு உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ஆயுதக்களை உபயோகித்தால் ஏற்படும் ஆபத்தை விட அதிகமானதாக இருக்குமா என்பதை உற்றுநோக்க வேண்டும். இவ்வழக்கில் உயிருக்கு அதிகமான ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதங்களால் அதிகமான தீங்கு ஏற்படும் என்பது முதன்மையான வாய்ப்பாகும். அதன் உறுதிப்பாடு இந்த அறிக்கையின் முந்தைய பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. தீங்கு உண்டாக்கும் இரண்டு மோசமான காரியங்களில் குறைந்தளவு மோசமான காரியம் எது என்பதை தேர்வு செய்ய விவேகம் தேவை.

வைத்தியக்காரத்தனமான செயலில் கூட இலகுவான வகையே தேர்ந்தெடுக்கப்படும். திரு.கடலைக்கண்ணுவின் (எ.த.சா.207) துப்பாக்கிச்சூட்டில்



UN-UNIFORMED POLICE PERSONNEL WITH RIFLE

இந்த வகை தேர்வு முற்றிலுமாக இல்லை. அவர் தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் சொன்னதால் 17 ரவுண்டுகள் சுட்டதாக கூறியுள்ளார். ஆனால் தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் 9 ரவுண்டுகள்தான் சுடச்சொன்னதாக கூறியுள்ளார். ரவுண்டுகளின் எண்ணிக்கையை ஒரு பக்கம் வைத்துவிட்டு பார்த்தாலும் பொருண்மைப்படி பார்ப்பினும் விரும்பத்தகாத துப்பாக்கிச்சூடு நடைபெற்றுள்ளது. மாவட்ட கண்காணிப்பாளர் (எ.த.சா.246) யாரும் கொல்லப்பட்டனரா அல்லது காயம் அடைந்தனரா என்று அவருக்குத் தெரியாது என்று கூறியுள்ளார். தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளரின் உத்தரவின்பேரில் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) அர்ப்பமான மற்றும் அசட்டுத்துணிவான துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டதால்தான் துப்பாக்கிச்சூட்டு காயங்களினால் இரண்டு நபர்கள் இறந்துவிட்டார்கள் என்பதும் பல நபர்கள் துப்பாக்கிச்சூட்டு காயங்கள் அடைந்துள்ளார்கள் என்பதும் சந்தேகமின்றி தெரிகிறது. அதிகமான தோட்டாக்கள் இருந்திருந்தால் 'hunter par excellence' திரு.சுடலைக்கண்ணுவின் துப்பாக்கிச்சூட்டில் மேலும் பல விலைமதிப்பற்ற உயிர்கள் இழக்க நேரிட்டிருக்கும். நாடுகளுக்கிடையே போர் நடக்கும்போது கூட "Everything is fair in love and war" என்று சொல்லப்படும் வகையில் நியாயப்படுத்தப்படும். போராட்டக்காரர்கள் விலங்குகள் அல்ல. அவர்களிடம் காட்டில் வேட்டையாடுவதுபோல் திரு.சுடலைக்கண்ணு செயல்பட்டிருக்கிறார். திரு.சுடலைக்கண்ணு சத்தியமங்கலம் பயிற்சியில் கலந்து கொண்டிருந்த காரணத்தால் இவ்வாறு சுட வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டிருக்கலாம். இவ்வாறு சீர்கேட்டினை உண்டாக்கி மூர்க்கமாக



ANNA NAGAR

புத்தி சுவாதீனம் இல்லாதவர்போல் நடந்து கொள்ள ஆசைப்படுவது அனுமதிக்கத்தக்கதல்ல.

காவல்துறையில் உள்ள ஆர்வம் மிக்கவர்களின் செயல்பாடுகளை ஒழுங்கமைத்து நேர்மறையாக செயல்பட வைக்க வேண்டும். அவர்கள் சமுதாயத்தில் ஒரு அங்கம் ஆனவர்கள் என்பதால் சமூகத்தை காப்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் வேட்டைக்காரர்கள் போல செயல்படக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட வேண்டும்.அவர்கள் சமூகத்தின் நலனுக்காக சமூகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதால் அவர்களுக்கு தனிப்பட்ட சுதந்திரமான இருப்பு கிடையாது என்று அவர்களுக்கு சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டு காயங்களால் இறந்த இருவரில் ஒருவர் திரு.சண்முகம் அவருக்கு 40 வயது. எப்.சி.ஐ.கிடங்கிலிருந்து 3வது மைல் பாலத்தில் ஏறும் இடத்தில் அவருக்கு காயங்கள் ஏற்பட்டன. அவருக்கு காணப்பட்ட பிரேதப் பரிசோதனைக்கு முன்பு ஏற்பட்டதாக கண்டறியப்பட்ட காயங்கள் பின்வருமாறு.

An oval lacerated punctured wound (bullet entry wound) of mximum diameter of 00.8cm seen over the upper part of back of left side chest. The entry wound is located 9cms left to the posterior midline, 10cm below and lateral to the nape of the neck. The margin of the wound is inverted. The margin of the wound shows abrasion collar and grease collar of 2mm width all around the wound shoed brownish black in colour.

An irregular lacerated punctured wound (bullet exit wound) of size 3 to 5cms x 3 to 4 cms x thoracic cavity deep seen over the left side of upper part of front of chest



over left collar bone area. Underlying left collar bone and first rib found fractured in its middle and shattered bony pieces found protruding out. The margin was irregular an everted. X-Ray chest showed no foreign bodies.

பிரேதப்பரிசோதனை செய்த மருத்துவர் திரு.சுடலைமுத்து (C.W.11) மற்றும் மருத்துவர் T.சோமசுந்தரம் ஆகியோரின் கருத்து இறந்து போனவருக்கு மார்பின் இடது பக்கம் ஏற்பட்ட சிதைந்த துளைக்காயம் காரணமாக ஏற்பட்ட அதிர்ச்சியாலும், இரத்தப்போக்கினாலும் இறந்திருக்கலாம் என்று தெரிகிறது என்று கருத்து கூறியுள்ளார். கண்டறியப்பட்டவை துப்பாக்கி தோட்டா காயத்துடன் ஒத்து இருக்கின்றன.

இறந்துபோன மற்றொருவர் அந்தோணி செல்வராஜ், அவருக்கு 46 வயது. அவருக்கு எப்.சி.ஐ.கிடங்கிலிருந்து மடத்தூர் சந்திப்பிற்கு செல்லும் பாதையைத் தாண்டி அந்த இடத்தில் காயம் பட்டுள்ளார். அவருக்கு கண்டறியப்பட்ட பிரேதப்பரிசோதனைக்கு முந்தைய காயங்கள் பின்வருமாறு

An irregular oval shaped lacerated wound (bullet entry wound) measuring 1.2cms x 1.1cm with an abrasion collar black in color of 1mm width all around the wound in the front of left side chest which is 143cm from the heel 3cm from midline and 9cm from the suprasternal notch. The wound was oozing. The margin of the wound was inverted. There was no exit wound noted anywhere in the body.

தடயவியல் நிபுணர் திரு.திருநாவுக்கரசு (C.W.10) இறந்து போனவர் அயிட்டம் 1 அதாவது ஒரு சிதைந்த அடிபட்ட தோட்டா 9.59 மி.மீ எடை



ANNA NAGAR

உள்ளதும் 7.62 மி.மீ. திறன் கொண்டது 7.62 மி.மீ. திறன் கொண்ட Self Loading Rifle (SLR) அல்லது 7.62 மி.மீ. திறன் கொண்ட Caliber Bolt Action-இல் இருந்து சுடப்பட்டதாக கருத்து தெரிவித்துள்ளார்.

திரு.சண்முகம் சம்பந்தமான பிரேதப்பரிசோதனை அறிக்கையை கவனமாக பரிசீலித்தால் ஒரு தோட்டா இறந்து போனவரின் முதுகு வழியாக நுழைந்து மார்பு வழியாக வெளியேறியுள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால் தோட்டா துளைத்துக்கொண்டு சென்று முதுகின் வலது பக்கத்திலிருந்து மார்பின் முன்பககம் வழியாக வெளியே சென்றுள்ளது.தோட்டா உள்ளே நுழைந்து வெளியேறிய இடங்களில் காயங்கள் உள்ளது.பொதுமக்கள் சார்பில் ஆவண ஆதாரங்களில் சாட்சிகளின் முடிவில் சாட்சியத்தை சேகரித்ததிலிருந்து திரு.சண்முகம் ஒரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்த போது அவர் சுடப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்தார் போராட்டக்காரர்களில் ஒருவரான ம.சா.649 தி.பெரியசாமியின் சாட்சியத்தை கவனிக்க வேண்டும். எப்.சி.ஐ.கிடங்கிலிருந்து 3வது மைல் பாலம் சென்று ஏறும் பொழுது வலது பக்கத்தில் திரும்பினார். போராட்டத்திற்கு எவ்வகையிலும் சம்பந்தமில்லாத ஒரு நபர் ஒரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்தார். ஒரு காவலர் வெள்ளை நிற காவல் வேனிலிருந்து கிழக்கு நோக்கி சுட்டார் என்றும், அந்த நபர் துப்பாக்கிசூடு நடத்தியதில் அவர் இறந்து கீழே விழுந்தார். துப்பாக்கிச்சூடு நடத்திய அந்தக் காவலர் திரு.சுடலைக்கண்ணு என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. மேற்சொன்னபடி திரு.சண்முகம் துப்பாக்கிச்சூடு காயங்கள் அடைந்தார் என்பதிலும் மாறுபட்ட கருத்து இல்லை.


NEWS 18
தமிழ்நாடு
/ News18TamilNadu
VIDEOCON: 589 AIRTEL: 793 TATA SKY: 1561 | JIO TV | All Cable Network

திரு.சண்முகம் முதுகில் திரு.சுடலைக்கண்ணுவால் சுடப்பட்டு, தோட்டா அவரது உடம்பை துளைத்து உடனடியாக இறப்பை ஏற்படுத்தியுள்ளது என்று தவிர்க்க முடியாத அனுமானம் கொள்ளலாம்.


பாதிக்கப்பட்ட மற்றொருவரான அந்தோணி செல்வராஜின் பிரேதப்பரிசோதனை அறிக்கையிலிருந்து அவருக்கு மார்பில் துப்பாக்கிச்சூடு காயங்கள் ஏற்பட்டு இறந்துவிட்டதாக தெரியவருகிறது. அவருக்கு துப்பாக்கி குண்டு நுழைந்த காயம் இருக்கிறது. திரு.சண்முகத்தைப் போல துப்பாக்கி குண்டு வெளியேறிய காயம் இல்லை. அந்தோணி செல்வராஜின் உடலிலிருந்து சேகரிக்கப்பட்ட தோட்டா துகள்கள் முடிவினை சுட்டிக்காட்டுகின்றன. தோட்டா SLR Rifle-லிருந்து சுடப்பட்டுள்ளது என்பதையும் SLR துப்பாக்கியை வைத்திருந்தவர் அருகாமையில் இருந்து சுட்டிருக்கிறார் என்பதையும் காண்பிக்கின்றதால் துப்பாக்கிச்சூடு காயங்களை ஏற்படுத்தியதற்கான கடப்பாட்டை அந்த நபர் மீது சுமத்த வேண்டும். கைவசம் உள்ள வழக்கில் திரு.சுடலைக்கண்ணுSLR வகை Rifle ஆயுதம் வைத்திருந்தார். அந்தோணி செல்வராஜின் இறப்பிற்கு திரு.சுடலைக்கண்ணு மீது குற்றச்சாட்டு சுமத்தலாம். சுற்றியுள்ள சூழ்நிலைகள் தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248)-ன் அர்த்தமில்லாத அறிவுரைகளின்படி திரு.சுடலைக்கண்ணு துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டார் என்பதை சரியாக குறிப்பிட்டு காண்பிக்கின்றன.

க.சா.88 மரிய ஹார்ட்மேன் ராஜின் சாட்சியம் அந்தோணி செல்வராஜின் இறப்பிற்கு சுற்றியுள்ள சூழ்நிலைகள் சரியாக திட்டமான நிலையை



ANNA NAGAR

காண்பிக்கிறது. அந்த மரிய ஹார்ட்மேன் ராஜ் இறந்துபோன அந்தோணி செல்வராஜின் முதலாளியாக கருதப்படுபவர் இறந்து போனவர் 28.05.2018-ல் நடக்கவிருந்த அவரது மகளின் பூப்புனித நீராட்டு விழாவிற்கு அழைப்பிதழ் கொடுப்பதற்காக தனது முதலாளி வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தார். அவர் தனது மகளின் பூப்புனித நீராட்டு விழா சம்பந்தமாக முன்னரே வேலைகளை துவக்கி விட்டதால் அலுவலகத்திற்கு வர இயலாத நிலைமையை தனது முதலாளியிடம் தெரிவித்தார். அவரது இருசக்கர வாகனம் எரிக்கப்பட்டது. அவர் தனியார் பள்ளியில் பணிபுரியும் தனது மனைவிக்கு அலைபேசி மூலம் அழைப்பிதழ்கள் விநியோகிக்க தயாராக இருக்குமாறு தெரிவித்தார். அப்போது இருசக்கர வாகனங்களில் வந்த காவல் ஆளினர்கள் அந்தோணி செல்வராஜை சுட்டார்கள். அவர் உடனடியாக நிலைகுலைந்து விழுந்தார். அவரை பக்கத்தில் இருந்த ஆக்சிஸ் வங்கி அலுவலர்களும், அவரது நண்பர் ஒருவரும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். ம.சா.88 மரிய ஹார்ட்மேன் ராஜின் சாட்சியம் கேள்விப்பட்ட சாட்சியம் போல் இருந்தாலும், வழக்கில் நிரூபிக்கப்பட்ட சூழ்நிலைகளுடன் முரண்பாடு இல்லாமலும், உதவுகிற வகையிலும் இருக்கிறது. சாட்சிய கோட்பாடுகளை கண்டிப்பாக கடைப்பிடிக்காமல் குறிப்பிட்ட அளவுக்கு முன்ஜாக்கிரதை விதியின் வழிகாட்டுதல்படி உபயோகப்படுத்தலாம். ம.சா.88 மரிய ஹார்ட்மேன் ராஜின் சாட்சியம் குறுக்கு விசாரணையிலும் எதிர்க்கப்படவில்லை.3 வது மைல் பாலத்தின் இரு பக்கங்களிலும் காவல்துறையினர் சுட்டதில் இறந்துபோன சண்முகம் மற்றும் அந்தோணிராஜ் ஆகிய இருவரது உடல்கள் மீதும் துணிகள் போர்த்தப்பட்டது.



**<u>திரேஸ்புரத்தில் கோபங்கொண்ட போராட்டக்காரர்கள் மற்றும் முடிவான துப்பாக்கிச்சூடு - விளைவு ஒரு மீனவ பெண் ஜான்சிராணி மரணம் -இல்லத்தரசி</u>**

23.05.2018-ஆம் தேதி அண்ணாநகரில் கடைசியாக துப்பாக்கிச்சூடு செய்யப்படுவதற்கு முன்னர் திரேஸ்புரத்தில் துப்பாக்கிச்சூடு நடந்தது. அதன் பிறகு கடைசி துப்பாக்கிச்சூடு அண்ணாநகரில் நடந்தது. திரேஸ்புரம் துப்பாக்கிச்சூடு மீனவப்பெண் ஜான்சிராணி என்ற இல்லத்தரசியின் உயிரை பறித்துக்கொண்டது. இந்த சம்பவத்திற்கான சூழ்நிலைகள் பற்றி தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) சாட்சியத்தில் கூறியுள்ளார். அதில், காவல் கண்காணிப்பாளர் பிற்பகல் 2.30 மணி முதல் 2.45 மணி வரை ரோந்துப்பணியில் இருந்தார். அவருக்கு திரேஸ்புரத்தில் உள்ள போராட்டக்காரர்கள் காவல் கண்காணிப்பாளரின் முகாம் அலுவலகம், மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலகம் (காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோரது குடியிருப்புகள்) ஆகியவற்றை தாக்குவதற்கு திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று தகவல் கிடைத்தது. ஏற்கனவே வடபாக காவல் நிலைய ஆய்வாளர் திரு.பார்த்திபன் (எ.த.சா.214), ஜே.எஸ்.பி. திரு.S.செல்வநாகரத்தினம் ஐ.பி.எஸ் (எ.த.சா.242), புறநகர் ஏ.டி.எஸ்.பி. திரு.முத்தமிழ் (எ.த.சா.217) மற்றும் சுமார் 10 முதல் 15 காவல் ஆளிநர்கள் பக்கிள் ஓடை அருகே இருந்தார்கள். ஓடையின் இரண்டு பக்கங்களிலும் போராட்டக்காரர்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் கல் எறிதலிலும், Fire balls வீசுவதிலும், காவல் துறையினருக்கு எதிராக சத்தம் போட்டு கோஷங்கள் எழுப்புவதிலும் ஈடுபட்டிருந்தார்கள். காவல் ஆய்வாளர்



திரு.பார்த்திபன் (எ.த.சா.214)-க்கு ஒரு சிறிய காயம் ஏற்பட்டது. காவல் கண்காணிப்பாளர் (எ.த.சா.248) மற்றும் காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபன் (எ.த.சா.214) கூட்டத்தை கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் அதில் வெற்றியடையவில்லை. காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபன் (எ.த.சா.214), காவல் கண்காணிப்பாளரிடம் சிறப்பு நிர்வாக நடுவர் திரு.கண்ணன் (எ.த.சா.187) தடியடிக்கு உத்தரவிட்டிருப்பதாகவும், கூட்டம் கலையவில்லை என்றால் துப்பாக்கியால் சுட வேண்டியிருக்கும் என்றும் தகவல் கூறினார். சிறப்பு நிர்வாக நடுவரின் உத்தரவின்படியும், காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபன் (எ.த.சா.214)-ன் அறிவுரைகளின்படியும் காவலர் ஆறுமுகசாமியால் கண்ணீர் புகைக்குண்டுகள் வெடிக்கச் செய்யப்பட்டது.கூட்டம் கலைந்து செல்லவில்லை. காவல் கண்காணிப்பாளருடன் துணைக்கு வந்த காவலர்கள் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) மற்றும் திரு.ஆ.கண்ணன் (எ.த.சா.210) உள்ளிட்டோர் முன்னோக்கிச் சென்றார்கள். திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) மற்றும் திரு.ஆ.கண்ணன் (எ.த.சா.210) ஆயுதங்கள் வைத்திருந்தார்கள். அதன்பிறகு காவல் கண்காணிப்பாளர் காவலர்கள் திரு.ஆ.கண்ணன் (எ.த.சா.210) மற்றும் திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) துப்பாக்கியால் சுட்ட சத்தத்தை கேட்டார். காவல் கண்காணிப்பாளர் சிறிது தூரத்தில் தள்ளி இருந்ததால் துப்பாக்கிச்சூடு நடத்தியதை பார்க்கவில்லை என்றும் அவர் வேறொரு பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்த கூட்டத்தை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார் என்றும் தெரிவித்தார். அவர் கூட்டம் கலைந்து சென்ற பிறகு ஒரு காயம்பட்ட பெண் கீழே



கிடப்பதைக் கண்டார்.அவர் மருத்துவமனைக்கு காவல் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டார் மருத்துவமனையில் அவர் காயங்கள் காரணமாக இறந்துவிட்டார். அந்தப் பெண்ணின் அடையாளம் திரேஸ்புரத்தைச் சேர்ந்த ஜான்சிராணி என்று உறுதி செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார்.

காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபனின் (எ.த.சா.214) சாட்சியம் அதிகளவு அமைப்புகளையும், கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) கூறிய விபரங்களைவிட அதிக விபரம் கொண்டதாகவும் இருக்கிறது. காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபன் (எ.த.சா.214) தேவையான உத்தரவுகளை காவல் கண்காணிப்பாளரிடமிருந்து வாங்கியும், திரு.பார்த்திபன் (எ.த.சா.214) அறிவுரைகளின்படியும் ஆயுதப்படை காவலர் தங்கதுரை கூட்டத்தை கலைப்பதற்காக கூட்டத்தினர் மீது பிளாஸ்டிக் தோட்டாக்களைக் கொண்டு சுட்டார். அதனைத் தொடர்ந்து 3 ரவுண்டுகள் பிளாஸ்டிக் தோட்டாக்களால் அடங்காத கூட்டத்தினர் மீது சுட்டார். சுட்டதும் கூட்டத்தினர் கற்களைக் கொண்டும், fire balls களைக் கொண்டும் காவல்துறையினர் மீது எறிந்தார்கள். அதனால் காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபன் (எ.த.சா.214) மற்றும் திரு.ஆ.கண்ணன் (எ.த.சா.210) 0.410 Musket-லிருந்து balls ரவுண்டுகளால் சுட்டனர். கூட்டம் கலையவில்லை. வெகு ஆக்ரோஷமாக இருந்தார்கள்.

காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபன் (எ.த.சா.214)-ன் அறிவுரைகளின்படி திரு.சுடலைக்கண்ணு SLR துப்பாக்கியிலிருந்து ஒரு ரவுண்டு வானத்தை நோக்கி



சுட்டார். ஒரு இடைவேளைக்குப் பிறகு அவர் மறுபடியும் மற்றொரு ரவுண்டு சுட்டார். கூட்டம் அப்படியே இருந்தது. பின்னர் அவரது அறிவுரைகளின்படி திரு.சுடலைக்கண்ணு (எ.த.சா.207) கீழ்நோக்கி குறிபார்த்து மற்றொரு ரவுண்டு சுட்டார்.அப்போது ஒரு பெண் தலையில் காயம்பட்டு கீழே விழுந்துவிட்டார்.

முதலில் திரேஸ்புரத்திற்கு பொறுப்பான சிறப்பு நிர்வாக நடுவர் திரு.சேகரிடமிருந்து தேவையான உத்தரவு வழங்கப்பட்டதா என்பதை பார்க்க வேண்டும். திரேஸ்புரத்தில் திரு.சேகர் இல்லையென்பது வெளிப்படையாகும்.அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் சென்று அந்த பகுதிக்கு உண்டான எல்லைக்கு தானே பொறுப்பு எடுத்துக் கொண்டதாகவும், திரு.ராஜ்குமார் தங்கசீலன் அங்கு இல்லாததால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துப்பாக்கிச்சூட்டிற்கு தான் உத்தரவு வழங்கியதாகவும் அவர் கூறும் கூற்று இந்த ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகம் மற்றும் மடத்தூர் சந்திப்பு ஆகிய பகுதிகளுக்கு பொறுப்பான சிறப்பு நிர்வாக நடுவர் திரு.கண்ணன் திரேஸ்புரத்தில் துப்பாக்கிச்சூட்டிற்கு உத்தரவிட்டதாக கூறியுள்ளார். திரு.சேகர் அங்கு இல்லாதது விளக்கப்படாத நிலையிலும், மறுக்கப்படாத நிலையிலும் திரு.கண்ணன் அவ்வாறு கூறுவதற்கு பொருத்தமான காரணம் எதுவும் இல்லை. திரு.கண்ணனின் (எ.த.சா.187) கூற்று தலைமையிடத்து வட்டாட்சியர் அவரை திரேஸ்புரத்திற்கு சிறப்பு நிர்வாக நடுவராக நியமித்து அறிவிக்கை வெளியிட்டுள்ளார் என்பதாகும். தலைமையிடத்து வட்டாட்சியரான திருமதி.சிவகாமசுந்தரி (எ.த.சா.181) தனது




INJURIED PERSON

சாட்சியத்தில் 9 சிறப்பு நிர்வாக நடுவர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்றும், அவர்களில் யாரும் எந்தவொரு இடத்திற்கும் எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ சார் ஆட்சியர் திரு.M.S.பிரசாந்த், இ.ஆ.ப. (எ.த.சா.244) மாற்றவில்லை என்றும் கூறியுள்ளார். திரு.கண்ணன் திரேஸ்புரம் பகுதிக்கு பொறுப்பாக எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்று அவர் உறுதியாகக் கூறுகிறார்.திரு.சேகர்தான் திரேஸ்புரம் பகுதிக்கு சிறப்பு நிர்வாக நடுவராக நியமிக்கப்பட்டார் என்றும, திரு.கண்ணன் திரேஸ்புரத்தில் நியமிக்கப்படவில்லை என்றும் அறுதியிட்டு கூறுகிறார். திரு.கண்ணனின் (எ.த.சா.187) கூற்றை தலைமையிடத்து வட்டாட்சியரான திருமதி.சிவகாமசுந்தரியின் சாட்சியத்தின் பின்புலத்துடன் பார்க்கும்போது திரு.கண்ணனின் கூற்று பொய்யானதாகத் தெரிகிறது. அந்த குறிப்பிட்ட நேரத்தில் திரு.கண்ணன் (எ.த.சா.187) திரேஸ்புரத்திலேயே இல்லையென்பதும், துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு முன் சிறப்பு நிர்வாக நடுவரால் உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்ற காவல் நிலை ஆணைகளில் குறிப்பிட்டுள்ள நுட்பமான தேவைகளை திருப்தி செய்வதற்காகத்தான் அவர் அவ்வாறு சொல்கிறார் என்பதும் தவிர்க்க முடியாத அனுமானம் ஆகும்.சிறப்பு நிர்வாக நடுவர் திரு.ராஜ்குமார் தங்கசீலன் காவல் துறையினருக்கு கட்டுப்பட்டு உதவி செய்யவில்லை என்றும், காவல்துறையினர் திரு.சேகரை சிறப்பு நிர்வாக நடுவராக அந்த இடத்திற்கு போட்டால் பொருத்தமாக இருக்கும் என்று நினைத்துள்ளார்கள் என்றும் அனுமானம் கொள்ளத்தக்கதாகும்.




AVM HOSPITAL

திரு.சேகர் காவல்துறையினருக்கு கட்டுப்பட்டு உதவி செய்ய ஒப்புக்கொண்டதும் மீண்டும் அனுமானம் கொள்ளத்தக்கதாகும். காவல்துறைக்கு கட்டுப்பட்டு உதவி செய்ய தயாராக இருந்த மற்றொரு சிறப்பு நிர்வாக நடுவர் திரு.கண்ணன் (எ.த.சா.187). அவர்தான் திரேஸ்புரம் அத்தியாயத்தை நடத்தியவர்.திரு.சேகர் காவல்துறையினரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று விட்டதால் திரேஸ்புரத்திற்கு அவரது பணிகள் தேவைப்படாமல் போய்விட்டது.

<u>பொது சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறிய வருவதை கீழே பார்ப்போம்.</u>

ப.சா.650 ஜேசு பனிமய ஜான் ஒரு மீனவர். அவர் போராட்டத்தில் தீவிரமாக கலந்து கொண்டவர். அவர் சாட்சியத்தில் திரேஸ்புரத்தைச் சேர்ந்த போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துப்பாக்கியால் சுடப்பட்டு காயமடைந்திருக்கிறார்கள் என்றும், அவர்களில் ஒருவரான கிளாஸ்டன் காயங்களினால் இறந்துவிட்டார் என்றும் கூறியுள்ளார். காவல்துறையினர் திரேஸ்புரத்திலுள்ள ஒரு வீட்டிற்குச் சென்று 3 ஆண்களை பிடித்துச் சென்றார்கள். அது திரேஸ்புரம் மக்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. அவர் மேலும் சாட்சியத்தில் இளம் பையன் ஒரு கண்காணிப்பு கேமராவை உடைத்தார் என்றும் அந்த பையனுக்கு தான் உதவி செய்ததாகவும் கூறியுள்ளார். சாட்சி காவல்துறையினர் 2 டெம்போ டிராவல் வாகனங்களில் வந்தார்கள் என்று கூறியுள்ளார். வாகனத்திலிருந்து இறங்கிய காவல்துறையினர் பக்கிள் ஓடை பாலத்திலும், தெருக்களிலும் இருந்தார்கள். இவ்வாறிருக்கையில் சுடப்பட்ட




AVM HOSPITAL

தோட்டாக்களில் ஒன்று தனது மகளுக்கு சமைப்பதற்காக மீனை கொடுத்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்த ஜான்சிராணியின் தலையில் நுழைந்தது. தோட்டா அவரது தலையை சிதைத்து மூளை வெளியே வந்து தரையில் விழுந்து துடித்தது.

ம.சா.22 திரு.செல்வம் மற்றொரு மீனவர். முக்கியமாக அவர் துப்பாக்கிச்சூட்டில் காயம் பட்டவர். 50 முதல் 60 வரையிலான ஆண்களையும், பெண்களையும் காவல்துறையினர் தூரத்துவதை சாட்சி பார்த்துள்ளார். அதே சமயம் துப்பாக்கி சுடும் சத்தத்தையும் கேட்டார். காவல்துறையினரைக் கண்டதும் சாட்சி ஓடினார். அதில் கீழே விழுந்ததில் அவருக்கு வலதுபக்க விலா எலும்புகளில் காயம் ஏற்பட்டது. துப்பாக்கிச்சூடு நடைபெற்றுள்ளதாக மக்களை எச்சரிக்க ஆலயத்தின் மணி அடிக்க ஆரம்பிக்கப்பட்டது. சாட்சி ஒரு மோட்டார் சைக்கிளில் முதலில் வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ம.சா.37 ஜேசு ஆனந்த் ஒரு வெல்டர். அன்று பிற்பகல் 1.00 மணியளவில் அவர் வீட்டில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார். அப்போது வெளியே அதிகமான சத்தம் கேட்டது. அவர் ஆர்வத்தில் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தார். அவர் தனது வீட்டை நோக்கி திரும்ப ஓடினார். காவல் துறையினர் துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார்கள். சாட்சிக்கு கழுத்திலும், வலது தொடையிலும் துப்பாக்கிக் குண்டு காயங்கள் ஏற்பட்டன. அவர் அமெரிக்கன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவமனையில் துப்பாக்கிச்சூடு காயம்பட்ட யாரையும் அனுமதிக்கக்கூடாது




NEAR GOVERNMENT HOSPITAL THOOTHUKUDI

என்று காவல் துறையினர் ஆட்சேபனை செய்ததால் சாட்சி துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் வீட்டிற்கு வந்து அன்று இரவு முழுவதும் வீட்டில் இருந்தார். மறுநாள் காலை அவர் திரேஸ்புரம் ESI மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று, பின்னர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்பு அங்கு அவர் 23 நாட்கள் உள் நோயாளியாக இருந்தார்.

காவல் கண்காணிப்பாளர் (எ.து.சா.248) பார்வையாளர் போல வந்து சூழ்நிலையிலிருந்து வெளியேறி நடப்பவைகளுக்கு பொறுப்பு எடுத்துக்கொள்ளுமாறு காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபனிடம் (எ.து.சா.214) சொல்லிவிட்டு சென்றுவிட்டார். காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபன் (எ.து.சா.214) காவல் ஆளிநர்களுக்கு பலத்தை உபயோகிக்க வேண்டுமென்று அறிவுரைகள் கொடுத்துக்கொண்டே இருந்தார். முதலில் hand grenades எறிய வேண்டுமென்றும், பின்னர் பிளாஸ்டிக் புல்லட் போன்ற ஆயுதங்களால் சுட வேண்டுமென்றும், கடைசியாக உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய SLR-ஐ உபயோகிக்க வேண்டுமென்றும் அறிவுரைகள் கூறினார். காவல் கண்காணிப்பாளர்அங்கு இல்லாததால் அவர் காவல் ஆய்வாளர் திரு.பார்த்திபனிடம் குறிப்பிட்ட இடத்தில் துப்பாக்கியால் சுடுவதற்கு முடிவு எடுத்தது சம்பந்தமாக ஆலோசனை செய்ய வரவில்லை.பல இடங்களில் துப்பாக்கியால் சுட்ட சாட்சிகளைப் பார்க்கும்போது குறிப்பாக கடைசியாக நடந்த திரேஸ்புரம் துப்பாக்கிச்சூடு அவர்களுக்கு நிறைய பாடங்களையும், படிப்பினையையும் சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும். Tear gas, Buckshot



NEAR GOVERNMENT HOSPITAL THOOTHUKUDI

போன்றவை உபயோகப்படுத்தப்பட்டால் போராட்ட கூட்டத்தை தடுக்க முடிந்திருக்கும்.துப்பாக்கிச்சூடு உபயோகிப்பதன் மூலம் போராட்டக்கூட்டத்தை தடுப்பதற்காக சில போராட்டக்காரர்கள் உயிர்களை இழந்தும், துப்பாக்கிச்சூட்டு காயங்கள் அடைந்தும் இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) மற்றும் அவருடன் இருக்கும் காவல் ஆளினர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு உள்ளே மற்றும் வெளியே, 3வது மைல், மடத்தூர் சந்திப்பில் துப்பாக்கிச்சூடு நடைபெற்று விலைமதிப்பற்ற உயிர்கள் இழக்கப்பட்டு விட்டது என்பது தெரியும். திரேஸ்புரத்தில் துப்பாக்கிச்சூடு உயிரிழப்பை ஏற்படுத்தும் என்பதும் அவருக்குத் தெரியும். அதன் பிறகாவது கடமையைச் செய்ய ஆயுதங்களை ஏந்தாமல் எச்சரிக்கை செய்து உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ஆயுதங்களை உபயோகப்படுத்துவதை தவிர்த்து அதற்குப் பதிலாக நம்பிக்கை அளித்து சமாதானப்படுத்தி, கோபமாக இருக்கும் போராட்டக்காரர்களையும் அந்தந்த பகுதியின் பெரியவர்களையோ அல்லது நாட்டாண்மைகளையோ அழைத்து கலந்து பேசியிருந்தால் உணர்ச்சி தணிக்கப்பட்டிருக்கும்.

இந்த தருணத்தில் தேனி மாவட்ட அப்போதைய காவல் கண்காணிப்பாளர் திரு.பாஸ்கரன் (எ.த.சா.229) சாட்சியத்தை குறிப்பிட வேண்டியது தேவையானதாகும். திரேஸ்புரத்தில் நடந்த துப்பாக்கிச்சூடு உடனடியாக ஜான்சிராணிக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளது. திரேஸ்புரம் மக்களின் மனநிலை உணர்ச்சி மற்றும் கோபத்துடன் கூடியதாக இருந்தது. கொந்தளிப்பான மற்றும் நிலையற்ற சூழ்நிலையை உருவாக்கியது முற்றிலும் காவல்துறைதான்.



NEAR GOVERNMENT HOSPITAL THOOTHUKUDI

இவ்வாறான பயங்கரமான சூழ்நிலை தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் உடன் விருதுநகர், தேனி, மதுரை கண்காணிப்பாளர்கள் திரேஸ்புரத்தில் ஒன்றிணைக்கின்ற மற்றும் தீர்வு காண்பதற்காக வரவழைக்கப்பட்டார்கள். தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Public addressing system மூலமாக போராட்டக்காரர்களை வியக்கத்தக்க வகையில் சமாசம் செய்யும் குரலில் பேசினார், அவர் காவல் படை மக்களை பாதுகாப்பதை உறுதி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் தெளிவாகக் கூறினார். அந்த சமயம் திரேஸ்புரம் மக்கள் காவல் துறையினர் மீது முழு நம்பிக்கை இல்லாமலும் இருந்தார்கள், காவல் கண்காணிப்பாளர்களே Public addressing system மூலம் ஒருவர் பின் ஒருவராக கூடியிருந்த மக்களிடம் உரையாடல் நடத்தினார்கள்.

அதன்பின்னர் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் காவல் துறையினரை அணுகினார்கள். காவல்துறையினருக்கும், திரேஸ்புரம் மக்களுக்கும் இடையே அவர்கள் பாலமாக செயல்பட்டனர் ஆரம்பத்தில் காவல்துறையினருக்கும், பொதுமக்களுக்கும் கடுமையான வாக்குவாதங்கள் ஏற்பட்டன. ஆனால் பின்னர் அமைதிப்பேச்சு நடைபெற்று ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் பொதுமக்களிடம் காவல்துறையின் Public addressing system மூலமாக பேசினார்கள். அந்தக் கூட்டத்தில் ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுடன் மேலும் நான்கு பெரியவர்களும் சேர்ந்து கொண்டார்கள். இது குறிப்பிடத்தக்க வகையில் நம்பிக்கை ஏற்படுத்துவதாக இருந்தது. இயல்பு நிலை ஏற்படுவது சம்பந்தமாக பெரியவர்கள் பேசினார்கள். காவல் துறையினருக்கும், திரேஸ்புரம் மக்களுக்கும் சமாதானம்



NEAR GOVERNMENT HOSPITAL THOOTHUKUDI

ஏற்பட்டது. அதன் சரத்துக்கள்படி திரேஸ்புரம் மக்கள் பாலத்தை தாண்டக்கூடாது என்றும் பிரச்சனை எதிலும் ஈடுபடக்கூடாது என்றும், அதேபோல் திரேஸ்புரம் மக்கள் பயத்துடன் இருப்பதால் திரேஸ்புரம் கிராமத்திற்குள் காவல் துறையினர் நுழையக்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது. பின்னர் கூட்டம் கலைந்து சென்று விட்டது. இத்துடன் இந்த அத்தியாயம் முடிவடைந்துவிட்டது.

**<u>இறந்து போன ஜான்சிராணி</u>**

இறந்து போன ஜான்சிராணிக்கு வயது 40. பிரேதப் பரிசோதனைக்கு முந்தைய காயங்கள் பின்வருமாறு :

1. An irregular lacerated wound (bullet entry wound) of size 2.5cm x 2cms x brain deep seen over the right ear pinna, located 6cms above the right mastoid process, 16cms from the midline and 149cms from the right heel. The margin of the wound is inverted. The margin of the wound shows abrasion collar and grease collar of 2mm seen around the entry wound.

2. An irregular burst open laceration (bullet) seen over the left side of head starting from the lateral aspect of left orbit (eyebrow), back of the pinna of the left ear, left mastoid process, occipital protuberance, left occipital region and left parietal region. It is 6cm towards the left midline.

On dissection it pierces and enter into the right ear pinna and enter into the cranial cavity base of the skull, left side of the facial bone found fractured into multiple pieces



ARREST OF PERSONS SUBSEQUENT TO THE INCIDENT ON 23.04.2018

except mandible. Brain matter and brain tissue found missing. Both the eyeballs were found to be shrunken. The track of the wound is directed towards the left.

Other injuries : 1. An abrasion of size 16x6cm seen over the back of upper 2/3rd of left forearm dark brown in color.

X-ray skull showed : Fracture in the right temporal bone and shattered in left, frontal, parietal temporal, occipital; and facial bones.

The post mortem doctor Dr.Vindo Ashok Chaudhari (C.W.9) and Dr.R.Mohamed Nazim (C.W.7) would opine that the deceased would have died of shock and haemorrhage due to firearm bullet injury to the head. It could be seen from the evidence of Inspector of Police Tr.Parthiban (R.W.214) that on his orders fire was opened in the air but at a point of time when the crowd was unrelenting on his instructions the SLR was used to fire at the ground. u:ewre and now it may be pointed out that if the version of the Inspector Tr.Parthiban is true it passes ones comprehension as to how an injury of the kind sustained by the Deceased Jansi Rani could have been caused to her. In other words when the bullet is fired at and lands on the ground it remains unexplained and it is quite strange that the Deceased Jansi Rani should have sustained an injury on the head resulting in the brain matter getting displaced from the head and falling on the floor pulsating. The circumstances attending the causation of the injuries would only pointedly indicate that it was a case of shooting point blank and that too on the head of the Deceased by the firearm used by Tr.Sudalaikannu (R.W.207). It does not look to be



a case of aiming at a different part of the body but by chance landing on the head. This Commission had already adverted to the evidence of residents of Threspuram who sustained gunshot injuries in the incident.

காயம்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் நம்பகத்தன்மை உடையவை. ஏனெனில் அவர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்பது சந்தேகமில்லை. துப்பாக்கிச்சூடு காயத்தினால் இறந்து போனவரின் தலை, மூளைப்பகுதி சிதைந்து கழன்று தரையில் விழுந்துள்ளது. ஆவணத்தில் நன்கு கவனிக்கும் நேர்வில் சம்பவம் காவல் துறை கூறுகிற விதத்தில் நடைபெறவில்லை என்பதும், காயம்பட்ட சாட்சிகளின் சீரான கூற்று பிரகாரம் சம்பவம் நடைபெற்றுள்ளது என்பதும் தெளிவாகும்.

**<u>23.05.2018-ஆம் தேதி அண்ணாநகரில் ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்வு - முடிவு</u>**

23.05.2018 தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் நடிகரும், அரசியல் கட்சித் தலைவருமான திரு.கமல்ஹாசன் போன்ற பிரபலமானவர்கள் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும், உள்நோயாளிகளாக இருந்த காயம்பட்டவர்களுக்கும் ஆறுதல் சொல்வதற்கு வந்திருந்தார்கள். மருத்துவமனையில் அமைதியின்மை காணப்பட்டது. அப்போது அப்போதைய மதுரை மாநகர துணை ஆணையர் (போக்குவரத்து) திரு.அருண்பால கோபாலன் (எ.த.சா.232), மற்ற உயர் காவல் அதிகாரிகளுடன் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது பொதுமக்களில் சுமார் 200 நபர்கள் கோஷங்கள் எழுப்பிக்கொண்டு



காவல்துறையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள். கூட்டத்தின் வலு அதிகரித்தது. சில மர்மநபர்கள் மருத்துவமனையில் இருந்த காவல்துறையினர் மீது கற்களை எறிய ஆரம்பித்தார்கள். அவர்கள் மீது தடியடி நடத்தப்பட்டது. கூட்டம் கலைந்தது. ஆனால் அவர்கள் மறுபடியும் கூடி கற்களை எறிவதில் ஈடுபட்டார்கள். அவர்கள் மறுபடியும் விரட்டியடிக்கப்பட்டார்கள். அவ்வாறு விரட்டப்பட்டவர்கள் பிரையண்ட் நகர் மற்றும் அண்ணாநகர் பகுதிகளில் நுழைந்தார்கள். பிற்பகல் 1.30 மணியளவில் அவருக்கு VHF மூலம் ஒரு காவலர் பேருந்து பிரையண்ட் நகரில் தீ வைத்து எரிக்க முயற்சி செய்யப்பட்டதாக தகவல் கிடைத்தது. மறுபடியும் பிற்பகல் 1.30 மணியளவில் VHF மூலம் அண்ணாநகர் பகுதியில் குழப்பமாக இருக்கிறது என்றும், ஒரு டாஸ்மாக் கடை தீ வைத்து எரிக்கப்பட முயற்சிக்கப்பட்டதாகவும் தகவல் வந்தது. ஐ.ஜி.யின் உத்தரவுகளின்படி திரு.சண்முக ராஜேஸ்வரன் அண்ணாநகர் பகுதிக்கு வந்தடைந்தார். தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) ஏற்கனவே அங்கு வந்திருந்தார். அண்ணாநகர் 3வது, 4வது, 5வது, 6வது மற்றும் 7வது தெருக்களில் கூட்டம் கூடியது. அவர்கள் காவல்துறையினர் மீது கற்களை எறிந்தார்கள்.

அவர்கள் வாகனங்களின் டயர்களுக்கு தீ வைத்து காவல்துறையினரை நோக்கி உருட்டி விட்டார்கள். அவர்கள் காவல்துறையினர் மீது பெட்ரோல் நிரப்பிய பாட்டில் திரியை பற்ற வைத்து வீசினார்கள். சிறப்பு நிர்வாக நடுவர் Public addressing system மூலம் ஒரு எச்சரிக்கை செய்தார்.





எளிதாக கூட்ட எண்ணிக்கை 2000-த்தை தாண்டியது.தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் நடந்த நிகழ்வுதான் அண்ணாநகர் துப்பாக்கிச்சூடு சம்பவத்திற்கு முன்னோடியாக உள்ளது என்பது சாட்சியத்திலிருந்து தெரிகிறது.

சிறப்பு நிர்வாக நடுவர் திரு.சந்திரன் (எ.த.சா.184)- இன் கூற்று பலப்பிரயோகம் எதாவது நேர்ந்தால் அதற்கான உத்தரவு வழங்குவதற்காகவும் அவரை அண்ணாநகருக்கு வருமாறு தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) கேட்டுக்கொண்டார் என்பதாகும். தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) தனது சாட்சியத்தில் சிறப்பு நிர்வாக நடுவர் திரு.சந்திரன் (எ.த.சா.184) அண்ணாநகரில் பார்த்ததாகவும், திரு.சந்திரன் அங்கு வருமாறு தான் எதுவும் சொல்லவில்லை என்றும் கூறியுள்ளார். சிறப்பு நிர்வாக நடுவர் வருவாய் துறையில் ஒரு அதிகாரி என்பதால் பதவி நிலையில் உள்ள அவரது உயர் அதிகாரிகளிடம் உதாரணத்திற்கு தலைமையிடத்து வட்டாட்சியர், சார் ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடமிருந்துதான் அறிவுரைகள் பெறவேண்டும் என்றும், காவல் கண்காணிப்பாளரிடமிருந்து அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. காவல் கண்காணிப்பாளரின் அறிவுரையின்படி சிறப்பு நிர்வாக நடுவர் திரு.சந்திரன் அண்ணாநகர் அழைத்து வரப்பட்டிருக்கிறார். காவல் நிலையாணையின் வேண்டுகோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று அனுமானிக்கத் தக்க தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிப்பதையே இது தெளிவாக காட்டுகிறது.



INJURIED VEERABAGU CARRIED BY PROTESTERS

தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) அண்ணாநகர் சம்பவம் குறித்து அளித்துள்ள சாட்சியத்தில் கூட்டம் பெரிய அளவில் கல் எறிதல், தீ வைப்பு ஆகியவற்றில் ஈடுபட்டது. கூட்டம் டூவிபுரத்தில் உள்ள டாஸ்மாக் கடையை சூறையாடி, தீ வைத்தது. காவல் கண்காணிப்பாளர் அதிரடிப்படையுடன் அவர்களை விரட்ட, கூட்டம் Public addressing system மூலம் திரு.ஜெயபாண்டி (எ.த.சா.218)ஆல் எச்சரிக்கப்பட்டது. ஆனால் பலனில்லை. கூட்டம் ஒளிந்திருத்தல், பின்னர் வெளியே வருதல் என்று ஈடுபட்டு காவல் துறையினரை வாவழைத்தது. சிறப்பு நிர்வாக நடுவர் திரு.சந்திரன் (எ.த.சா.184) இப்படிப்பட்ட நேரத்தில் துப்பாக்கியை உபயோகிக்க வேண்டும் என்று யூக யோசனை கூறினார்.

இத்தருணத்தில் காவல் கண்காணிப்பாளரின் அதிரடிப்படை– II-ஐச் சேர்ந்த திரு.மாரியப்பன் (எ.த.சா.209) TSM Shells 10 ரவுண்டுகள் சுட்டதைத் தொடர்ந்து Sten shells 2 ரவுண்டுகள் மற்றும் Gas Gun Rubber shells 9 ரவுண்டுகள் அண்ணாநகர் மெயின் ரோட்டில் சுட்டார். காவல் கண்காணிப்பாளரின் அதிரடிப்படை -I-ஐச் சேர்ந்த திரு.ஆ.கண்ணன் (எ.த.சா.210) 12 bore Gun மூலமாக rubber bullets 5 ரவுண்டுகள் அண்ணாநகர் 7வது தெருவில் சுட்டார். அதே திரு.ஆ.கண்ணன் 12 bore gun மூலமாக 4 rubber bullets அண்ணாநகர் மெயின் ரோட்டில் சுட்டார். தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளரின் அறிவுரைகளின்பேரில் திரு.தங்கதுரை Plastic bullets 9



INJURIED PERSON IN GH

ரவுண்டுகள் மெயின் ரோட்டிலும் Plastic bullets 9 ரவுண்டுகள் அண்ணாநகர் 6வது தெருவிலும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ஆயுதமான (Lethal weapon) 0.303 Rifle-ஐ உபயோகித்து சுட்டார். திரு.ஆ.ராஜா (எ.த.சா.224) கூட்டத்தினர் மீது இரண்டு TSM Grenade எறிந்தார்.

மேற்சொன்ன ஆயுதப்பிரயோக (force) உபயோகம் பயனற்றதாகி விட்டது. காவல் கண்காணிப்பாளர் திரு.P.மகேந்திரன் (எ.த.சா.248) தலைக்கவசத்துடன் (helmet) இருந்தார் கூட்டம் எறிந்த ஒரு கல் அவரது ஹெல்மெட்டின் மீதும் ஹெல்மெட்டின் நார் கண்ணாடி பகுதி மீதும் பட்டு ஹெல்மெட் உடைந்து விட்டது. அவர் நிலைகுலைந்து விட்டார். பின்னர் அவராகவே சுதாரித்துக்கொண்டு எழுந்துவிட்டார். அவர் தனது Gunman திரு.ஸ்டாலின் (எ.த.சா.226)-யிடமிருந்து ஒரு 9 mm pistol வாங்கி சுட்டார். வானத்தை நோக்கி 2 முறைகள் 5 வது தெருவிலிருந்து சுட்டார். 5 நிமிட இடைவெளியில் 5 முறைகள் 6வது தெருவிலிருந்தும், இரண்டு முறைகள் அதே தெருவிலிருந்தும் ஆக மொத்தம் 9 ரவுண்டுகள் சுட்டார். ஒருவருக்கும் காயமில்லை என்று அவர் கூறுகிறார். கூட்டம் தொடர்ந்து கல் எறிதலில் ஈடுபட்டார்கள். அதில் அவருக்கு இடது காலில் காயம் ஏற்பட்டது. ரத்தம் தொடர்ந்து வடிந்து கொண்டிருந்தது. அதன் பின்னர் அவர் நிலை மோசமாக இருப்பதை உணர்ந்தார். துப்பாக்கியால் சுடுமாறு காவலர் திரு.மதிவண்ணனிடம் (எ.த.சா.221) காவல் கண்காணிப்பாளர் சொன்னார். காவலர் திரு.மதிவண்ணன் முதலில் வானத்தை



INJURIED PERSON IN GH

நோக்கியும், அதன் பிறகு கூட்டத்தை நோக்கியும் சுட்டார். கூட்டத்தில் இருந்த ஒரு நபருக்கு ஒரு காயம் ஏற்பட்டு கீழே விழுந்தார். காயத்தின் காரணமாக அவர் இறந்து விட்டார். பின்னர் அவர் பெயர் காளியப்பன் என்று அடையாளம் காணப்பட்டது.

அண்ணாநகர் துப்பாக்கிச்சூடு பற்றி ம.சா.2 திரு.காளிமுத்து தெரிவித்தார். அண்ணாநகர் 6வது தெரு வழியாக சென்று கொண்டிருந்தார். 8 வது தெருவிலும் மக்கள் கூட்டம் இருப்பதை அவர் பார்த்தார். அவரது கூற்றுப்படி காவல்துறையினர் பின்னர் துப்பாக்கியால் சுட ஏற்பாடு செய்தனர். மக்களும் கல் எறிதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். சாட்சி நடந்து செல்லும்போது ஒரு சத்தம் கேட்டது. சாட்சிக்கு வலது தொடையில் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்து கொண்டிருந்தது. சாட்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

காயம்பட்ட மற்றொருவர் ம.சா.44 சுந்தர் என்கிற திருவீரபாகு, அவருக்கு 17 வயது. அவர் முன்னாள் ITI மாணவர். துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் துப்பாக்கிச்சூட்டு காயம் இடது மேல் தொடையில் ஏற்பட்டது. அவர் ஆரம்பத்தில் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். பின்னர் மதுரையில் உள்ள இராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு Vascular அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அங்கு அவர் 60 நாட்கள் உள்நோயாளியாக இருந்தார். தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தனது உறவினரின் குழந்தையின் உடல் நலம் பற்றி விசாரிப்பதற்காக அவர் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குச் சென்றபோது



HIGHER OFFICERS IN ANNA NAGAR

அவரை காவல்துறையினர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து அண்ணாநகர் நோக்கி விரட்டிச் செல்லும்போது அவருக்கு மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டது.